# தமிழ்ப் பெருமாட்டி

மலர் II. | 1936—மார்ச் | இதழ் 10.



N36.2.10
19944

## ாந்திமதி

வடுவூர் கே. துரைஸ்வாமி ஐயங்கார், B.A.,

## முதலாவது ஆண்டின் சஞ்சிகைகள்

முதலாவது ஆண்டில் வெளியான பகுதிகள் அடியில் வருமாறு புஸ்தக ரூபமாய் பைண்டு செய்யப் பெற்றிருக்கின்றன.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| நாவல் புஷ்பாங்கி அல்லது திடும்பிரவேச சம்சாரலப் பரதேசியர் 1, 2 பாகங்கள் ... | 3 | 8 | 0 |
| ...யா விளக்கம் ... ... ... | 0 | 8 | 0 |
| விக்ஞான வினவிடை ... ... ... | 0 | 8 | 0 |
| தேக தத்துவ சாஸ்திரம் ... ... | 0 | 8 | 0 |
| ஆகமொத்தம் | 5 | 0 | 0 |

எல்லாவற்றிற்கும் ஆர்டர் செய்தால், தபாற் செலவு இல்லாமல், ரூ. 5-க்கு எல்லா புஸ்தகங்களும் அனுப்பப்படும். ஒன்றை அல்லது சிலவற்றை மாத்திரம் வாங்கினால், தபாற் செலவு சேரும்.

இரண்டாவது ஆண்டில் புதிதாய் சந்தாதாரராய்ச் சேருவோருக்கு இவையாவும் ரூ. 3-8-0க்கு தபாற் செலவின்றி அனுப்பப்படும். ஏற்கனவே இரண்டாவது வருஷத்திற்கு சந்தாத் தொகையை அனுப்பிவிட்டவர்கள் ரூ. 3-8-0 மணியார்டர் செய்வது போதுமானது. இனிமேல் சேருவோர் இரண்டு வருஷங்களுக்கும் சேர விரும்பினால் ரூ. 5-8-0 மணியார்டர் செய்யவேண்டும்.

**ஜீவிய சந்தா ரூ. 20.** இதை அனுப்புவோருக்கு இந்த ஆசிரியரால் இனி வெளியிடப்படும் பத்திரிகைகளும், இதர புஸ்தகங்களும் ஒவ்வொன்று தபாற் செலவின்றி அனுப்பப்படும். இது நூலாசிரியருடைய ஆயுள்காலம் வரையில் செல்லுபடியாகும்.

## இனாம் புஸ்தகம்

இரண்டாவது வருஷத்திற்கு சந்தாத் தொகையை அனுப்புவோர், சந்தாத் தொகையோடு 8 அணா சேர்த்தனுப்பினால், ரூ. 1-8-0 விலை பெற்றதும், இந்நூலாசிரியரால் எழுதப்பெற்றதுமான இங்கிலாந்து தேச சரித்திர மொன்று இனாமாய் அனுப்பப்படும். நேரில் பணம் செலுத்துவோர் 4 அணா கொடுப்பது போதுமானது.

இந்த இனாம் புஸ்தகம் 1936ஹு மே மாதம் 31உ வரையில் சேருவோருக்கு மாத்திரமே கொடுக்கப்படும்.

ஏற்கனவே ரூ. 2 அனுப்பிவிட்டவர்கள் 8 அணாவுக்கு ஸ்டாம்பு அனுப்பினால், அல்லது, நேரில் 4 அணா செலுத்தினால், இந்த இனாம் புஸ்தகம் கிடைக்கும்.

## அத்தியாயம்—8

### சோடு ரிப்பேர் சொக்கன் சக்கிலி

**அதே இரவில்** உலகநாதன் தனது நண்பர்களுடன் **கண்ணு** மணி என்னும் தாசி வீட்டில் சீட்டாடிக்கொண் டிருந்தான். வளும் உலகநாதனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து அந்த ஆட்டத்ல் கலந்துகொண் டிருந்தாள். அவர்கள் ஆட்டத்தை கவனித்தடி இடையிடையில் லோகாபிராமமாகப் பல விஷயங்களைப்பற்றி சம்பாஷித்துக்கொண்டி ருந்தனர்.

**உலகநாதன் :**—(உல்லாஸமாக) என்ன கண்ணுமணி, இன்று நீ யாருடைய முகத்தில் விழித்தாய். எல்லாருடைய பைகளையும் ஒரே சுரண்டாய் சுரண்டுகிறாயே! நரி முகத்தில் விழித்தாயா?

**கண்ணுமணி :**—(சந்தோஷ முகமலர்ச்சியோடு) நான் இன்று நரி முகத்தில் முழிக்கவில்லை; புலி முகத்தில் விழித்தேன்!

**உலகநாதன் :**—(வியப்போடு) அந்தப் புலி உன்னை சும்மா எப்படி விட்டது?

**கண்ணுமணி :**—(சிரித்துக்கொண்டு) அது மற்றவர்களுக்குப் புலி; என்னிடத்தில் மாத்திரம் பசுமாதிரி இருக்கும்.

**உலகநாதன் :**—அடே! நீ சொல்வது ஆச்சரியமா யிருக்கிறதே! அந்தப் புலி இப்போது எங்கே இருக்கிறது?

**கண்ணுமணி :**—என்னோடு சந்தோஷமாய்ப் பேசிக்கொண் டிருக்கிறது—என்றாள்.

அதைக் கேட்ட உலகநாதனும், மற்றவர்களும் கலகலவென்று நகைத்து, "அடேடே! கண்ணுமணி பேச்சில் அசாத்திய கைகாரியா இருக்கிறாளே." என்றார்கள்.

**இன்னொருவன் :**—இன்று ஜெயம் கண்ணுமணிக்கு மாத்திரம் உண்டாகவில்லை. அவளுக்கு இந்தப் பக்கத்தில் இருக்கும் மாமாவுக்கும், ஜெயம் ஏற்பட்டுக்கொண்டுதா னிருக்கிறது. எங்கள் கையில் இருந்த பணமெல்லாம் தீர்ந்துபோய்விட்டது. ஆட்டத்தை இதோடு நிறுத்தவேண்டியதுதான்.

**உலகநாதன்:**—(கோபமாக) நாம் தோற்றிருக்கும் சமயத்திலா நிறுத்துகிறது? இன்னும் கொஞ்சநேரம் ஆடிப் பார்க்கலாம். கொடுத்த பணத்தில் கால் பங்காவது திரும்பி வராதா?

**மற்றவன்:**—(கடுகடுப்பாக) ஓ அவசியம் வரும். நீ மாத்திரம் இருந்து ஆடப்பா; நாங்கள் போகிறோம். நாங்கள் இன்னம் கொஞ்சநேரம் இருந்தால், கண்ணுமணி எங்களை சர்வாங்க க்ஷவரம் செய்துவிடுவாள்.

**கண்ணுமணி:**—(விளையாட்டாக) ஓ! அப்படியானால் என்னை அம்பட்டன் ஸ்தானத்தில் வைத்துவிட்டீர்களா! அதனால் உங்களுக்கு இரண்டணா லாபம் உண்டாகும் என்கிற எண்ணம்போலிருக்கிறது!

**மற்றவன்:**— நூற்றுக்கணக்கில் ரூபாயைப் பிடுங்கிக்கொண்டதற்கு உன் புண்ணியத்தில் இரண்டணாவாவது எங்களுக்கு லாபம் ஆகக்கூடாதா!—என்று கூறியபடி சீட்டுகளைப் போட்டுவிட்டு எழுந்திருக்க, அவனோடு இன்னும் சிலரும் சீட்டுகளைப் போட்டுவிட்டு எழுந்தனர்.

உலகநாதன், கண்ணுமணி, மாமா, அவருடைய தம்பி ஆகிய நால்வர் தவிர, மற்றவர்கள் எழுந்து முறைப்பாக வெளியில் போய் விட்டனர்.

**உலகநாதன்:**—(கண்ணுமணியைப் பார்த்து வெறுப்போடு) இன்றுதான் நான் உன்னுடைய சூதைத் தெரிந்துகொண்டேன். இனி நான் இந்த சீட்டையே கையால் தொடப்போவதில்லை.

**கண்ணுமணி:**— (வியப்படைந்தவள்போல் நடித்து) ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்? இதில் என்னுடைய சூது என்ன இருக்கிறது?

**உலகநாதன்:**—நான் கவனிக்கவில்லை என்று நினைத்துக் கொண்டு இவ்வளவு தைரியமாய்ப் பேசுகிறாயா? இப்போது நாம் எல்லோரும் ஆடியபோது, மடக்கின பிடிகளில் இருந்த சில பெரிய துருப்புகளை எவருக்கும் தெரியாதபடி நீ எடுத்து வைத்துக்கொண்டு மறுபடி போட்டு ஜெயித்ததை நான் பலதடவைகளில் கவனித்தேன். மற்றவர்களுக்கெதிரில் உன் சாயத்தை வெளுக்க வைக்க நான் விரும்பவில்லை. இது ஒரு விதமான சூது. இன்னொன்று என்னவென்றால், ஓர் ஆட்டத்தில், ஒரு பெரிய துருப்பை நீ வை-



திருந்து அதனால் ஒரு பிடி பிடித்தாய்; அதே சீட்டு என் கையிலுமிருந்தது. ஒவ்வொரு தினிசு சீட்டிலும் ஒவ்வொன்றுதானே இருக்கும்; இரண்டு எப்படி வந்தன? நீ இன்னொரு சீட்டுக்கட்டை மறைத்து வைத்துக்கொண்டு சமயத்திற்குத் தகுந்தபடி அதிலிருந்து சீட்டுகளை எடுத்து உபயோகிக்கிறாய் என்பதையும் நான் தெரிந்துகொண்டேன். ஆனால் மற்றவருக்குமுன், இதை நான் வெளியிட விரும்பவில்லை—என்றான்.

அதைக் கேட்ட கண்ணுமணியின் கண்கள் கலங்கின; முகம் வாட்ட மடைந்தது. அவள் பெரிதும் விசன மடைந்துவிட்டவள்போல் கண்ணீர் விடுத்து அப்படியே உலகநாதன்மேல் சாய்ந்து, "ஆகா! நீங்கள் இப்படி யெல்லாம் தப்பான சங்கதிகளைச் சொல்வது என்னுடைய பொல்லாத வேளையின் பலனேயன்றி வேறல்ல. இதில் இந்த விதமான சூதுகளைச் செய்யலா மென்பதை நான் இப்போதே உங்களிடம் தெரிந்துகொள்ளுகிறேன். தெரிந்து கொண்டாலும், இதைக் காரியத்தில் உபயோகிக்க, என் மனம் துணியாது! அப்படியே துணிந்தாலும், உங்கள் விஷயத்தில் சூதாய் நடந்துகொள்ள என் மனம் இசையவே இசையாது" என்றுகூறித் தேம்பித் தேம்பி அழுதபடி இடது கையால் மாமாவுக்கு ஏதோ சைகை காட்ட, அவளுக்கு அடுத்தாற்போல் இருந்த மாமா உடனே எழுந்துபோய், தனது சட்டைப்பைக்குள் வைத்துக்கொண்டிருந்த இன்னொரு சீட்டுக் கட்டை தூரத்தில் மறைத்து வைத்துவிட்டுத் திரும்பி வந்தார். அவர் அதை மறைத்ததை உலகநாதன் கவனிக்கவில்லை. உலகநாதன் சம்சயித்தபடியே, மாமா இன்னொரு சீட்டுக் கட்டை மறைத்து வைத்திருந்து, சமயத்திற்குத் தக்கபடி பெரிய துருப்புகளை அதிலிருந்து எடுத்து, கண்ணுமணிக்குக் கொடுக்க, அவைகளை அவள் வாங்கி, சாமர்த்தியமாய் உபயோகப்படுத்தி, பல ஆட்டங்களில் வெற்றி பெற்றாள் என்பதை எவரும் சுலபத்தில் யூகித்துக்கொள்ளலாம்.

உலகநாதன் அவளுடைய மோக வலையில் சிக்கி இருந்தவனாதலால், அவள் கண்ணீர் விட்டு அழுததைக் கண்டு அதை சகியாதவனாய், "சரி; இதற்காக நீ ஏன் அழுகிறாய்! நான் பார்த்ததைச் சொன்னேன்! அது உனக்குத் துன்பகரமாய் இருந்தால் இனி சொல்லவில்லை. நீ அழாமல் நிமிர்ந்திரு" என்றான்.

**கண்ணுமணி :**—மறுபடியும் நீங்கள் என்னை மோசக்காரி என்றே மதித்துப் பேசுகிறீர்களே. இதோ நான் எழுந்து என் இடுப்புப் புடவையையெல்லாம் உதறிக் காட்டுகிறேன். என்னிடம் வேறு ஏதாவது சீட்டு இருக்கிறதா என்று பாருங்கள்—என்று கூறி ஆத்திரத்தோடு எழுந்து தனது புடவையை உதறி, இடுப்புக் கட்டையும் தளர்த்தி அசைத்துக் காட்டினுள்.

அதைக் கண்ட உலகநாதன் திகைப்படைந்து, "அடாடா! நான் உன்மேல் தப்பாக சம்சயப் பட்டுவிட்டேன்போல் இருக்கிறதே! ஒருவேளை தற்செயலாகவே சீட்டுக்கட்டில் சில ஜாதிகளில் அதிகப்படியான சீட்டுகளும், சிலவற்றில் குறைவாகவும் இருந்தாலும் இருக்கலாம். அது எப்படியாவது இருந்து தொலையட்டும்; என் பணம் போனதைப்பற்றிக் கவலைப்படவில்லை. அதெல்லாம் உனக்கேதான் வந்தது. ஆகையால் இப்போது நீ அழாமல் இருப்பதே போதுமானது" என்று அவளை சமாதானப் படுத்தினுன்.

**கண்ணுமணி :**—(கொஞ்சலாக) யோக்கியமான ஒரு மனிதர் மீது நீங்கள் அக்கிரமமான அவதூறு சொன்னதற்கு உங்களுக்கு நான் தண்டனை கொடுக்கப்போகிறேன்.

**உலகநாதன் :**—என்ன தண்டனை?

**கண்ணுமணி :**—உங்களுக்கு 25 ரூபா அபராதம் விதித்திருக்கிறேன். அதை இன்னம் ஒரு மணி நேரத்திற்குள் செலுத்தாவிட்டால், கடுங்காவல் தண்டனை கிடைக்கும்.

**உலகநாதன் :**—சரி; உன் விருப்பப்படியே அபராதத்தை செலுத்துகிறேன். அதற்குமேல்?

**கண்ணுமணி :**—(புன்னகை செய்து) அதற்குமேல் கொஞ்சம் பாட்டுக் கச்சேரி நடத்தவேண்டு மென்று எஜமானியம்மாளுக்கு சித்தம் உண்டாகிறது.

**உலகநாதன் :**—ஓ! நடத்தலாம். ஆனுல், எனக்கு சங்கீதத்தில் ஞானம் வண்டிக் கணக்கில்தான் இருக்கிறது! அதை மரக்கால் கொண்டுதான் அளக்க வேண்டும். நீ முதல் பாட்டைப் பாட ஆரம்பிக்கும்போதே நான் தூங்கிப்போவது நிச்சயம். உனக்கு அதிக பிரயாசை ஏற்படாது—என்முன்.



கண்ணுமணி சிரித்துக்கொண்டபடி மாமாவின் முகத்தைப் பார்க்க, அவர் சற்றுதூரத்திலிருந்த அவளுடைய பிட்டிலைப் பெட்டியைத் திறந்து, அதிலிருந்த பிட்டிலை எடுத்து வந்து கொடுத்துவிட்டு, "எனக்கு வெளியில் கொஞ்சம் அலுவல் இருக்கிறது. நான் போய்வருகிறேன்" என்று கூறிவிட்டு, அருகிலிருந்த அறைக்குள் நுழைந்து தமது உடைகளை மாற்றிப் புதுமாதிரியாகத் தம்மை அலங்கரித்துக்கொண்டு வெளியில் போய்விட்டார். அவருடைய தம்பி, அவ்விடத்தை விட்டு, வேருேர் அறைக்குப் போய் ஏதோ அலுவலில் தனது கவனத்தைச் செலுத்திக்கொண்டிருந்தான்.

கண்ணுமணி பிட்டிலை எடுத்து வைத்துக்கொண்டு ஒரு பாட்டைப் பாடி முடித்தபின் இன்னெரு பாட்டைத் துவக்க இருந்த காலத்தில் எவரோ நடையில் வந்த காலடி ஓசை கேட்டது. உடனே இருவரும் தாழ்வாரப் பக்கம் பார்க்க, அடுத்த நிமிஷம் ஒருவர் அங்கே வந்து தோன்றினர்.

அவரைக் கண்ட உலகநாதன் திடுக்கிட்டெழுந்து, "ஓகோ! நீங்களா! வாருங்கள்; வாருங்கள். இப்படி உட்காருங்கள்" என்று கூறி ஒரு நாற்காலியைக் காட்ட, அவர் நாற்காலியில் உட்கார்ந்துகொண்டார். அப்போது கண்ணுமணி மறைவில் போய் நின்ருள்.

**உலகநாதன் :**—எங்கே இவ்வளவு தூரம் வந்துவிட்டீர்கள்?

**மற்றவர் :**—ஒரு காரியமாய் உன்னைத் தேடிக்கொண்டு வந்தேன்.

**உலகநாதன் :**—ஓ! என்ன காரியம்?

**மற்றவர் :**—எனக்கு சில தகவல்கள் தெரியவேண்டும். உன்னிடம் கேட்டால், அவசியம் தெரியுமென்று வந்தேன்.

**உலகநாதன் :**—என்ன தகவல் தெரியவேண்டும்?

**மற்றவர் :**—இந்த ஊருக்கு இப்போது ஒரு முக்கியமான ஆசாமி வந்திருக்கிருன்; அவனுடைய பெயர் திகம்பரசாமியார் என்று சொல்லுகிருர்கள். அவனைப்பற்றிய தகவல்களை உன்னிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளலாமென்று வந்தேன்.

**உலகநாதன் :**—அவனைப்பற்றி எனக்கு எந்தத் தகவலும் தெரியாதே! அவசியமானுல் நான் விசாரித்துச் சொல்லுகிறேன்.

மற்றவர் :—சரி; விசாரித்து நாளையதினம் காலை பத்து மணிக்குள் சொன்னால், அதற்காக உனக்கு நான் ஏதாவது பணம் கொடுத்துவிடுகிறேன்.

உலகநாதன் :—சரி; அப்படியே செய்கிறேன். எனக்கு இப்போது அவசரமாய் 25 ரூபா வேண்டும். அதைக் கொடுத்தால், உதவியா யிருக்கும். பின்னால் நாம் எந்தக் கணக்கிலாவது அதைக் கழித்துக்கொள்ளலாம்— என்றான்.

உடனே மற்றவர் இரண்டொரு நிமிஷம் யோசனை செய்த பிறகு தமது மணிபர்ஸை எடுத்து, அதிலிருந்து 25 ரூபாய்க்கு நோட்டுகளை எடுத்துக் கொடுத்துவிட்டு, "சரி; நான் போகிறேன். நான் சொன்ன விஷயம் கவனத்தில் இருக்கட்டும்" என்று கூறியபடி எழுந்தார்.

உடனே உலகநாதன், "நான் இப்போது இங்கே இருக்கிறேன் என்பது உங்களுக்கு எப்படித் தெரிந்தது?" என்றான்.

மற்றவர், "ஞானசக்தியால் எல்லா விஷயங்களையும் தெரிந்துகொள்ளும் வல்லமையுடைய எனக்கு இது மாத்திரம் தெரியாமல் போய்விடுமா" என்று கூறிவிட்டு வெளியில் போய்விட்டார்.

உடனே கண்ணுமணி அங்கே வர, உலகநாதன் சந்தோஷ முகமலர்ச்சியோடு அவளைப் பார்த்து, "பார்த்தாயா என் சாமர்த்தியத்தை! அபராதம் போட்டதை உடனே செலுத்த வேண்டுமென்று நான் என் சிநேகிதரை மனதால் நினைத்தேன். அதைத் தெரிந்துகொண்டு அவர் உடனே வந்து பணத்தைக் கொடுத்துவிட்டுப் போகிறார்" என்று கூறியபடி பணத்தை அவளிடம் கொடுக்க, அவள் அதை உடனே வாங்கிக்கொள்ளாமல், "அடாடா! நான் விளையாட்டாகவல்லவா சொன்னேன்! அதை நீங்கள் உண்மையென்று எண்ணிக் கொண்டீர்களா!" என்றாள்.

உலகநாதன்:—உனக்கு ஏதாவது அவசரச் செலவிற்குப் பணம் தேவையாயிருக்கலாம். அதற்காக அந்த மாதிரி கேட்டிருப்பாய். உன் மன நிலைமை எனக்குத் தெரியாதா? பணத்தை எடுத்து வை—என்றான்.

உடனே கண்ணுமணி பணத்தை வாங்கிக்கொண்டு போய் உள்ளே வைத்துவிட்டு வந்து மறுபடி பிட்டிலை எடுத்து வைத்துக்கொண்டு, இரண்டாவது பாட்டைப் பாடத் துவக்கினாள். உலகநாதன், "நீ பாடினது போதும். உன் பாட்டினால் எனக்கு சந்தோஷம் உண்டாகவில்லை. அநாவசியமாய் நீ ஏன் வீண்பாடு படுகிறாய்" என்றான்.



உடனே அவள் பிட்டிலை தூர வைத்துவிட்டு, "இப்போது வந்தவர் யாரைப்பற்றியோ தகவல் தெரியவேண்டுமென்றாரே! யாரைப்பற்றி?" என்றாள்.

உலகநாதன் :—திகம்பர சாமியார் என்று யாரோ ஒருவன் வந்திருக்கிறானாம். அவனைப்பற்றி விசாரிக்கச் சொன்னார்.

கண்ணுமணி :—அவர் யார்? இந்தப் பெயரை நான் இதற்கு முன் கேள்விப்பட்டிருக்கிறதுபோல் ஞாபகம் உண்டாகிறதே!

உலகநாதன் :—அவர் யார் என்பது எனக்குத் தெரியவில்லையே! நீ எப்போது கேள்விப்பட்டாய்? அவர் யார்?

கண்ணுமணி :—அவர் ஒரு பெரிய போலீஸ் அதிகாரி என்று யாரோ சொன்னதாக நினைவுண்டாகிறது.

உலகநாதன் :—அவரைப்பற்றி இன்னம் ஏதாவது சங்கதி உனக்குத் தெரியுமோ?

கண்ணுமணி : - தெரியாதே!—என்றாள்.

அவ்வளவோடு அவர்களுடைய சம்பாஷணை முடிந்தது. அதற்குமேல் சுமார் கால் மணிவரையில் அவர்கள் வேறு ஏதோ விஷயத்தை கவனித்துக்கொண் டிருக்க, முன்னர் வந்த அதே மனிதர் மறுபடியும் உலகநாதனைக் கூப்பிட்டுக்கொண்டு அங்கே வந்துசேர்ந்தார்.

உலகநாதன் வியப்போடு, "ஏன், என்ன வேண்டும்" என்றான்.

வந்தவர் :—நான் குறித்த ஆசாமி இந்த ஊர் ஆஸ்பத்திரி டாக்டர் ராமாராவுடைய ஜாகையில் இருக்கலாம் என்று நான் சந்தேகிக்கிறேன். ஆகையால் நீ இப்போதே புறப்பட்டுப் போய், தந்திரமாய் ராமாராவிடத்திலோ, மற்றவரிடத்திலோ பேசி, அவனைப்பற்றி என்னென்ன தகவல்களைத் தெரிந்துகொள்ள முடியுமோ அவைகளையெல்லாம் தெரிந்துகொண்டு வா.

உலகநாதன் :—இப்போது அகாலவேளை ஆய்விட்டதே! அது அவ்வளவு அவசரமாகத் தெரியவேண்டுமா?

வந்தவர் :—ஆம். அவசரமாகத்தான் தெரியவேண்டும். எல்லாவற்றிற்கும் நீ போய் முயற்சி செய்துபார். அவசர நிமித்தம் சாமியாரைப் பார்க்கவேண்டுமென்று ராமாராவிடம் சொல்லி, அதற்கு மேல் தகவல்களை விசாரி.

உலகநாதன் :—அவர் என்னை சாமியாரிடம் உடனே கொண்டு போய் விட்டால், நான் என்ன செய்கிறது ?

மற்றவர் :—சாமியார் இப்போது அங்கே இல்லை. ஆகையால், அப்பேர்ப்பட்ட இக்கட்டு நேராது. சீக்கிரம் போ——என்றார்.

உடனே உலகநாதன் கண்ணுமணியிடம் சொல்லிவிட்டு மற்றவருடன் தெருவையடைந்தான்.

உடனே மற்றவர், "சரி ; நீ விஷயங்களைத் தெரிந்துகொண்டு நேராக என்னுடைய வீட்டிற்கே வா" என்று கூறிவிட்டு, அவ்விடத்தை விட்டுச் செல்லத் தொடங்கினார். உடனே உலகநாதன் ராமாராவின் வீட்டை நோக்கிப் போய்விட்டான். அவ்விடத்தை விட்டுச் சென்ற மற்றவர் சிறிது தூரம் போவதுபோல் போக்குக் காட்டி மறுபடி திரும்பிவந்து கண்ணுமணியின் வீட்டிற்குள் நுழைந்துவிட்டார்.

இது நிற்க, அங்கிருந்து சென்ற உலகநாதன் ராமாராவிடம் சென்று, அவருடன் பேச முயன்றது சிறிதும் பயன் தராமல் போகவே, அவன் அந்த இரவைப் போக்கிவிட்டு, மறுநாளைய காலையில் திரும்பவும் ராமாராவிடம் போய்க்கொண்டிருந்தான். அவன் தாமோதர முதலியாருடைய வீட்டு வாசலின் வழியாகச் சென்ற சமயத்தில், ஒரு போலீஸ் ஸப்-இன்ஸ்பெக்டரும், இரண்டு ஜெவான்களும் அந்த வீட்டிற்குள் நுழையவே, அதைக் கண்ட உலகநாதன் ஆச்சரியமடைந்து, அதன் காரணத்தைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று நினைத்து, எதிர்த்த வீட்டுப் பக்கம் போய் திண்ணையில் உட்கார்ந்து கவனிக்கத் தொடங்கினான்.

வீட்டிற்குள் நுழைந்த போலீஸார் சுமார் அரைமணி காலம் கழித்து வெளியில் வந்தனர். ஒரு ஜெவான் மாத்திரம் அந்த வீட்டு வாசலில் நிற்க, மற்ற இருவரும் போய்விட்டனர். அங்கே நின்ற ஜெவான் அந்த வீட்டின் திண்ணையில் உட்கார்ந்து கொண்டான்.



அப்போது தாமோதர முதலியாருடைய வேலைக்காரனான வேலாயுதம் வீட்டிற்குள்ளிருந்து வெளியில் வந்து, வீதிக்குப் போக முயன்றான். திண்ணையிலிருந்த ஜெவான். "டேய், நில்லு; போவாதே" என்றான்.

வேலாயுதம் :— (அவனுக்கருகில் வந்து) ஏம்பா நிக்கச் சொல்றே ?

ஜெவான் :—எங்கனே போறே ?

வேலாயுதம் :—நானு அம்மாகிட்ட போயிச் சங்கதியைச் சொல்லி, அவுகளை இட்டாறணும். அதுக்காவப் போறேன்.

ஜெவான் :—நானு ஒருத்தன் முட்டுக்கல்லு கணக்கா வழி மறிச்சான் குந்திக்கிட்டுக் கிடக்கறேன். அது கண்ணுலெ படலியா ! ஆரும் உள்ளெயும் போவக்கூடாது, வெளியெயும் போவக் கூடாது. எசமான் உத்தரவு.

வேலாயுதம் :—ஏம்பா போவக்கூடாது? நான் என்னத்தை யாச்சும் திருடிக்கிட்டுப் போறேன்னு நினைச்சுட்டியா ?

ஜெவான் :—நீ திருடிக்கிட்டு தான் போயேன் ! அப்ப என்ன கிடைக்குமுங்கறது ஒடனே தெரியும். இந்த ஊட்டம்மா இருக்கற எடந்துக்குத்தான் ஸப்-இனிஸ்பேட்டர் எசமான் போயிருகாக. அம்மாளுக்கு சேதி சொல்ல நீ போவவேண்டியதில்லை. ஆரையும் வெளியெ உடவாணாம்னு எசமான் உத்தரவு பண்ணியிருக்காவ. வண்டியெத் திருப்பு தம்பீ.

வேலாயுதம் :—என்ன அண்ணே, என்னை வெளியெ உடக் கூடாதுன்னு எசமான் சொன்னாகளா ?

ஜெவான் :—ஆமாப்பேன் ! உன்னைத்தான், உங்கப்பனையும் தான், உங்க பாட்டனையுந்தான். ஒரு பேசு சொன்னா, அதோடெ நல்லபுள்ளையாட்டம் அடங்கிப் போவணும் ; சொம்மாத் தொண தொண தொத்தொணண்டா, எதிராளிக்குக் கோவம் வருண்டறது தெரியாதா ! நானு சொல்றது உன் மண்டையிலெ உறைக்கமாட்டேங்குதா ?

வேலாயுதம் :—என்னப்பா சரட்டை ரொம்ப ஓட்டறே ! நானும் ஒரு ஸப்-இனிஸ்பேட்டர் எசமான்கிட்ட வேலைபாக்கறவந் தான் அண்ணே ! எனக்கும் கொஞ்சூண்டு தெரியுங்கறேன் உங்க

றால்சு. நானு வெளியே போவக்கூடாதுன்னு எசமான் உனக்குக் குடுத்த உத்தரவைக் காட்டினா, நானு நீ சொல்றபடி நின்னுக்கறேன். காட்டு பாக்கலாம்.

**ஜெவான் :**—இதுக்கு எழுத்துமூலமான உத்தரவு வோணும்னு எந்த சட்டத்துலெ சொல்லுது தம்பீ! இதுக்கெல்லாம் வாய் உத்தரவே போதுண்டறது உனக்குத் தெரியல்லெ. நீ எல்லாத்தியும் கரைகண்டுட்டவன் கணக்கா ஓங்கிப் பேசுறியே!

**வேலாயுதம் :**—நானு ஓங்கிப் பேசல்லேப்பா; தணிஞ்சுதான் பேசறேன். இதுக்கு வாய் உத்தரவு போதுண்டுறியே! யாரோடெ வாய் உத்தரவு? உன்னோடெ வாய் உத்தரவா?

**ஜெவான் :**—ஆமா! அப்படியேதான் வச்சுக்கயேன்! நானு போலீஸ் அதிகாரியில்லியா?

**வேலாயுதம் :**—உன் உத்தரவை மீறி நான் இப்ப போப் போறேன்! நீ என்ன செய்யப்போறே?

**ஜெவான் :**—(நயமாக) அடெ பைத்தியக்காரா! என்னப்பா நீ இப்பிடி முறண்டுறே! நல்லமாதிரியாப் போப்பா! அதுலெ காரியம் ஆவறாப்பலெ மத்தத்துலெ ஆவாதப்பேன். ஒங்கிட்ட நானு ஒரு சேதி சொல்றேன். அதை வெளியே உட்டுடுவியோ?

**வேலாயுதம் :**—(ஆவலோடு) என்னப்பா சொல்லப் போறே? சொம்மா சொல்லப்பா. நானு ஏன் வெளியே உட்றேன்.

**ஜெவான் :**—(அவனைத் தலைமுதல் கால்வரையில் ஏற இறங்கப் பாத்துவிட்டு) நம்ப ஸப்-இனிஸ்பெட்டர் எசமான் இருக்காகளே அவுக, ரொம்ப நல்லவங்க. அவுக மாதிரி தங்கமான மனிசரைப் பாக்க முடியாது?

**வேலாயுதம் :**—இதானா வெளியே சொல்லாத ரகசியம்?

**ஜெவான் :**—இல்லேப்பா; பாக்கறத்துக்கு அவுக ரொம்பக் கருக்காத்தான் இருப்பாக. ஆனா, சமயத்துக்குத் தகுந்தாப்பலெ நடந்துக்கறத்துலெ அவுக ரொம்ப கெட்டிக்கார ஐயா!—என்று கூறித் தன் மீசையை ஒரு தடவை முறுக்கிவிட்டுக்கொள்ளுகிறான். வேலாயுதம் அதற்கு மறுமொழி கூறாமல் தலையைச் சொரிந்து கொண்டு நிற்கிறான்.



**ஜெவான் :**—அவுக கடைசியாப் போனப்ப, என் காதோடெ ஒரு சேதி சொல்லிட்டுப் போனாகளே! அதை நீ கவனிக்கல்லே?

**வேலாயுதம் :**—ஆமா, கவனிச்சேன். சங்கதியெ நல்லாத்தான் சொல்லேன்.

**ஜெவான் :**—கவனிச்சிருந்தா ஏன் கேக்கறே! எட்டணான்னு அவுக சொன்னது உங்காதுலெ உளுந்திருக்கணுமே! அம்பிட்டுத் தான் தம்பி; அதியமில்லே; மனுசரெப் பாத்த ஒடனே ஏளை, பணக்காரன்ங்கறது தெரிஞ்சுபூடும். அவுகளோடே தகத்துக்கு எட்டணா ரொம்பச் சின்னதில்லியா?—என்று கூறியபடி கண்களைச் சிமிட்டியபடி மீசையை இன்னொருதரம் முறுக்கிவிட்டுக் கொள்கிறான்.

**வேலாயுதம் :**—(வியப்போடு தலையைச் சொரிந்துகொண்டபடி) என்னா அண்ணே என்னமோ பெரிய ரகஸியத்தைத்தான் சொல்லிப்புடப் போறியாங்காட்டியும்னு பயந்துட்டேன். அப்பிடியானா, உங்க சப்-இனிஸ்பெட்டர் ஐயா எங்கிட்ட எட்டணா லெஞ்சம் கேக்கச் சொன்னாகளா?

**ஜெவான் :**—அடெ பைத்திக்காரா! அதுக்கு அப்பிடியா அர்த்தம் பண்ணறது! அவுக இருந்திருந்து ஒங்கிட்டெயா எட்டணா லெஞ்சம் வாங்கப் போறாக. நீ பெரிய குபேரன்.

**வேலாயுதம்:**—அப்பிடியானா, நீ என்னாத்துக்கு ஏங்கிட்டக் கேக்கணும்? என்னாண்ணே நீ தக்கடி வித்தையெல்லாம் காட்டறே!

**ஜெவான் :**—(எதிர் வீட்டுத் திண்ணையில் இருந்த உலகநாதன் பக்கம் பார்த்து வாயால் சிட்டியடித்தபடி) சரி; தம்பீ, நீ அவுக சங்கதியை உட்டுடு. எனக்குத்தான் ஒரு எட்டணா கடங்குடேன். நீ மெதப்புப் புள்ளீண்டறது தெரிஞ்சுதான் நான் கேக்கறேன். நீ முளிக்கறத்தைப் பாத்தா, இல்லேம்பெ போலிருக்குதே! என்னப்பா நீ இம்பிட்டு லோபியா இருக்கறியே! மனுசனுக்கு கொஞ்சூண்டானச்சும் ஈவு இரக்கம் தயை தாச்சணை இருக்கவாணாமா?

**வேலாயுதம் :**—(அசட்டுப் புன்னகையோடு) எங்கிட்ட ஏதப்பா எட்டணா?

**ஜெவான் :**—(கடு கடுப்பாக) அடெ தரித்திரப்பூடெயே! காலங்காத்தாலே நாஷ்தா பண்ணாமெ வவுறு கிள்ளுது; ஒங்கிட்ட

கேட்டா, இல்லேன்னு நச்சுவாக்குக் குடுக்கறியே! இன்னமே ஆருக்கிட்டக் கேட்டாலும், விடியாதுபோ லிருக்குதே தம்பீ. பாரப்பா மடியை. நாலணாக்கூடவா ஒங்கிட்ட இல்லே! சரியா எட்டடி ஒசரம், மூணடி அகலம் இருக்கிறியே! இம்பிட்டுப் பெரிய மனிசன்கிட்ட நாலணாக்குக் கூடவா வக்கில்லே!

வேலாயுதம் :—அடெ எம்பா, என்னைப் போட்டு சொம்மா செனைபண்றே! எங்கிட்ட ஒரு செல்லாக்காசுகூட இல்லே அண்ணே! நீ எதாச்சும் குடுத்தா வாங்கிக்கலாம்னு நானு ரோசனை பண்ணறேன்.

ஜெவான் :— அப்பிடி வா தம்பீ வளிக்கு; அதுக்காவத்தான் இந்நேரம் ஒன்னோடெ வாயைக்கிண்டினேன்! பாவம், அட்டுப் புடிச்ச சொக்காயோடெ இருக்கறானே, இவங்கிட்ட காசு இருக்குதான்னு பாத்துட்டு, எதாச்சும் குடுத்து உதவலாம்னு நினைச்சேன். ஒனக்கு இப்ப எம்பிட்டு ரூபா வோணும் தம்பீ. கேளு, சொம்மா பயப்படாதெ—என்று கூறி சிட்டியடித்து மீசையை முறுக்கியபடி எதிர்வீட்டுத் திண்ணையில் எதையோ கவனிப்பவன்போல் நடித்தான்.

வேலாயுதம் :—(சிரித்த முகத்தோடு) நல்ல கெட்டிக்காரன் அப்பா நீ! ஒங்கிட்ட அம்பிட்டு ரூபா இருக்கறப்ப, காலங்காத்தாலெ நாஷ்தா பண்ணாமெ எம்பா வந்தே? கடன் குடுக்கத்தான் ஒம்பணம் ஒதவுமாக்கம். நாஷ்தா பண்ண அசலான் காசு ஒணும் போலிருக்குது. இதுதான் பொழைக்கற எத்து; செத்தா பொழைக்கமாட்டே அண்ணே!—என்று கூறியபடி வெளியில் நடக்க முயல, ஜெவான் குபீரென்று பாய்ந்து, "அடெ இரப்பா ஒன்னை சோதனைபாத்து உட்றேன்" என்று கூறியபடி அவனுடைய சட்டைப்பைகள், இடுப்பு முதலியவைகளைத் தடவிப் பார்த்தபின், "சரி; அறுத்துக்கொ" என்றான்.

வேலாயுதம் புன்சிரிப்போடு, "என்னா அண்ணே, கட்டிப் போட்டிருக்கற களுதையா நான்; அறுத்துக்கிட்டு ஒடச்சொல்றியே!" என்று கூறியபடி தெருவை யடைந்து அப்பால் போய் மறைந்துவிட்டான்.

ஜெவான் வேலாயுதத்தின் சட்டைப்பைகளை ஆராய்ந்த காலத்தில், அரையணா அளவில் கோழி முட்டை வடிவமாய்



அட்டைபோல் கையில் அகப்பட்ட ஒரு பொருளை அவன் விரல்களில் இடுக்கியபடி எடுத்து வைத்துக்கொண்டானதலால், வேலாயுதம் போனபின் அதை எடுத்து வைத்துக்கொண்டு வியப்போடு உற்றுப் பார்த்தான்.

அதுவரையில் எதிர்வீட்டுத் திண்ணையில் இருந்த உலகநாதன் மெல்ல எழுந்து ஜெவானிடம் வந்து, அவன் வைத்துப் பார்த்துக்கொண் டிருந்த பொருள் என்னவென்று கவனித்தபடி புன்னகை செய்து, "போலீஸ்காரரே! என்ன அது? அவ்வளவு கவனமாய்ப் பார்க்கிறீர்களே!" என்றான்.

ஜெவான் :—(வியப்போடு உலகநாதனைப் பார்த்து) இது ஒரு சின்னப் படம். இதுலெ இருக்கறது ஆருன்னு தெரியிதுங்களா ஒங்களுக்கு?

உலகநாதன் :— இது அடிக்கடி பார்த்த முகமா யிருக்கிறதே!

ஜெவான் :—இவருதான் இந்தூட்டுலெ இருக்கற தாமோதர மொதலியாரு.

உலகநாதன் :—ஓகோ! சரிதான்! அதிருக்கட்டும். எனக்கு உம்மால் ஒரு வேலை ஆகவேண்டும். செய்கிறீரா?—என்றான்.

அப்போது அந்த வீட்டிற்கெதிரில், "ஜோடு ரிப்பேர் ஸாமீ! பூட்ஸ் ரிப்பேர் ஸாமீ!" என்று கதறிக்கொண்டு ஒரு சக்கிலியன் பிரஸன்னமானான்.

அவன் போலீஸ்காரனைப் பார்த்து, "ஸாமீ, உங்க செருப்புக் குதி தேஞ்சுபோச்சு ஸாமீ; குடுங்க ஸாமி, நல்ல குரோம் லெதர் வச்சு, புச்சு மாதிரி தச்சுக் குடுக்கறேன்" என்றான்.

ஜெவான் :—வாணாண்டா போடா நாயே—என்றான்.

சக்கிலி :—(மிகப் பணிவாகக் கும்பிடு போட்டு) போத்தானு நாயனா, பீதெ வாடுமீத கோபஞ்செய ஒத்து தண்ட்றீ!—என்று கூறியபடி அப்பால் போய் அந்த வீட்டின் குறட்டோரமாய் வீதியில் உட்கார்ந்துகொண்டு, தன் பையை எடுத்து எதிரில் வைத்து, அதற்குள் கையை விட்டு எதோ பொருளைத் தேடிக் கொண் டிருந்தான்.

ஜெவான் :—(உலகநாதனைப் பார்த்து) என்னா வேலை ஆவணும் சாமி என்னாலே ஒங்களுக்கு?

உலகநாதன் :—திகம்பர சாமியார் என்ற யாரோ ஒரு போலீஸ் அதிகாரி இந்த ஊருக்கு வந்திருப்பதாகச் சொன்னார்கள். ஓர் அவசர காரியமாய் அவரை நான் பார்க்கவேண்டும். அவர் எங்கே ஜாகை வைத்துக்கொண் டிருக்கிறார் என்பது உங்களுக்குத் தெரியுமா?

ஜெவான் :—எனக்குத் தெரியாதுங்களே. ஏன்? என்னா அலுவலா அவரைப் பாக்கணும்?

உலகநாதன் :—காரணத்தைப் பின்னால் சொல்லுகிறேன். அவர் எங்கே இருக்கிறார் என்பதை விசாரித்துச் சொல்ல முடியுமா?

ஜெவான் :—ஓ! அதுக்கென்ன! ஆவட்டுங்க. காலங்காத்தாலெ சப்-இனிஸ்பெட்டர் எசமான் என்னை இஞ்சே இட்டாந்துட்டாக. அதுனாலே, நாஷ்தா பாக்க முடியாமெப் போச்சு. ஏதாச்சும் பைலே காசிருந்தா, குடுக்கறீங்களா? பக்கத்து ஓட்டல்லெ பாத்துக்கிட்டு, நீங்க கேட்ட சங்கதியை வெசாரிச்சுச் சொல்றேன்.

உலகநாதன் :—அப்படியானால், நீ இங்கே காவல் இருக்கவேண்டாமா?

ஜெவான் :—அதெல்லாம் ஒண்ணுமில்லீங்க. நானு நேத்து ராவெல்லாம் பீட்டு அலுவலெ கவனிச்சேன். காத்தாலே ஊட்டுக்குப் போனப்ப சப்-இனிஸ்பெட்டர் எசமான் வந்தாக. அவரோடெ வந்தா, என்னாச்சும் கெடைக்குமாங் காட்டியும்னு வந்தேன். அதனாலே சொம்மா இப்பிடி ஒக்காந்தேன்.

உலகநாதன் :—சரி; நான் இதோ உனக்கு நான்கணா கொடுக்கிறேன். நீ காப்பி சாப்பிட்டுவிட்டு, திகம்பர சாமியார் எங்கே ஜாகை வைத்துக்கொண் டிருக்கிறான், என்ன காரணத்திற்காக இந்த ஊருக்கு வந்திருக்கிறான் என்பதை விசாரித்து, என் வீட்டிற்கு வந்து சொல்லிவிட்டுப் போகவேண்டும்—என்று கூறி, தன் வீட்டின் விலாசத்தையும் தெரிவித்தான்.

ஜெவான் அதற்கு இணங்க, உடனே உலகநாதன் நான்கணா பணத்தை எடுத்து அவனிடம் கொடுத்துவிட்டு அப்பால் போய் விட்டான். உடனே ஜெவானும் எழுந்து, அதே தெருவில் இருந்த ஒரு சாராயக் கடைக்குள் நுழைந்து உள்புறத்தில் சுமார் அரை மணி காலம் இருந்துவிட்டு வெளியில் வந்தான். அவன் உள்ளே



போனபோது, தன் கால் செருப்பை சாராயக்கடையின் நடையில் விட்டுவிட்டுச் சென்றதனால், மறுபடி வந்து அதைப் போட்டுக் கொண்ட காலத்தில், ஒரு முக்கியமான வார் அறுந்துபோயிருந்தது. அதனால் நிரம்பவும் அதிருப்தி யடைந்த ஜெவான் இரண்டு செருப்புகளையும் எடுத்துக் கையில் பிடித்துக்கொண்டு, அடுத்த தெருவிலிருந்த தனது வீட்டிற்குப் போய்ச் சேர்ந்தான்.

அவன் அந்த வீட்டிற்குள் நுழைந்ததற்கு சற்று நேரத்திற்குப் பிறகு, "ஜோடு ரிப்பேர் ஸாமீ" என்று ஒரு சக்கிலியன் அதட்டிக் கூவ, அதைக் கேட்ட ஜெவான் உடனே தடதடவென்று வெளியில் ஓடி வந்து பார்க்க, தாமோதர முதலியாருடைய வீட்டின் வாசலில் காணப்பட்ட அதே சக்கிலியன் இங்கும் காணப்பட்டான். தான் அவனை மிரட்டி அவனிடம் இலவசத்தில் செருப்பை சரிப்படுத்திக்கொள்ள வேண்டுமென்று ஜெவான் தீர்மானித்துக்கொண்டான்.

ஜெவான் :—டேய், சக்கிலி, இங்கிட்டு வாடா; ஒனக்கு வேலை தர்றேன்.

சக்கிலி :—தாங்க ஸாமீ; வேலை செய்யக் காத்திருக்கேன் ஸாமீ. என்னா வேலைங்க? பூட்ஸ் ரிப்பேரா?

ஜெவான் :—(அதட்டலாக) டேய், சக்கிலீ, என்னை அடையாளம் தெரியுதா ஒனக்கு?

சக்கிலி :—கொஞ்ச நேரத்துக்கு மின்னெ பக்கத்துத் தெருவுலெ பாத்தமாதிரி இருக்குதுங்க.

ஜெவான் :—(வியப்போடு) அடெ! என்னையா நீ பாத்தே! நீ பெரிய புளுகுமூட்டைக்காரனா யிருக்கிறியேடா! நானு ஊட்டை உட்டு வெளியே போயி மூணுநாளாவுதேடா?

சக்கிலி :—அப்பிடியானா, ஒங்க அடையாளம் தெரியுதான்னு கேட்டீங்களே ஸாமீ? இதுக்குமுன்னெ என்னை எப்ப பாத்தீங்க ஸாமீ?

ஜெவான் :—அதுதான் சாமர்த்தியம்! மறந்துபோனவன் மாதிரி பேசுடா! டேய், போனவருசம், என்காலு பூட்ஸெ ரிப்பேர் செய்யறத்துக்கு ஒங்கிட்டக் குடுத்துட்டு உள்ளறபோயிட்டு வந்து பாத்தப்ப ஒன்னைக்காணம். ரெண்டு பூட்ஸையும் அமுக்கிக் கிட்டு டோக்கர் குடுத்துட்டே. அது ஜதை அஞ்சுருவாடா விலை.

இப்ப நல்லா வசமா வந்து எங்கிட்ட மாட்டிக்கிட்டேடா! இப்ப என்னா சொல்றே பூட்ஸுக்கு? பூட்ஸைத் திருப்பிக் குடுக்கறியா? ரூபாயைக் கபட்டப்போறியா? எடு ரெண்டுலே ஒண்ணை.

**சக்கிலி:**— (வியப்போடு) அடேடே! என்னாங்க நாயனா! நானு இந்த ஊருக்குப் புச்சிங்க ஸாமீ. நானு இந்த ஊருக்கு வந்து இன்னும் ரெண்டுமாசம்கூட ஆவல்லெ தண்ட்றீ!

**ஜெவான்:**—இது ஒரு எத்தா! ஒரு வருஷத்துக்கு மின்னெ வந்தவன் ஒன்னைப்போலவே இருந்தான். நீ இல்லேண்டிறியே! ஒன்னை லேசுலெ உட்டுடுவேன்னு எண்ணிக்கிடாதே! நானு போலீஸுக்காரனுக்கும். அதைப்பத்திப் பின்னாலே பேசிக்கிடலாம்; இப்ப இந்த செருப்பு ரிப்பேர் ஆவணும். இதைக் குடுத்தா, இதையும் அமுக்ச்க்கிட்டு கம்பி நீட்டிடுவியோ, ஒளுங்காக் குடுப்பியோ தெரியலியே!

**சக்கிலி:**—என்னாங்க தேவரா, மேமந்தா மீ தபவுலெ பதுகே பீதவாள்ளு. அட்லா சேஸ்துமா! ஈ தேவரா; சேசி இஸ்தானு. நாம்பள்ளாம் ஏளைங்க நாயினா. அப்பிடியெல்லாம் செய்யமாட்டாங்க தேவரா; குடுங்க இப்பிடி.

**ஜெவான்:**—(அறுந்துபோன செருப்பைக் கொடுத்து) இதைத் தச்சுக் குடப்பேன். ஆவட்டும் சுருக்குலெ. நானு டேஷனுக்குப் போவணும்.

**சக்கிலி:**—(அதை வாங்கிப் பார்த்துவிட்டு) இம்பிட்டுதானா? இன்னும் வேலை இருந்தா குடு ஸாமீ. எல்லாத்தெயும் ஒருமிக்க செஞ்சு தர்றேன்.

**ஜெவான்:**—(நடைக்குப் போய் அங்கு கிடந்த இன்னொரு ஜதை செருப்பைக் கொணர்ந்து போட்டு) இதையும் ரிப்பேர் செஞ்சு குடுக்கணும்.

**சக்கிலி:**—(அவைகளையும் வாங்கிப் பார்த்துவிட்டு) தேவரா! நாக்கு ரொம்ப பணி இருக்குதுங்க. என்னா குடுப்பீங்க?

**ஜெவான்:**—காசுப் பேச்சு பின்னாலே. மொதல்லெ வேலை ஆவட்டும்.

**சக்கிலி:**—மொதல்லெ பேசாமெ செஞ்சுப்புட்டு பின்னாலெ சண்டை போட்றதா ஸாமீ? அந்தத் தொந்தரவெல்லாம்



[illegible] ஸாமீ? இப்பவே கூலிப்பேச்சை அறுத்துப் பேசிடுங்க ஸாமீ!

**ஜெவான்:**—(கோபத்தோடு) நீ என்னோடெ டேஷனுக்கு வா; ஒரு வருசத்துக்கு மின்னே நீ பூட்ஸெ அமுக்கிக்கிட்டுப் போனதைப் பத்தி வெசாரணை பண்ணணும்.

**சக்கிலி:**—என்னாங்க ஸாமீ, இந்த நாலணா காசுக்காவ இப்பிடியெல்லாம் பொய் சொல்றாங்க. அதெல்லாம் நல்லதல்ல ஸாமீ! அக்கிரம் பண்ணா புள்ளை குட்டிங்களுக்கு ஒடம்புக்கு ஆவாது ஸாமீ. போனாப்போவுது மூணணா கொடுத்துடு ஸாமீ! ரெண்டு செருப்பும் ஒரே அளவு செருப்புங்க. ரெண்டும் ரெங்கநாதர் செருப்பு கணக்கா, எம்பிட்டுப் பெரிசா இருக்குதுங்க; குடுக்கலாம் ஸாமி மூண்ணா.

**ஜெவான்:**—அடெ பைத்திக்காரா? ரெண்டாந் தடவை குடுத்தது சின்ன ஜதைடா!

**சக்கிலி:**—இல்லே ஸாமீ! ரெண்டும் ஒரே அளவுதானுங்க; ரெண்டும் ஒங்களுதுதான்.

**ஜெவான்:**—இல்லேடா! மொதல்லெ குடுத்தது எஞ்செருப்பு. ரெண்டாந்தரம் குடுத்தது எந்தம்பி செருப்பு.

**சக்கிலி:**—என்னாங்க ஸாமீ; சிரிச்சிக்கிட்டே சொல்றீங்களே! அதுலெயே தெரிலியா?

**ஜெவான்:**—அடெ முட்டாளு நாயே! இதோ பாருடா கால்லெ போட்டுக் காட்டறேன்—என்று கூறியபடி இரண்டாவது ஜதையில் தனது காலை மாட்ட முயல, கால் செருப்பில் நுழையவில்லை.

அப்போது வீட்டிற்குள்ளிருந்த இன்னொரு மனிதர் வெளியில் வர, ஜெவான், "இந்தய்யாவோடெ செருப்புடா இது!" என்று கூறிவிட்டு, வந்தவரை நோக்கி, "கன்னியப்பா, நானு உள்ளற போறேன். இந்த சக்கிலிகிட்ட ரெண்டு ஜதை செருப்புங்க குடுத்திருக்கறேன். இருந்து வாங்கிட்டு வா" என்று சொல்லி விட்டு உள்ளே போய்விட்டான்.

உடனே கன்னியப்பன் திண்ணையில் உட்கார்ந்துகொண்டு, "சரி; சுருக்குனு வேலை ஆவட்டும். நானு வெளியே போவணும்" என்றான்.

சக்கிலி :—என்னுங்க ஸாமீ, கூலி பேசாமெ அந்த ஐயா உள்ளற பூட்டாங்க. நானு மூண்ணு கேட்டேன் ஸாமீ. அதியமில்லெ. அவங்க ஒண்ணும் சொல்லாமெப் பூட்டாங்களே! எனக்கு வவுறு கிவுறு, புள்ளெ குட்டீங்க ஒண்ணுமில்லீங்களா!—என்றான்.

உடனே கன்னியப்பன் ஜெவானைக் கூப்பிட, அதற்குள் உடைகளைக் கழற்றிவிட்ட ஜெவான் இடுப்புத் துணியோடு வெளியில் வந்து திண்ணையில் உட்கார்ந்துகொண்டு, "ஏண்டா சக்கிலி நாயே, நாளு முளுதும், நீ தகராறு பண்ணிக்கிட்டு இருந்தா, எப்பிடீடா நீ பொழைக்கப்போறே" என்றான்.

சக்கிலி :—கூலி இல்லாமெ வேலே சேஞ்சுகுடுத்தா, தகராறே இருக்காதுதான். எனக்கு ஆரும் மானியம் உட்டுவைக்கல்லீங்களே எசமானே! வெறுங்கையோடெ ஊட்டுக்குப் போனா, பொஞ்சாதி தேஞ்சுபோன 'வெஞ்சாமரத்தை எடுத்துக்கிட்டு மரியாதை நடத்துவாளே ஸாமி; அதை ஆராச்சும் ஏத்துக்கறவங்க இருந்தா, நானு கூலியே கேக்கமாட்டேன்.

ஜெவான் :—(கோபத்தோடு எழுந்தோடி) என்னடா நாயே சக்கிலியப் புத்தியெ காட்டறே! ஓம் பொஞ்சாதிக்கிட்ட ஊராரெல்லாம் துடைப்பக்கட்டையாலே அடிபடணுங்கிறியாடா! குறும்புக்கார நாயே! எந்திரிச்சு ஓடு களுதே.—என்று கூறியபடி, அவனுடைய பையை காலால் உதைத்துத்தள்ள, சக்கலியன் தனது கோபத்தை அடக்கிக்கொண்டு, தனது பையை எடுத்துக்கொண்டு பேசாமல் தெருவோடு போய்விட்டான்.

இது நிற்க, உலகநாதன் தனது வீட்டை யடைந்தகாலத்தில், அவனுடைய தந்தையான ராஜப்ப முதலியார், அரங்கநாத முதலியாருடன் எதிர்த்த வீட்டின் மேன்மாடத்தில் சம்பாஷித்துக்கொண் டிருந்ததை அவன் கவனித்தான். தனது கலியாண விஷயமாகவே அவர்கள் பேசிக்கொண்டிருக்க வேண்டுமென்று அவன் யூகித்துக்கொண்டு, தனது காலைச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு வெளிப்பட, அப்போது அவனுடைய தந்தை கையைத் தட்டி அவனைக் கூப்பிட, அவன் ஆவல்கொண்டவனாய் அரங்கநாத முதலியாருடைய வீட்டிற்குள் நுழைந்தான்.

அப்போது கூடத்தில் இருந்த காந்திமதி அவனைப் பார்த்தவுடன் திடீரென்று காமரா அறைக்குள் ஓடி மறைந்துகொண்டாள்.



அவளுடைய அந்தச் செய்கையைக் கண்டு பெரிதும் வியப்படைந்த உலகநாதன் அதன் காரணத்தை அறியமாட்டாமல் படிக்கட்டின் வழியாக ஏறி மேலே சென்றான். உடனே காந்திமதியும் வெளிப்பட்டு ஓசை செய்யாமல் படிகளில் ஏறி, மேன்மாடத்திற்குப் போய்ச் சேர்ந்தாள்.

உலகநாதனைக் கண்டவுடன் ராஜப்ப முதலியார், "அடேய், லோகு, நாங்கள் உன் கலியாண விஷயத்தைப்பற்றிப் பேசி முடிவு கட்டிக்கொண்டிருக்கிறோம். இவர்கள் என்ன சொல்லுகிறார்கள் தெரியுமா? ஒரு கெட்டிக்கார ஜோசியரிடம் இரண்டு ஜாதகங்களையும் கொடுத்து, ஒத்திட்டுப் பார்க்கச்செய்து, பொருத்தம் இருக்கிறதென்று சொன்னால் கலியாணத்தை உடனே நடத்திவிடலாமென்கிறார்கள்; அவர் நீ சின்னசாமி யோகீசுவரரிடம் குமாஸ்தாவாயிருக்கிறாயே! அவர் கெட்டிக்காரர்தானா? அவரிடம் கேட்கலாமா? என்ன உன் அபிப்பிராயம்?" என்றார்.

உலகநாதன் :—அடாடா! அவர் பழைய காலத்து பதினெண் சித்தர்களுடைய அம்சம் வாய்ந்தவராயிற்றே! அவருக்கு வேண்டியவர் வேண்டாதவர் என்கிற தயவு தாட்சண்யமே இல்லை. உள்ளதை உள்ளபடி சொல்லுவார். அவரிடமே நீங்கள் போகலாம். நம் மனதிற்கும் திருப்தி; நாம்தானே பெண்ணை ஏற்று அதை ஆயிரம் காலம் வைத்து ஆளுகிறவர்கள். அவர் நம்மிடம் பணம் கேட்கவும் மாட்டார்.

ராஜப்ப முதலியார் :—அது நமக்கு மரியாதையல்ல. நாம் ஏதாவது பணம் கொடுத்துவிடுவோம். சரி, நீ போகலாம்.

உலகநாதன் :—நான் இப்போது அங்கேதான் போகிறேன்.

அரங்கநாத முதலியார் :—சரி; அப்படியானால், எல்லாரும் மோட்டார் வண்டியில் போகலாம்—என்று கூறி வண்டியைத் தயார்ப்படுத்த வேலைக்காரனுக்கு உத்தரவு கொடுத்தார்.

சிறிதுநேரத்தில் மூவரும் வண்டியில் ஏறிக்கொண்டு சின்னசாமி யோகீசுவரருடைய வீட்டிற்குச் சென்று வாசலில் இறங்கினர். அதுவரையில் மூடி வைக்கப்பட்டிருந்த கதவைத் திறந்துகொண்டு, யோகீசுவரருடைய வேலைக்காரன் வெளிப்பட்டு, "வரவேண்டும். நீங்கள் மூவரும் வரப்போவது யோகீசுவரருக்குத் தெரி

யும். உங்களை அழைத்துக்கொண்டு வரும்படி என்னை அனுப்பினார்கள்" என்றான்.

அதைக் கேட்கவே, ராஜப்ப முதலியாரும், அரங்கநாத முதலியாரும் அபாரமான வியப்போடு ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர். ' உலகநாதன் அவர்களைப் பார்க்காமல் தனது முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொண்டான்.

அப்போது வீதியில் வந்த இன்னொரு மனிதரும் அந்த வீட்டிற்குள் நுழைந்தார். அவர் ஒரு பெரிய கப்பல்கார மறைக்காயர் போல் காணப்பட்டார். அவர் இங்கிலீஷ்கார மோஸ்தரில் உடைகளணிந்திருந்தாராலும் அவருடைய தாடியும், தலையில் இருந்த ஓலைக் கூடைத் தலைப்பாகையுமே அவர் இன்ன இனத்தைச் சேர்ந்தவர் என்பதைக் காட்டின.

அவர் அங்கிருந்தவர்களை நோக்கி, "நீங்கள் ஜோசியரைப் பார்த்துவிட்டு வந்தவர்களா? உள்ளே ஜோசியர் இருக்கிறாரா?" என்றார்.

அரங்கநாத முதலியார்:— அவரைப் பார்க்கத்தான் நாங்கள் போகப்போகிறோம். உள்ளே இருக்கிறதாக வேலைக்காரன் சொல்லுகிறான். ஏன்? நீங்களும் அவரைப் பார்க்கவேண்டுமா?—என்றார்.

மறைக்காயர், "ஆம்" என்று சொல்லிவிட்டு உள்ளே நுழைந்து மாடிப் படிக்கட்டின்மேல் தடதடவென்று ஏறினார்.

உடனே வேலைக்காரன் பின்னால் ஓடி, "யார் ஐயா அது? கொஞ்சம் நில் ஐயா; இவர்கள் முதலில் போகட்டும். யோகீசுவரர் கூப்பிடச் சொல்லாவிட்டால், போகக்கூடாதையா" என்று அதட்டினான்.

உடனே மறைக்காயர் தமது சட்டைப்பையிலிருந்த ஒரு ரிவால்வரை எடுத்து, "டேய் பேசினால் சுடுவேன்; உடனே நீ பிணமாய் நீண்டு போவாய். நான் போய் யோகீசுரவரிடம் பேசிவிட்டு வருகிறவரையில் நீயும் மேலே வரக்கூடாது; வெளியில் வந்திருக்கிறவர்களையும் மேலே அனுப்பக்கூடாது. இதை நீ மீறினால், உன் உயிரை நான் எமன் உலகத்துக்கு அனுப்புவது நிச்சயம்" என்றார்.

அதைக் கேட்டுக்கொண்டே வந்த உலகநாதன், "அடேடே! இவன் பைத்தியக்காரன்போல் இருக்கிறது! ஒருவேளை ஜோசியருக்



கும், இவனுக்கும் பகை இருக்கலாம். நான் பின் பக்கமாய் ஓடி ஜோசியரை எச்சரிக்கிறேன்" என்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டு கீழ் வழியால் வீட்டின் பின்பக்கத்தை நோக்கி ஓடினான்.

மாடியின் மேல்பாகத்தை அடைந்த மறைக்காயர், வழக்கமாய் யோகீசுவரர் இருந்த அறைக்குள் நுழைந்து பார்க்க, அவர் அங்கே காணப்படவில்லை. ஆகவே மறைக்காயர் அங்குமிங்கும் திரும்பிப் பார்த்து விழித்துக்கொண்டு நின்ற சமயத்தில், வேலைக்காரன் பின்பக்கத்தில் வந்து, அவருடைய சட்டைப்பைக்குள் இருந்த ரிவால்வரை சரேலென்று எடுத்துக்கொண்டான்.

அதே காலத்தில் யோகீசுவரரும், உலகநாதனும் அங்கே வந்து சேர்ந்தனர். மறைக்காயர் யோகீசுவரரைப் பார்த்து, "ஐயா நீர் யோகி என்று பெயர் வைத்துக்கொண்டிருக்கிறீரே! நான் யார் என்பதை சொல்லும் பார்க்கலாம்" என்று புரளியாக வினவினார்.

ஜோசியர், "நீர் பைத்தியக்காரர் என்பது கண்கூடாகத் தெரிகிறதே! அதை நான் சொல்லவும் வேண்டுமா? மரியாதையாக வெளியில் போய்விடும். இல்லாவிட்டால், போலீஸ்காரரைக் கூப்பிடுவேன்" என்றார்.

அதைக் கேட்டுக் கலகலவென்று சிரித்த மறைக்காயர் சரேலென்று வேலைக்காரன்மீது பாய்ந்து, அவனுடைய கையிலிருந்த தமது ரிவால்வரைப் பிடுங்கிக்கொண்டு கீழே போய்விட்டார்.

அடுத்த நிமிஷம் அரங்கநாத முதலியாரும், ராஜப்ப முதலியாரும் அங்கே வந்துசேர்ந்தனர். அவர்களைப் பார்த்த யோகீசுவரர் சிரித்த முகத்தோடு, "வரவேண்டும். ஒருவர் அரங்கநாத முதலியார், மற்றவர் ராஜப்ப முதலியார்; உட்காருங்கள்" என்று கூறிவிட்டு, வேலைக்காரனை அழைத்துக்கொண்டு மறைவாகப் போய் "நீ உடனே வெளியில் ஓடி, இப்போது வந்த சாயப்புவைப் பின்தொடர்ந்து போய், அவன் யாரென்பதைத் தெரிந்துகொண்டு வா ஓடு" என்றார்.

வேலைக்காரன் உடனே பின் புறத்தால் கீழே இறங்கிப் போய்விட்டான். யோகீசுவரர் திரும்பிவந்து, தாம் வழக்கமாய் உட்காரும் நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு, எதிரிலிருந்த

இரண்டு கனவான்களையும் நோக்கி, "நீங்கள் விவாக விஷயமாய் என் அபிப்பிராயம் கேட்க வந்திருக்கிறீர்கள். நான் விஷயத்தை நன்றாக ஆராய்ந்து சொல்லவேண்டுமானால், நீங்கள் முதலில் ஏதாவது தட்சிணை வைக்கவேண்டும்" என்றார்.

உடனே அரங்கநாதமுதலியார் ஒரு ரூபா பணத்தை எடுத்து, மேஜையின்மேல் வைக்க, யோகீசுவரர் அதை எடுத்து வைத்துவிட்டு, அவர்களைப் பார்த்து, "இதோ எனக்கு முன்னால் இருக்கும் கண்ணாடிகுண்டைப் பாருங்கள். இது இப்போது வெண்மையாயிருக்கிறதல்லவா. இதில் உங்களைப்பற்றிய விஷயங்கள் இப்போது தெரியப்போகின்றன. பார்த்துச் சொல்லுகிறேன்" என்றார்.

அதுவரையில் வெள்ளையாயிருந்த கண்ணாடிக்குண்டு உடனே கருப்பாக மாறியது. இரண்டு கனவான்களும் அந்த அற்புதமான மாறுதலைக் கண்டு நிரம்பவும் வியப்படைந்து, ஜோசியருடைய முகத்தையும் கண்ணாடி குண்டையும் மாறி மாறி ஆவலோடு பார்த்தனர்.

யோகீசுவரர் அரங்கநாத முதலியாரை நோக்கி, "ஐயா, உங்களுக்கு ஒரு பெண் இருக்கிறது. அதை இவர்களுடைய பையனை உலகநாதனுக்குக் கலியாணம் செய்துகொடுக்க விரும்புகிறீர்கள். இருவருக்கும் பொருத்தம் இருக்கிறதா என்று தெரிந்துகொள்ள வந்திருக்கிறீர்கள். நான் எப்போதும் ஜாதகங்களைப் பார்த்துச் சொல்லுகிறதில்லை. அவர்கள் இருவருக்கும் மனப்பொருத்தம், குணப்பொருத்தம் முதலியவை இருக்கின்றனவா என்பதை எனக்கு இந்த ஞானத்திருஷ்டிக் கண்ணாடி காட்டிவிடும். இதுவே போதுமானது. இந்த சதிபதிகளுக்கு எல்லா அம்சங்களிலும் பொருத்தம் இருக்கிறதாக இந்த குண்டு காட்டுகிறது. இதைப்பற்றி நீங்கள் கொஞ்சம்கூட யோசிக்கவே வேண்டியதில்லை. குசாலாய்ப் பெண்ணைக் கொடுத்துவிடலாம். இவர்கள் இருவரும் கலியாணக் கோலத்துடன் மணையில் உட்கார்ந்திருக்கும் காட்சியை இப்போதே இந்த குண்டு எனக்குக் காட்டுகிறது. ஆகையால், இவர்கள் இருவருக்குமே கடவுள் முடிச்சுப்போட்டிருக்கிறார். யார் இனி முயற்சித்தாலும் இது மாறப்போகிறதில்லை. அவ்வளவுதான் சங்கதி. இனி நீங்கள் போகலாம்" என்றார். உடனே கண்ணாடி குண்டு முன் இருந்ததுபோல் வெளுப்பாக மாறிப்போயிற்று.



அப்போது அந்த அறைக்குள் இன்னொரு புதிய மனிதர் வந்து நுழைந்தார். அவரைக் கண்ட யோகீசுவரர் வியப்பும் கோபமும் அடைந்தவராய், "யார் ஐயா நீர்? நான் இங்கே வேறு மனிதர்களுடன் இவர்களுடைய குடும்ப ரகஸியங்களைப் பேசிக்கொண்டிருக்கிறேன். வெளியில் இருந்து என் அநுமதி பெற்றுக்கொண்டல்லவா உள்ளே வரவேண்டும்? திடீரென்று இப்படி அநாகரிகமாய் ஏன் ஐயா வந்தீர்?" என்றார்.

அந்த மனிதர், "வெளியில் உங்களுடைய ஆள் இல்லை. இருந்தால், உங்கள் அநுமதி பெற்றுக்கொண்டு வந்திருப்பேன். நான் அநாவசியமாக வரவில்லை. அவசரமாக உங்களிடம் ஒரு சங்கதியைச் சொல்லிவிட்டுப்போக வந்தேன். உங்களோடு நான் தனிமையில் பேசவேண்டும்" என்றார்.

உடனே யோகீசுவரர், உட்கார்ந்திருந்த இரண்டு கனவான்களுடைய முகத்தையும் பார்க்க, அவர்கள் அந்தக் குறிப்பை அறிந்து உடனே எழுந்து, "நாங்கள் போய் வருகிறோம்" என்று கூறி யோகீசுவரருக்கு ஒரு கும்பிடு போட்டுவிட்டு வெளியில் போய்விட்டனர்.

அப்போது யோகீசுவரருக் கெதிரில் நின்ற புதிய மனிதர், "சரி; நான் இப்போது எதற்காக இங்கே வந்தேனென்பதை உங்கள் கண்ணாடி குண்டின் உதவியால் கண்டுபிடியுங்கள்" என்றார்.

**யோகி:** - ஒருதரம் கண்ணாடி குண்டில் பார்த்தால், அதற்குப் பிறகு ஒருநாள் பொறுக்கவேண்டும். நீர் இங்கேயே ஒருநாள் வரையில் நின்றுகொண்டிருந்தால், நான் இதிலேயே பார்த்துத் தெரிந்துகொள்ளுவேன்.

**மற்றவர்:**—சரி; இதுவும் ஒரு சௌகரியமான ஏற்பாடுதான். இருக்கட்டும். என்னை கந்தசாமி வாண்டையார் உங்களிடம் அனுப்பினார்.

**யோகி:**—நீர் யார் என்பதை முன்னால் சொல்லும்.

**மற்றவர்:**—நான் கந்தசாமி வாண்டையாருடைய தம்பிதான். விஷயம் என்ன நிலைமையிலிருக்கிறதென்று விசாரித்துக்கொண்டு வரச்சொன்னார் தமயனார்.

யோகி:—எந்த விஷயம் என்பது தெரியவில்லையே. அவரையே நேரில் வரச்சொல்லும்; இல்லாவிட்டால், அவரிடம் கடிதம் வாங்கிக்கொண்டு வாரும்.

மற்றவர்:—அவர் நேரில் வர முடியாததற்குக் காரணம் உங்களுக்கே தெரியுமாம். அவர் ஒரு கடிதம் கொடுத்திருக்கிறார்—என்று கூறி ஒரு கடிதத்தைக் கொடுத்தார். அதை வாங்கிப் படித்துப் பார்த்த யோகீசுவரர் உடனே அதற்கு மறுமொழி எழுதி ஓர் உறைக்குள் போட்டு ஒட்டி அவரிடம் கொடுக்க, அவர் அதைப் பெற்றுக்கொண்டு வெளியில் போய்விட்டார்.

அதுவரையில் மறைவில் இருந்த உலகநாதன் அப்போது அங்கே வர, யோகீசுவரர், "இதைக் கம்பியில் மாட்டி வை" என்று கூறி அவனிடம் கொடுத்தார். அவன் அதை வாங்கிப் பார்த்துவிட்டு, "இதில் பழைய தேதி அடிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு மேல் இன்றைய தேதி போடப்பட்டிருக்கிறதே." என்றான்.

யோகி:—முதலில் கவனப் பிசகாய் தப்பான தேதியைப் போட்டு, பிறகு அடித்திருக்கலாம். அதில் சந்தேகத்திற்கு இடமில்லை—என்றார்.

உடனே உலகநாதன் அதைக் கம்பியில் மாட்டிக்கொண்டிருந்த சமயத்தில் வேலைக்காரன் திரும்பி வந்து சேர்ந்து, "நான் அவனுக்குப் பின்னாலேயே போனேன். அவன் நேராக ஆஸ்பத்திரிக்குப் போய், உள்ளே நுழைந்துவிட்டான். அதற்குமேலும் அவனைத் தொடர்ந்து நான் உள்ளே போக முடியவில்லை. ஏனென்றால், வெளியில் இருந்த சேவகன் என்னைத் தடுத்துவிட்டான். அந்த மனிதன் யாரென்று நான் அவனிடம் கேட்டதற்கு அவன் சரியான பதிலே சொல்லவில்லை"—என்றான்.

அப்போது அங்கே கந்தசாமி வாண்டையானே வந்து சேர்ந்தான். அவனைக் கண்ட யோகீசுவரர் வியப்போடு, "உம்முடைய தம்பி இப்போதுதானே வெளியில் போனார். பார்க்கவில்லையா?" என்றார்.

கந்தசாமி:—(திடுக்கிட்டு வியப்போடு) என்னுடைய தம்பியா? எனக்குத் தம்பி யாருமில்லையே! என்னிடம் தமாஷ் பண்ணுகிறீர்களா?



யோகி:—(ஆச்சரியத்தோடு) என்ன வாண்டையாரே, நீர் எழுதிக் கொடுத்த கடிதத்தைக் கொண்டுவந்து கொடுத்து பதில் கடிதம் வாங்கிக்கொண்டு போனானே!

கந்தசாமி:—இது பெரிய மோசடியாயிருக்கிறதே! நான் யாரிடத்திலும் கடிதம் கொடுத்தனுப்பவில்லையே! நீங்கள்தான் ஜோசியத்தில் பெரிய புலியாயிற்றே. உண்மையை உடனே தெரிந்துகொண்டிருக்கக்கூடாதோ? எங்கே அந்தக் கடிதம், நான் பார்க்கிறேன்.

யோகி:—(கடிதத்தைத் தேடுகிறவர்போல் நடித்து மேஜையின் மீது பார்த்து) இங்கேதானே வைத்தேன்! காற்றில் பறந்து போய்விட்டதோ என்னவோ தெரியவில்லையே!—என்று கூறியபடி எழுந்து அங்குமிங்கும் தேடிப்பார்க்க, அது காணப்படவில்லை.

யோகி:—இங்கே இருந்த கடிதத்தை அவனே எடுத்துக்கொண்டு போய்விட்டானோ என்னவோ தெரியவில்லையே! நீர் போய் அவனைப் பாரும்; அவன் போய் ஐந்து நிமிஷம்கூட ஆகவில்லை. பிறகு நாம் சாவகாசமாய்ப் பேசிக்கொள்ளலாம்.

கந்தசாமி:—அவன் எப்படி இருந்தான்?—என்றான். யோகீசுவரர் அவனுடைய அடையாளங்களைத் தெரிவிக்க, கந்தசாமி வாண்டையான் அதைக் கேட்டுக்கொண்டு விரைவாக வெளியில் போய்விட்டான்.

பிறகு யோகீசுவரர் உலகநாதனைப் பார்த்து, "எனக்கு இவன் மேல் சந்தேகம் உண்டாகிறது. ஏதாவது திருட்டு எண்ணத்தை மனதில் வைத்துக்கொண்டு இவனே கடிதத்தை அனுப்பிவிட்டு, இப்போது இல்லை என்கிறானோ என்னவோ தெரியவில்லை. நீ பின்னால் போய், இவனும் அவனும் சந்திக்கிறார்களா என்பதைப் பார்த்துக்கொண்டு வா" என்றார். உடனே உலகநாதனும் வெளியில் போய்விட்டான்.

உடனே யோகீசுவரர் எழுந்து கம்பியில் மாட்டப்பட்டிருந்த கடிதத்தை எடுத்துப் பெட்டிக்குள் வைத்துப் பூட்டினார். ஏனென்றால், அது பின்னால் தமக்கு உபயோகப்படுமென்று அவர் கருதினார்.

அதன்பிறகு அவர் ஏதோ கருத்தோடு வீட்டை விட்டு வெளிப்பட்டு பல இடங்களுக்கும் போய்விட்டுத் திரும்பி இரவு

சுமார் 9 மணிக்கு வீட்டிற்கு வந்துசேர்ந்தார். அவருடைய வேலைக்காரன், வீட்டின் முன் கதவை உள்புறத்தில் தாளிட்டுக்கொண்டு இருப்பது வழக்கம். அதற்கு மாருக, அன்று கதவு தாளிடப்படாமல் வெறுமையாக மூடி வைக்கப்பட்டிருந்தது. அவர் வியப்போடு கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்து வேலைக்காரனைக் கூப்பிட்டுப் பார்த்தார். அவன் காணப்படவில்லை. ஆகையால் அவர் கோபத்தோடு முன்புறக் கதவைத் தாளிட்டுக்கொண்டு மேலே சென்று தமது அறையை அடைந்தார்.

அன்றைய காலையில் கந்தசாமி வாண்டையானுடைய தம்பியென்று சொல்லிக்கொண்டு வந்த மனிதன் ஒரு நாற்காலியில் உட்கார, அதைக் கண்ட யோகீசுவரர் ஆச்சரியத்தோடு, "எப்போது நீர் இங்கே வந்தீர்? இங்கே இருந்த வேலைக்காரன் எங்கே?" என்றார்.

மற்றவர்:—நான் இங்கே வந்து ஐந்து நிமிஷம் இருக்கும். உங்கள் வேலைக்காரன் என்னை இங்கே உட்கார வைத்துவிட்டு கீழே போனான்.

யோகி:—(அறையின் நான்கு பக்கங்களிலும் தமது பார்வையைச் செலுத்தி, ஏதேனும் பொருள் காணுமல் போய்விட்டதா என்று பார்த்தபின்) என்ன ஐயா, நீர் சொல்வது ஆச்சரியமாயிருக்கிறதே! நீர் அன்னிய மனிதர்; உம்மை இங்கே உட்கார வைத்துவிட்டு அவன் போகக்கூடியவனல்லவே!

மற்றவர்:—அப்படியானல், அவன் ஏன் போனன்?

யோகி:—அதைத்தான் நான் கேட்கிறேன்.

மற்றவர்:—அதை அவனிடத்தில்தான் கேட்கவேண்டும். அல்லது, நீங்கள் உங்களுடைய கண்ணுடி குண்டினிடம்தான் கேட்டுப் பார்க்கவேண்டும்.

யோகி:—சரி; அப்படியே செய்யலாம். நீர் மறுபடி எங்கே வந்தீர்? கந்தசாமி வாண்டையார் ஏதாவது காரியமாய் அனுப்பினுரா?

மற்றவர்:—அவர் அனுப்பவில்லை. நான் ஜோசிய சம்பந்தமாய் உங்களிடம் வந்தேன்.

யோகி:—இரவிலா ஜோசியம் சொல்லுவார்கள். நான் பகலில்தான் சொல்வது வழக்கம்.



மற்றவர்:—இரவில் ஏன் சொல்வதில்லை?

யோகி:—இரவில் சொல்வது பலிக்காது.

மற்றவர்:—நீங்கள் பெரிய யோகீசுவரர்; நீங்கள் சொல்வது பலிக்காமல் போவதுகூட உண்டா? பரவாயில்லை, சொல்லுங்கள். பலித்தால் பலிக்கட்டும்; இல்லாவிட்டால், நான் உங்கள்மேல் குறை சொல்லப் போகிறதில்லை.

யோகி: (சற்று எண்ணமிட்டபின்) சரி; பணத்தை முன்னுல் கொடுத்துவிட வேண்டும்.

மற்றவர்:—பணம் எவ்வளவு கொடுக்கவேண்டும்?

யோகி:—(மறுபடி எண்ணமிட்ட பிறகு) சரி; பணம் எதுவும் கொடுக்கவேண்டாம். பணத்திற்கு பதில் எனக்கு வேறொரு காரியம் செய்துவிடும்.

மற்றவர்:—என்ன செய்யவேண்டும்?

யோகி:—எதையும் செய்யவேண்டாம். எனக்கு ஒரு சங்கதி தெரியவேண்டும். அதைச் சொல்வதே போதுமானது.

மற்றவர்:—என்ன சங்கதி?

யோகி:—கந்தசாமி வாண்டையார் இன்று காலையில் என்ன எண்ணத்தோடு உம்மை இங்கே அனுப்பினுர் என்பது எனக்குத் தெரியவேண்டும்.

மற்றவர்:—அடாடா! அது எனக்குத் தெரியாதே! தெரிந்திருந்தால், உடனே சொல்லிவிடுவேனே! நீங்கள் அவரிடம்தான் கேட்கவேண்டும்.

யோகி:—அவரிடம் கேட்டேன். தாம் உம்மை அனுப்பியதாகவே அவர் ஒப்புக்கொள்ளவில்லை.

மற்றவர்:—அப்படியானல், அவருடைய கடிதம் என்னிடம் எப்படி வந்ததாம்? நானே அதை உற்பத்தி பண்ணினேன் என்றல்லவா அர்த்தம் ஆகிறது.

யோகி:—அப்படித்தான் அர்த்தம் ஆகிறது? நீர் ஏன் அந்த மாதிரி செய்யவேண்டும்?

மற்றவர்:—இதை நீங்கள் அவரிடமே கேட்டிருக்கவேண்டும்.

யோகி:—அந்தமாதிரி கேட்டதற்கு, உம்மிடம் கேட்கச் சொல்லிவிட்டார்.

மற்றவர் :—அப்படியானல் நானே அவரிடம் கேட்டு உண்மையைத் தெரிந்துகொண்டு வந்து சொல்லுகிறேன்.

யோகி :—அவசியம் சொல்லவேண்டும். அப்படியானல் நீர் அவருக்கு எவ்விதமான சொந்தக்காரருமல்லவா ?

மற்றவர் :—அந்தமாதிரிகூட அவர் சொன்னரா ?

யோகி :—ஆம் ; சொன்னர்.

மற்றவர் :—சரி ; அப்படியானல், அவர் ஏதோ கபடமான கருத்தோடுதான் அப்படிச் சொல்லி இருக்கிறர். நீங்கள் உங்கள் ஞானதிருஷ்டிக் கண்ணுடியால் பார்த்தால், பொய், மெய் உடனே தெரிந்து போகிறது ; பாருங்களேன். எனக்கு நேரமாகிறது. நான் கேட்டதையும் அப்படியே பாருங்கள்—என்றர்.

உடனே யோகீசுவரர் கண்ணுடி குண்டிற்கு அருகில் உட்கார்ந்துகொண்டு, “இப்போது இது வெள்ளையாயிருக்கிற தல்லவா. அடுத்த விநாடியில் இது கறுப்பாக மாறும். உடனே எல்லா விஷயங்களும் எனக்குத் தெரியும்; நான் பார்த்துச் சொல்லுகிறேன்” என்று கூறிவிட்டு, கண்ணுடி குண்டைப் பார்த்தபடி இருந்தார்.

சுமார் ஐந்து நிமிஷங்கள் கழிந்தன. பத்து நிமிஷ காலமும் ஆயிற்று. குண்டு வெளுப்பாகவே இருந்தது. யோகீசுவரருடைய முகம் ஆச்சரியத்தைக் காட்டியது. அவர் மற்றவரைப் பார்த்து, “நான்தான் முதலிலேயே சொன்னேனே! இரவில் ஜோசியம் பார்த்தால் பலிக்காதென்றேன். நீர் பிடிவாதம் பிடித்தீர்” என்று கூறினர். ஆனல், அவருடைய இடது கை அவருடைய நாற்காலியில் இருந்த ஒரு சிறிய பொத்தானை அழுத்தி அழுத்திப் பார்த்தபடி இருந்தது.

உடனே மற்றவர் புன்னகையோடு, “ஏன் பொத்தானை அழுத்தி அழுத்திப் பார்க்கிறீர்கள்? விசை கெட்டுப்போயிருக்கிறது. நீங்கள் எவ்வளவுதான் பொத்தானை அழுத்தினலும், கண்ணுடி குண்டு வெள்ளையாகத்தான் இருக்கும்” என்று புரளியாகக் கூறினர்.

அதைக் கேட்ட யோகீசுவரர் திடுக்கிட்டு விகாரமான முகத் தோற்றத்தோடு முறைத்துப் பார்க்க, மற்றவர், “ஏன் இப்படிப்



பார்க்கிறீர்? உம்முடைய ஞானதிருஷ்டிக் கண்ணுடிக் குண்டின் விசை எங்கே இருக்கிறதென்பதை நான் தெரிந்துகொண்டுவிட்டதைப்பற்றி ஆச்சரிய மடைகிறீரா? இப்படிப்பட்ட தந்திரமான மோசடியைக் கண்டுகொள்ளக்கூடிய மனிதரும் இருக்கிறர்கள் என்பதை உமக்குக் காட்டவே நான் பொத்தானின் விசையை இப்படிக் கெடுத்து வைத்தேன்” என்றர்.

அதைக் கேட்கவே, யோகீசுவரருடைய உடம்பு அபாரமான கோபாவேசத்தினல் துடிதுடித்துப் பதறியது; கண்கள் சிவந்து போயின. முகம் பயங்கரமாகத் தோன்றியது. தமது பிழைப்பின் மர்மத்தைக் கண்டுகொண்ட அந்த மனிதரை அப்படியே மர்த்தனம் செய்து கொன்றுபோட்டுவிடத் தீர்மானித்து, அதற்காக நரசிம்மாவதாரம் எடுத்துக்கொண் டிருப்பவர்போல் அவர் காணப்பட்டார். ஆனல், அந்த சமயத்தில் மற்றவருடைய கையில் பளபளப்பான ஒரு ரிவால்வர் மின்னவே, அது யோகீசுவரருடைய திருஷ்டியில் பட்டுவிட்ட தாகையால், அவர் அரும் பாடுபட்டுத் தம்மை அடக்கிக்கொண்டு மற்றவரைப் பார்த்து, “யார் ஐயா நீர்? இங்கே வந்து ஏன் ஐயா இப்படியெல்லாம் என் விஷயங்களில் தலையிடுகிறீர்?” என்றர்.

அப்போது, கண்ணுடிக் குண்டிருந்த மேஜையின் அடியில் யாரோ மனிதர் புரண்டதைப்போல் ஓசை உண்டாயிற்று. யோகீசுவரர் வியப்போடு சரேலென்று கீழே குனிந்து பார்த்தார். தம்முடைய வேலைக்காரன் கைகால்கள் கட்டப்பெற்றும், வாயில் துணி அடைக்கப்பெற்றும் விழுந்து கிடந்தது தெரியவே, யோகீசுவரருக்கு உடனே உண்மை விளங்கிவிட்டது. அந்த மனிதனே தமது வேலைக்காரனைக் கட்டிப் போட்டுவிட்டு, பொத்தானையும் கெடுத்துவிட்டு, தாம் வந்தபோது சாதுபோல் உட்கார்ந்திருக்க வேண்டும் என்று யூகித்துக்கொண்டு அருவருப்போடு மற்றவரைப் பார்த்து, “என்ன வேலை ஐயா இது? என்னுடைய ஆளை ஏன் இப்படிக் கட்டிப் போட்டீர்?” என்று கூறியபடி மெல்ல எழுந்திருக்க, உடனே மற்றவர், “ஐயா யோகீசுவரரே! உம்முடைய மோசடி இன்னவிதமாய் நடக்கிறது என்பதைத் தெரிந்து கொள்வதற்காகவே, நான் உம்முடைய ஆளைக் கட்டிப்போட்டேன். அதற்காக நீர் என்ன செய்யலாமென்று நினைக்கிறீர்; செய்யும் பார்க்கலாம்” என்றர்.

அப்போது யோகீசுவரருடைய கைகள் அங்குமிங்கும் போய் ஏதோ விஷமம் செய்தது தெரிந்தது. அதே நிமிஷத்தில் அந்த அறையில் எரிந்துகொண்டிருந்த விளக்கு அணைந்து போய்விட்டது. அந்த அறை முழுதிலும் இருள் சூழ்ந்துகொண்டது. அடுத்த நிமிஷம், அந்த அறையின் கதவு தடாரென்று மூடப்பட்ட ஓசை உண்டாயிற்று.

விளக்கு அணைந்தவுடன், அந்த அன்னிய மனிதர் நிரம்பவும் எச்சரிப்படைந்து, இருளில் தமக்கருகில் எவரேனும் வந்து, தம்மைப் பிடித்துக் கொள்வாரோவென்று நினைத்து, சுவரின் ஓரமாய் நகர்ந்து நின்று, அதற்குமேல் என்ன நடக்கப் போகிறதென்பதை உற்று கவனித்தார்.

அந்த அறையின் கதவிற்கப்பால், யோகீசுவரருடைய குரலோசை உண்டாயிற்று. "டேய், புலிக்குட்டீ, என் மோசடியின் மர்மத்தை நீ கண்டுபிடித்து விட்டாயா? இப்போது உன்னை நான் இந்த அறைக்குள் உயிரோடு சமாதி வைத்துவிட்டேன். உனக்கு சாமர்த்தியமிருந்தால், நீ இந்த அறையின் கதவைத் திறந்துகொண்டு வா. மின்சார சக்தியைக் கொண்டுதான் இந்தக் கதவைத் திறக்க வேண்டும். நான் கம்பியை அறுத்துவிட்டுப் போகிறேன். நீ கூச்சலிட்டு வெளியில் போகிறவர்களை உதவிக்கு அழைத்தாலும், அவர்கள் இங்கே வருவதற்குள் மூன்று அபாயங்களைக் கடந்து வர வேண்டும். முதல் அபாயத்திலேயே அவர்கள் மாண்டுபோவது நிச்சயம்" என்றார்.

அதற்குமேல் யோகீசுவரர் பேசவில்லை. சுவரோரமாய் நின்ற அந்த அன்னியர் தமது சட்டைப்பைக்குள் வைத்துக்கொண்டிருந்த மின்சாரக் கைவிளக்கை எடுத்து, வெளிச்சம் உண்டாக்கிக்கொண்டு, அதன் உதவியால் அந்த அறையை ஆராயத் தொடங்கினார். யோகீசுவரர் அந்த வீட்டை விட்டே ஓடிப் போயிருப்பாரா, அல்லது, அந்த அறைக்கு வெளியில் இருப்பாரா என்பதை அவரால் நிச்சயிக்க முடியவில்லை. அதுவன்றி மேஜையின் கீழ் கட்டுகளுடன் கிடந்த வேலைக்காரனும் காணப்படவில்லை. யோகீசுவரர் விளக்கை அணைத்தபின், எவ்வித ஓசையுமின்றி, வேலைக்காரனை வெளிப்படுத்திக்கொண்டு அவ்வளவு சீக்கிரம் வெளியில் போவது சாத்தியமானதல்லவென்ற எண்ணம் அந்த அன்னிய மனிதருடைய மனதில் பட்டது.



ஆகவே, அதே அறையில் உள்ள ஏதாவதொரு இரகசிய வழியின் மூலமாய் அவர்கள் மறைந்திருக்கலாம் என்னும் சந்தேகம் உண்டாயிற்று. எனவே, அவர் அந்த அறையில் மேஜை முதலிய இடங்களில் அமைக்கப்பட்டிருந்த விசைகளை கவனித்தார். மேஜையின்மேல் இரண்டு பொத்தான்கள் காணப்பட்டன. அவர் ஒன்றைத் தொட்டுக் கீழே இறக்க, உடனே அந்த அறையின் விளக்கு எரியத் தொடங்கியது. இன்னொன்றை அவர் தொட்டுப் பலவிதங்களில் திருப்பிப் பார்த்தார். அதனால் அந்த அறையில் எவ்வித மாறுதலும் உண்டானது தெரியவில்லை. ஆகவே, அவர் அதன் கீழ்ப்பக்கத்தை ஆராய்ந்து பார்க்க, அதிலிருந்து இரண்டு மின்சாரக் கம்பிகள் போனது தெரிந்தது. அது அங்கிருந்து அந்த அறையின் கதவிற்கும், கதவிலிருந்து, ஒரு பீரோவுக்கும் போனது தெரிந்தது. உடனே அவர் அந்த பீரோவண்டை சென்று அதன் கதவுகளை இழுத்துப் பார்க்க, அவை திறப்புக்கு வரவில்லை. அந்த பீரோ ஒன்றரை ஆள் உயரம் உடையதாயிருந்தது. அதன் கதவுகள் மரப்பலகைகளால் ஆயிருந்தமையால், அதற்குள் என்ன இருந்ததென்பது தெரியவில்லை. அவர் உடனே அந்த அறையின் வாசற் கதவண்டை போய் அதை இழுத்துப் பார்த்தார். அது இறுகலாய்க் காணப்பட்டது. மின்சார சக்தியைக் கொண்டுதான் அதைத் திறக்கவேண்டுமென்று யோகீசுவரர் சொன்னது நினைவிற்கு வந்தது. ஆகவே, தாம் அந்த நிலைமையில் என்ன செய்வதென்பதைப்பற்றி அவர் எண்ணமிடலானார்.

அப்போது வீட்டின் கீழ் பாகத்தில் ஏதோ சாமான் நகர்த்தப்பட்ட ஓசை உண்டாகிக்கொண்டே இருந்தது.

அப்போது அந்த மனிதருடைய மனதில் ஒரு யுக்தி தோன்றியது. அவர் தமது மின்சாரக் கை விளக்கைத் திறந்து, அதற்குள் மின்சாரம் உற்பத்தி செய்த பாட்டரிகளில் (Battery) ஒன்றை வெளியில் எடுத்து, அதன் இரண்டு பக்கத்துக் கம்பிகளையும், அங்கு மேஜையில் இருந்த இரண்டாவது பொத்தானுக்குரிய கம்பிகளோடு இணைத்து வைத்துவிட்டு, அந்தப் பொத்தானை அழுத்த, உடனே தடாரென்ற ஓசை உண்டாயிற்று. அவர் உடனே வாசற் கதவண்டை போய் இழுத்துப் பார்க்க, அந்தக் கதவு திறந்துகொண்டிருந்தது. அவர் அங்கிருந்து, பீரோவண்டை போய்ப் பார்க்க, அதன் கதவுகளும் திறந்துகொண்டிருந்தன.

அவர் பீரோக் கதவுகளைத் திறந்து பார்க்க, அவை ஒரு வாசற்படியை மறைத்துக்கொண்டிருந்தனவென்பது தெரிந்தது. அதற்கப்பால் அறைபோல் இருந்த ஒரு கட்டிடம் காணப்பட்டது. அவருடைய மின்சாரக் கைவிளக்கு பெரிய விளக்காதலால், அதற்குள் மின்சாரம் உற்பத்தி செய்த பாட்டரிகள் மூன்று இருந்தன.

விலக்கப்பட்ட ஒன்று போக, இன்னம் இரண்டு பாட்டரிகள் இருந்தனவாதலால், அப்போது விளக்கு எரியக்கூடிய நிலைமையிலேயே இருந்தது.

ஆகையால், அந்த அன்னிய மனிதர் ஒரு கையில் கைவிளக்கையும், இன்னொரு கையில் ரிவால்வரையும் பிடித்துக்கொண்டு, பீரோவுக்குள் தெரிந்த வாசற்படியால், அதற்கப்பால் இருந்த அறைக்குள் நுழைந்தார். நுழைந்தவர் அந்த வாசற்படிக் கப்பால் சென்று திரும்பிப் பார்க்க, அங்கும் ஒரு பீரோ அந்த வழியில் மறைவாக வைக்கப்பட் டிருந்தது தெரிந்தது. அந்த அறையில் இன்னொரு வாசற்படி காணப்பட்டது. அதன் கதவு திறந்து கிடந்தது. அவர் அதன் வழியாக அப்பால் சென்று மேன்மாடம் முழுதிற்கும் போய் ஆராய்ந்து பார்க்க, யோகீசுவரர் எங்கும் காணப்படவில்லை. ஒருகால் அவர் கீழ்ப் பாகத்தில் இருக்கலாம் என்ற எண்ணம் அந்த அன்னியருடைய மனதில் உதித்தது. ஆனால், அதற்குமுன் கீழ் பாகத்தில் உண்டான ஓசை அப்போது கேட்கப்படவில்லை யாதலால், எங்கும் நிச்சப்தமே குடிகொண்டிருந்தது.

வெளியில் இருந்து எவரேனும் மேலே வந்தால், நடுவில் மூன்று அபாயங்கள் இருக்கின்றனவென்று யோகீசுவரர் கூறியது நினைவிற்கு வந்ததாகையால், அந்த மனிதர் தாம் மிக ஜாக்கிரதையாகக் கீழே இறங்கிப் போகவேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டு கீழே இறங்கும் படிக்கட்டிற்குச் சென்று பார்க்க, படிக்கட்டு மாயமாய் மறைந்து போய்விட்டது. அங்கு ஓரே பள்ளமாய் 12 அடி ஆழத்தில் தரை இருந்தது தெரிந்தது. பின்புறத்தில் இருந்த இரண்டாவது படிக்கட்டண்டை அவர் போய்ப் பார்க்க, அங்கும் அதே மாறுபாடு காணப்பட்டது.

ஜோசியரால் குறிக்கப்பட்ட அபாயங்களில் அது ஒன்றாயிருக்குமோவென்று அவர் சந்தேகித்தாராலும், அதனால் வெளியிலிருந்து வருபவருக்கு அபாயம் ஏற்படக் காரணமில்லையாதலால், வேறு அபாயங்கள் மூன்று இருக்கவேண்டுமென்று அவர் எண்ணிய சமயத்தில், வீட்டின் கீழ்ப்பாகத்திலிருந்து அபரிமிதமான புகைப்படலமும், நெருப்பு ஜ்வாலையும் கிளம்பி நாலா பக்கங்களிலும் வளைத்துக்கொள்ளத் தொடங்கின. எங்கும் பெட்ரோல் நாற்றம் சகிக்க முடியாமல் சூழ்ந்துகொண்டது. யோகீசுவரர் கீழ்ப் பாகத்தைக் கொளுத்திவிட்டுப் போயிருக்கவேண்டு மென்பது அவருக்கு உடனே விளங்கிவிட்டது. தாம் அங்கிருந்து எப்படித் தப்பி வெளியில் போவதென்பதை அறியாமல் அவர் தத்தளித்து அங்குமிங்கும் ஓடத் தலைப்பட்டார்.

---

# தேகாரோக்கிய தத்துவம்

## அத்தியாயம்—8

## IV. உதிரமய கோசம்

(முன் தொடர்ச்சி)

### 10. இரத்தம் சுத்தமாக்கப்படும் விதங்கள்

இரத்தம் மூன்றுவிதங்களில் சுத்தமாக்கப்படுகின்றது. (i) இருதயத்திலிருந்து இரைப்பை,குடல்கள் முதலியவைகளுக்குப் போய்ப் பரவி அங்கு அசுத்தமாக்கப்பட்டுத் திரண்டு திரும்பிவரும் இரத்தம் போர்ட்டல் வெயின் (Portal Vein) என்னப்படும் ஒரு பெரிய குழாயின்மூலம் ஈரல் குலைக்குப் போகிறது. அங்கு அசுத்தங்கள் எரிக்கப்பட்டு, பித்த நீராக மாற்றப்பட்டுப் போகின்றன. பித்த நீர் குடல்களின் வழியாக வெளிப்பட்டுவிடுகிறது. அது ஜீரண சம்பந்தமாய் எவ்வாறு உபயோகப்படுகிறதென்பதை ஜீரணமய கோசத்தில் பூர்த்தியாக விளக்கியிருக்கிறோம். இவ்வாறு ஈரல் குலையால் இரத்தத்தின் அசுத்தங்களில் பெரும்பாகமும் விலகிப்போவது ஒரு விதமான சுத்திகரிப்பு. இது போர்ட்டல் ஸர்க்குலேஷன் (Portal Circulation) என்று குறிக்கப்படுகிறது. (ii) அயோர்ட்டா என்னப்படும் பெரிய ஆர்ட்டரியிலிருந்து இரண்டு கிளைகள் சிறுநீர்ப்பை அல்லது குண்டிக்காய் (Kidneys) என்னப்படும் கருவிக்குப் போகின்றன. அங்கு இரத்தத்தில் கலந்துள்ள பெருவாரியான ஜலம், மூத்திர விஷம் முதலியவை இரத்தத்திலிருந்து விலக்கப்பட்டு, மூத்திர வடிவமாய் வெளிப்பட்டுப் போகின்றன. இந்த இரண்டாவது வித சுத்திகரிப்பு ரீனல் ஸர்க்குலேஷன் (Renal Circulation) என்று குறிக்கப்படுகிறது. (iii) மூன்றாவதுவிதம்

சுவாசப்பைகளில் நடக்கும் சுத்திகரிப்பு. இங்கு இரத்தத்தில் உள்ள கரியமல வாயு பிரிந்து நமது மூக்கின் வழியாய் வெளிப்படுகிறது. இதை நாம் முன்னரே விரிவாக விளக்கி இருக்கிறோம். இது பல்மோனரி ஸர்க்குலேஷன் (Pulmonary Circulation) என்று குறிக்கப்படுகிறது.

## 11. நிண நீர், அல்லது, ஊன் ஜலம்

**ஊ**ன் ஜலம், அல்லது, ஊன் தண்ணீர் என்பது எல்லோருக்கும் சாதாரணமாகத் தெரிந்த வஸ்து. அதை இங்கிலீஷில் லிம்ப் (**Lymph**) என்று குறிக்கிறார்கள். நம் உடம்பில் நெருப்புக் கொப்புளம், செருப்புக்கடியினால் ஏற்பட்ட கொப்புளம், அம்மைக் கொப்புளம் முதலியவை ஏற்படும்போது, அந்த கொப்புளங்களில் நிறைந்திருக்கும் தெளிவான ஜலமே நிணநீர், அல்லது, ஊன் தண்ணீர் என்று குறிக்கப்படுகிறது. நம் உடம்பின் மேல்தோல் வழுவுண்டு போகுமானால், அப்போதும் ஊன் தண்ணீர் கசிவதை நாம் பார்க்கிறோம். அது எங்கிருந்து வருகிறது, அதில் என்னென்ன பொருள்கள் அடங்கி இருக்கின்றன, அதன் உபயோகம் என்ன என்னும் தகவல் நமக்குத் தெரியாது.

**ந**ம் உடம்பில் உள்ள ஒவ்வொரு ஜீவ அணுவுக்கும் தேவையான பிராணவாயு, சர்க்கரை, கரு முதலிய ஆகார வஸ்துக்கள் இரத்தத்தின்மூலம் பரவுகின்றன. மயிரிழைகளிலும் நுட்பமான **காப்பில்லரிகள்** ஒவ்வோர் அணுவிற்குப் பக்கத்திலும் போகின்றனவானாலும், அவை குழாய்களாயிருப்பதால், இரத்தம் அவற்றிற்குள்ளேயே அடங்கி இருக்கிறது. மயிரிழை போன்ற குழாய்களின் தோலின் வழியாகக் கசிந்து வெளிப்படும் நீரே நிணநீர், அல்லது, ஊன் தண்ணீர் என்று குறிக்கப்படுகிறது. இரத்தத்தில் உள்ள சிவப்பு கார்ப்பஸில்ஸ் நீங்கலான மற்ற பகுதியையே ஊன் தண்ணீர் என்று நாம் குறிக்கிறோம். அதாவது, நிறமற்றதான **பிளாஸ்மா** என்னும் பகுதியில் சிறிதளவே இவ்வாறு காப்பில்லரிகளின் தோல் மூலம் கசிந்து வெளிப்பட்டு ஜீவ அணுக்களை யெல்லாம் நனைத்து அவைகளுக்குத் தேவையான ஆகார ஸத்துக்களை உதவுகிறது.



சிவப்பு கார்ப்பஸில் காப்பில்லரிகளை விட்டு வெளிப்படுவதில்லையானாலும், அவைகளில் உள்ள பிராணவாயு மாத்திரம் பிரிந்து குழாய்த்தோலின் வழியாக ஊன் தண்ணீரோடு வெளிப்பட்டு ஜீவ அணுக்களுக்குப் பயன்படுகிறது. அங்கங்கு உற்பத்தியாகும் கரியமலவாயு தோலின் வழியாக காப்பில்லரிகளுக்குள் நுழைந்து கொள்வதால், அது வெயின்களின் மூலம் இருதயத்தின் வலது பக்கத்தை யடைந்து, அங்கிருந்து சுவாசப்பைகளுக்குப் போய் மூக்கின் வழியாக வெளிப்பட்டுப்போகிறது.

**ஊ**ன் தண்ணீர் எவ்வித நிறமுமற்றதாய் பளிங்குபோல் இருக்கிறது. அதில் தண்ணீர், உப்புகள், கரு முதலிய பல வகையான வஸ்துக்கள் கரைந்து கிடக்கின்றன. அதில் வெள்ளை கார்ப்பஸில்ஸும் இருக்கின்றன. இரத்தம் குழாயை விட்டு வெளிப்பட்டால் எப்படி உறைந்துபோகிறதோ, அதேபோல, ஊன் தண்ணீரும், உடம்பை விட்டு வெளிப்பட்டால், இறுகிப் போகும்.

**இ**வ்வாறு காப்பில்லரிகளின் மேல்தோல் மூலம் வெளிப்படும் பிளாஸ்மா என்னப்படும் ஊன் தண்ணீர் அசுத்தங்களுடன் உடனுக்குடன் காப்பில்லரிகளுக்குள் திரும்பிப் போய்விடுகிறதில்லை. ஏனென்றால், இருதயத்திலிருந்து மேன்மேலும் தள்ளிவிடப்படும் இரத்தம் விசையாக வந்துகொண்டே இருக்குமாதலால், அசுத்தங்களோடு கூடிய ஊன் தண்ணீர் காப்பில்லரிகளுக்குள் நுழைய முடிகிறதில்லை. அப்படியானால், அது எங்கே போகிறது? இரத்தத்திலுள்ள பிளாஸ்மா முழுதும் வெளிப்பட்டு திரும்பாமலேயே இருந்துவிட்டால் இரத்தம் கெட்டியாய்விடு மல்லவா. அதுவுமன்றி, தசைகளுக்குள் ஏராளமான ஊன் தண்ணீர் நிறைந்துபோவதால் அவை உப்பிப்போகு மல்லவா. ஆகையால் உடம்பின் பல இடங்களிலும் தசைகளை நனைத்துக்கொண்டிருக்கும் ஊன் தண்ணீர் பிரத்தியேகமான குழாய்களின் மூலம் ஒன்றுசேர்ந்துகொண்டே போய், நமது கழுத்தின் அடியில் இடது பக்கத்தில் உள்ள சில **வெயின்களில்** நுழைந்து, இரத்தத்தோடு கலந்து இருதயத்திற்குப் போய்ச் சேருகிறது. இவ்வாறு ஊன் தண்ணீர் பிரத்தியேகமாகச்

செல்லும் குழாய்களைக் காட்டும் படமொன்று இங்கு சேர்க்கப்பட்டிருக்கிறது. அதில் கோடுகளாயிருப்பவைகளே ஊன் தண்ணீர்க் கால்வாய்கள். இந்தக் குழாய்த் தொகுதியை **லிம்பாடிக் ஸிஸ்டம்** (Lymphatic System) என்று குறிக்கிறார்கள். அதாவது நிணநீர், அல்லது, **ஊன் தண்ணீர் வடிகால்** என்பது அதன் கருத்து. இரத்த ஓட்டத்திற்கும், ஊன் தண்ணீரின் ஓட்டத்திற்கும் ஒரு முக்கியமான வேறுபாடு இருக்கிறது. ஊன் தண்ணீர் ஓர் இடத்தில் ஆரம்பித்து, இன்னோர் இடத்தில் முடிந்துபோகிறது. ஆனால் இரத்தம் ஓயாமல் சுற்றிச் சுற்றி வந்து திரும்பிக்கொண்டே இருப்பதால், அதற்கு ஆரம்பம் எங்கே, முடிவு எங்கே என்பதைச் சொல்வது சாத்தியமானதல்ல. அதன் சுற்றுப் பிரதட்சிணம் முடிவில்லாததாயிருக்கிறது. கோடிக் கணக்கில் நிறைந்து கிடக்கும் ஜீவ அணுக்களைச் சுற்றிலும் உள்ள இடைவெளிகளிலிருந்து ஊன் தண்ணீர் வடிகால்கள் தொடங்குகின்றன. அவைகளை நாம் **லிம்பாடிக் ஸிஸ்டத்தின்** ஆரம்பம் என்று கருதலாம். சிறிது சிறிதாயிருக்கும் ஊன் தண்ணீர்க் கால்வாய்கள் சேர்ந்து படிப்படியாய்ப் பெருத்து, கடைசியில் இரண்டு பெரிய குழாய்களாய் மாறுகின்றன. இவற்றின் வழியாகத் திரண்டுபோகும் ஊன் தண்ணீர் கழுத்தின் அடியில் உள்ள இரண்டு வெயின்களுக்குள் நுழைந்து இரத்தத்தோடு சேர்ந்துகொள்ளுகிறது. இதோடு சேர்க்கப்பட்டிருக்கும் படத்தில், கீழ் பாகத்தின் சிறிய கால்வாய்கள் இடுப்பண்டை ஒன்றாய்ச் சேருவதை நாம் பார்க்கலாம். அவைகளின் சேர்க்கையான பெரிய





குழாய் மார்பெலும்பின் முன்பக்கமாய் மேலே ஏறிப்போவதையும் நாம் பார்க்கலாம். இது **தோரகிக் டக்ட்** (Thoracic Duct) என்று குறிக்கப்படுகிறது. இதுதான் எல்லாவற்றிலும் பெரியது. இது சுமார் கால் அங்குல தடிப்புள்ளது; அதாவது, ஓர் இறகு பேனாவின் பருமன் இருக்கும்.

இன்னொரு பெரிய குழாய் கழுத்தண்டை இருக்கிறது. அது **ரைட் லிம்பாடிக் டக்ட்** (Right Lymphatic Duct) என்று குறிக்கப்படுகிறது. வலது பக்கத்து ஊன் தண்ணீர்க் கால்வாய் என்பது அதன் கருத்து. அவ்வாறு அதற்குப் பெயர் உண்டானதற்கு ஒரு காரணம் இருக்கிறது. தலை, கழுத்து, மார்பு ஆகியவற்றின் வலது பக்கங்களிலும், வலது கையிலும் கசியும் ஊன் தண்ணீர் முழுதும் இந்தக் கால்வாய்க்கு வந்து சேருகிறதாகையால், இது வலது கால்வாய் என்று குறிக்கப்படுகிறது. இவைகள் நீங்கலாக, உடம்பின் மற்ற எல்லா இடங்களிலும் கசியும் ஊன் தண்ணீர் முழுதும் திரண்டு **தோரகிக் டக்ட்** என்று குறிக்கப்படும், மார்புக் கால்வாயின் வழியாக வந்து வெயினில் நுழைந்து இரத்தத்தோடு சேர்ந்துகொள்ளுகிறது. இவ்வாறு இரண்டு பெரிய கால்வாய்களின்மூலம் திரண்டுவரும் ஊன் தண்ணீரில், விலக்கப்படத்தக்க அசுத்தங்களும், மறுபடி ஆகாரமாய் உபயோகிக்கப்படத் தகுந்த பொருள்களும் இருக்கும்.

ஊன் தண்ணீர்க் கால்வாய்களின் போக்கு ஒழுங்கீனப்பட்டுப் போவதனாலேயே குழந்தைகளுக்கு வயிற்றில் கட்டி விழுகிறது. காப்பில்லரிகளிலிருந்து கசிந்து அணுக்களை நனைக்கும் ஊன் தண்ணீர் அதிகமாய்த் தேங்காமல் போக்குக் கால்வாய்களின்மூலம் போய்க்கொண்டே இருக்கவேண்டும். இல்லாவிடில், மேன்மேலும் ஊன் தண்ணீர் சேருவதால் அந்த இடம் வீங்கிப்போகத் தொடங்குகிறது. குழந்தைகளுக்கு கட்டி விழ ஆரம்பிக்கும்போது முதலில் கால்களில் வீக்கம் உண்டாவதை நாம் பார்க்கலாம். ஊன் தண்ணீர்க் கால்வாய்கள் இடுப்பில், அதாவது இரைப்பைக்குப் பக்கத்தில் ஒன்று சேரும் இடத்தில் ஒரு பெரிய தேக்கம் ஏற்பட்டுப் போவதால், குழந்தைகளுக்கு வயிறு அமிதமாய்ப் பெருத்துப் போகிறது.

வயிற்றில் அடர்த்தியாய்க் காணப்படும் ஊன் தண்ணீர்க் கால்வாய்கள் ஒரு முக்கியமான வேலை செய்கிறது. குடல்களில் ஜீரணிக்கப்படும் கொழுப்பு ஸத்துகளை அவை இழுத்து இரத்தத்தில் கொண்டுபோய் சேர்க்கின்றன. வயிற்றில் கொத்தாய்க் காணப்படும் ஊன் தண்ணீர்க் கால்வாய்கள் **லாக்டீல்ஸ்** (Lacteals) என்று குறிக்கப்படுகின்றன.

இவ்வாறு செல்லும் ஊன் தண்ணீர்க் கால்வாய்த் தொகுதிகளில் அங்கங்கு சில தங்கு மடங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவை வலைபோன்ற அடர்த்தியான ஜீவ அணுக்களால் ஆய், மொச்சைப் பருப்பின் வடிவமாய் அமைந்திருக்கின்றன. அவற்றின் ஒரு பக்கமாய் ஊன் தண்ணீர்க் கால்வாய்கள் உள்ளே நுழைந்து மறு பக்கத்தால் வெளியில் போகின்றன. அந்த இடத்தில் ஊன் தண்ணீர் சுத்தமாக்கப் படுகிறது. அதுவன்றி, இரத்தத்தில் காணப்படும் வெள்ளைக் கார்ப்பஸில்ஸ் அந்த இடங்களிலேயே உற்பத்தியாய், ஊன் தண்ணீரோடு சென்று இரத்தத்தில் கலந்துகொள்ளுகின்றன. இவ்விதமாய் அமைக்கப்பட்டுள்ள இடங்கள் களண்ட்ஸ் (Glands) என்று குறிக்கப்படுகின்றன.

இவ்வாறு திரளும் ஊன் தண்ணீர் ஒரே முகமாய் ஓடும்படி செய்வது எந்த சக்தி என்பதையும் நாம் கவனிப்போம்.

இருதயம் சுருங்கிச் சுருங்கி விரிவதால் இரத்தம் ஆர்ட்டரிகளுக்குள் தள்ளிவிடப்படுகிறதென்பதையும், அந்த வேகம் காப்பில்லரிகளில் மிக சொற்பமாகவே உறைக்கிறதென்பதையும் நாம் முன்னரே தெரிந்துகொண்டோம். ஆகையால், காப்பில்லரிகளிலிருந்து கசியும் ஊன் தண்ணீரை ஒன்றாகத் திரட்டி பிரத்தியேகமான கால்வாய்களின்மூலம் தள்ளிக்கொண்டு வருவது இருதயத்தின் விசை என்று நாம் கருதக்கூடாது.

காப்பில்லரிகளுக்கு அப்பாலுள்ள, அவற்றின் தொடர்ச்சியான வெயின்களில் எப்படி இடையிடையில் கபாடங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றனவோ, அதுபோல, ஊன் தண்ணீர்க் கால்வாய்களிலும், கபாடங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ௸ கால்வாய்கள் பார்வைக்கு மணிக்கோவைபோலவே இருக்கும். ௸ கபாடங்கள் ஒரேபக்கம் போகத்தான் வழிவிடுமன்றி திரும்பிவர விடாமல் வழியை மறைத்துக்கொள்ளும். உடம்பில் உள்ள ஒவ்வோர் இடத்தின் தசைகளும் எப்போதும் ஏதேனும் வேலை செய்து அசைந்துகொண்டே இருப்பதால் ௸ அசைவு அங்கங்கு கசியும் ஊன் தண்ணீரை கால்வாய்களுக்குள் தள்ளிவிடுகிறது. அது திரும்பிவராமல் மேன்மேலும் போய்க்கொண்டே இருக்கிறது. நாம் எப்போதும் நமது உடம்பிற்கு உழைப்பைக் கொடுத்துக்கொண்டே இருக்கவேண்டியது அத்தியாவசியமானதென்பது இதனால் விளங்குகிறது. உடம்பின் தசைகள் உழைப்பின்றி ஓய்ந்திருந்தால், ஊன் தண்ணீர் அங்கங்கு அமிதமாய்த் தேங்கிப் போகிறது. அசுத்தங்கள் விலக வகையின்றி உடம்பிலேயே இருந்துவிடுகின்றன. அதனால் தொந்தி, சதை மடிப்பு முதலிய அமிதமான பெருக்கங்கள் உண்டாகிவிடுகின்றன. நன்றாக உழைத்து வேலை



செய்கிறவர்களுடைய உடம்பு இறுகலாய் இருக்கும். எப்போதும் உட்கார்ந்து வர்த்தகம் முதலியவைகளை நடத்தும் கடைக்காரர்கள் முதலியோருடைய உடம்பு விகாரமாய் உப்பிப்போவதை நாம் காண்கிறோம். ஊன் தண்ணீர் உடனுக்குடன் விலகாமல் அமிதமாய்த் தேங்கிப்போவதே இதற்குக் காரணம். குழந்தைகள் விஷமம் செய்கிறதென்று கருதி தாய்மார் அவைகளை எப்போதும் தொட்டில், ஏணை முதலியவைகளில் போட்டு வைப்பதே வயிற்றில் கட்டி முதலிய விழுவதற்கு பெரும்பாலும் காரணமாய் அமைகிறது. அவைகள் எப்போதும் கைகால்களை அசைத்து ஓடி ஆடி உடம்பிற்கு அசைவைக் கொடுத்துக்கொள்ளும்படி செய்தால், அத்தகைய குழந்தைகளுக்கு கட்டிவிழுவது அரிது. ஊன் தண்ணீரின் ஒழுங்கான வடிகாலிலேயே, நமது உடம்பின் அசுத்தங்கள் கழிவது அடங்கி இருப்பதால், அதற்கு அத்தியாவசியமான உழைப்பை நாம் உடம்பின் எல்லா பாகங்களுக்கும் கொடுத்துக்கொண்டே இருக்கவேண்டும்.

உடம்பை ஆரோக்கியமாய் வைத்துக்கொள்ள வேண்டுமானால், நல்ல ஆகாரம், சுத்தமான காற்று, உடம்பின் உழைப்பு, கணக்கான ஓய்வு ஆகியவை அத்தியாவசியமான அம்சங்கள். நல்ல ஆகாரம், சுத்தமான காற்று ஆகிய இரண்டும் இருந்தாலும், சரியான உழைப்பில்லாவிடில், உடம்பிற்குள் ஏற்படும் அசுத்தங்கள் உடனுக்குடன் விலகாமல் தேங்கிப் போவதால், மேற்கூறிய இரண்டும் பயனற்றவை ஆய்விடுகின்றன.

இரத்தம் அசுத்தப்பட்டுப் போனால், அதை மருந்துகளைக் கொண்டே சுத்தப்படுத்திவிட வேண்டுமென்று நினைப்பது தவறு. இரத்தத்தில் எப்போதும் அசுத்தங்கள் திரண்டுகொண்டே இருக்குமாதலால், அவைகளை விலக்குவதற்கு உடம்பின் உழைப்பே முதன்மையான மருந்தன்றி, இன்னம் அதிகப்படியாக இதர வஸ்துக்களை இரத்தத்தில் கலப்பது நீடித்த பலனைத் தரத்தக்கதல்ல. அசுத்தங்களை முறிக்கக்கூடிய மருந்துகளை நாம் நிரந்தரமாய் சாப்பிட்டுக்கொண்டே இருப்பது . அநுபவசாத்தியமான காரியமல்ல.

உடம்பின் உழைப்பினால் அதிகமான பிராணவாயு உடம்பில் நுழைகிறது. இரத்த ஓட்டமும், ஊன் தண்ணீரின் ஓட்டமும் துரிதப்படுகின்றன. அதனால் உடம்பில் ஒன்பது விதமான மாறுதல்கள் உண்டாகின்றன. அவையாவன:—

(i) காப்பில்லரிகள் விரிவதால் உடம்பின் மேல் தோலுக்கு ரோஜாநிறம், புது மினுமினுப்பு, மழமழப்பு முதலிய இலட்சணங்கள் உண்டாகின்றன. வியர்வை வெளிப்படுவதால், தோலில்

உள்ள ஜீவ அணுக்கள் யாவும் சுத்தப்படுத்தப்பட்டு, புத்துயிர் பெறுகின்றன.

(ii) உடம்பின் மேல்தோலிற்கு அடியில் மெத்தைபோல் அமைந்துள்ள கொழுப்பு அதிகமாயிருந்தால், தேக உழைப்பின் சூட்டினுல், அது உருகிக் குறைந்துபோகிறது. அடி கொழுப்பு மிக சொற்பமாயிருந்தால், துரிதமாக வரும் இரத்தத்தில் உள்ள கொழுப்பு ஸத்து அதை வளர்க்கிறது.

(iii) அடி கொழுப்பிற்கு அடியில் உள்ள தசைகளுக்கும் சரியான புஷ்டி கிடைப்பதால் அவை இறுகலாகவும், உரமாகவும், பெரிதாகவும் மாறுகின்றன.

(iv) தசைகள் நல்ல நிலைமையில் இருந்தால், அவைகளுக்கு உள்பக்கத்தில் இருக்கும் எலும்புகள் செழிப்பாக வளருகின்றன. அவைகளில் தேய்வு, வளைவு, ஊனம் முதலிய கெடுதல்கள் ஏற்படுகிறதில்லை. உடம்பின் அஸ்திவாரமான எலும்புக்கூண்டு நல்ல நிலைமையில் இருந்தால், மனிதனுக்கு உரமும், ஆரோக்கியமும், ஆயுளும் அதிகரிக்கின்றன.

(v) அதிக உழைப்பினுல், இரத்தத்தோடு சேரும் அதிகப்படியான பிராணவாயு மூளைக்குள் புகுந்து, அதன் அசுத்தங்களை விலக்கி, மனதைத் தெளிவுபடுத்தி, மனிதனுடைய மூளையின் வேலைத்திறத்தை அதிகப்படுத்துகிறது.

(vi) அதிக உழைப்பினுல், சுவாசப்பைகள் விரைவில் சுருங்கி விரிவது, அதில் கபம் முதலிய தோஷங்கள் சேராமல், அதை ஆரோக்கியமான நிலைமையில் வைக்கிறது.

(vii) நாம் உழைத்து வேலை செய்வதால் நம் இருதயத்தின் வேலையும் அதிகப்படுவதால், அதுவும் சுத்தமாயும் ஆரோக்கியமாயும் இருக்கிறது.

(viii) உடம்பின் உழைப்பினுல் உண்டாகும் சூடு நம் இரப்பையிலுள்ள கொழுப்பு முதலிய பதார்த்தங்களை உருக்கி ஜீரணமாக்கிவிடுகிறது. எல்லாத் தசைகளுக்கும் அதிகப்படியான ஆகாரம் தேவையாய்விடுவதால், அதற்கு ஈடு செய்ய, வயிறு ஜீரண வேலையை துரிதமாய் நடத்துகிறது. நமக்கு சரியான பசி உண்டாகிறது. நல்ல பசியே உடம்பின் ஆரோக்கியத்திற்கு ஓர் அறிகுறி.

ஊன் தண்ணீரின் ஓட்டம் துரிதப்படுவதால், ஒவ்வொரு தசைக்கும் ஊன் தண்ணீர் புதிது புதிதாய் வருகிறது. மனிதர் எப்போதும் உற்சாகமாயும், உல்லாசமாயும் இருக்கும் தன்மை வளரும். பலவிதமான துர்க்குணங்கள் விலகவும் அது சாதனமாகும்.

---

## காட்சி—3

[கோச்சியின் சிற்றரசனுடைய அரண்மனையில் ஒரு மண்டபம். பார்ப்பதியும், அந்த அரண்மனையின் சர்வாதிகாரியான சங்கரனும் உரையாடுகின்றனர்.]

**பார்ப்பதி**

என்னே உரைத்தீர்! ஏன்உமை அடித்தனர்?
முன்னே தந்தையார் மொழிந்தனர் வசைகளை.

**சங்கரன்**

பகடிகள் பேசின விகடனை முனிந்தேன்;
அதற்கெனை முதியவர் அடித்தனர் பன்முறை.

**பார்ப்பதி**

ஐயகோ கொடுமையே! ஆனதே துன்பமாய்.
வெய்யகோ னல்பகல் வெகுண்டெனை உரப்பினன்;
காரண மின்றியே கடிந்தனன் எவரையும்;
பூரணப் பித்தனாய்ப் போயின ேனா? இனி
கணமிது பொறுத்திடேன்; கண்டால் மறைவீர்.
பணிகள் குறைத்தலே பலன்தரு மாதலான்,
ஏவலர் அருகினில் ஏகா தகற்றுவீர்.

**சங்கரன்**

மேவினர் முதியவர் வெகுண்டதோ விரைவினில்.

**பார்ப்பதி**

ஓயாச் சீற்றமேன்? உற்றதென் இவர்க்கு?
பேயே போலப் பிதற்றுகின் றனரே!
கண்டால், காட்டுவீர் வெறுப்பும் சோர்வும்;
விண்டால் வசைகளை, விரைவீர் அப்பால்.
இழந்ததன் தலைமையை இன்னமும் வகித்திட
விழைந்தனன் போலும்; வெருட்டுவேன் முதியனை.
எந்தை வெறுக்குமேல் இன்னொரு மகளிடம்
முந்தி விரைதலே முறையெனக் கூறுவேன்.
வயது முதிர்ந்திட மடமை பொதிர்ந்ததே!

நயமொழி யற்றனன் நகையா முகத்தினன்.
என்னே கூக்குரல்! ஏகுவோம் வம்மின்.
முன்னே நிற்பது முடியும் இன்னலில்.
புன்சொலும், வசையும் பொறுத்திடேன் இனியான்.
வன்சொல் தருதலில் மறைதலே நன்றும்.
ஆதலின் வருவீர்; அகல்வோம் அப்பால்.

[போய்விடுகின்றனர்.]

## இந்தக் காட்சியின் விஷயச் சுருக்கம்

[கொச்சி அரண்மனையில் பார்ப்பதியும், சர்வாதிகாரி சங்கரனும் சந்தித்துப் பேசுகின்றனர். சேரன் தன்னைப் பன்முறை அடித்ததாய் சங்கரன் பார்ப்பதியிடம் முறையிட, அதன் காரணம் என்னவென்று அவள் கேட்கிறாள். சேரனோடு கூடவே இருக்கும் அவனுடைய விகடன் தன்னைப் பார்த்துப் புரளியான சொற்களை உபயோகிக்க அதைப்பற்றி தான் ஆட்சேபித்ததைக் கண்டு, சேரன் தன்னை அடித்ததாக சங்கரன் தெரிவிக்கிறான். பார்ப்பதி தன் தந்தை எப்போதும் எல்லோரிடத்திலும் கடுமையாகவும், மூர்க்கமாகவும் நடந்துகொள்வதைப்பற்றி வருந்தி, சங்கரனுக்கு யுக்தி சொல்லிக் கொடுக்கிறாள். சேரனுக்கு மற்றவர் செய்யும் பணிகளைக் குறைத்துவிட்டால், அவனுக்கு நற்புத்தி பிறக்குமென்றும், அவனும் வேலைக்காரர்களும் சேரனுக் கருகில் நெருங்காமல் தூரவே இருக்கும்படியும், அவன் கோபித்தால், வெறுப்போடும் அசட்டையாகவும் தூரப் போய்விடவும் அவனுக்கு யுக்தி சொல்லிக் கொடுக்கிறாள். அப்போது சேரன் கூச்சலிட்டுக் கொண்டு தூரத்தில் வந்த ஓசை உண்டாகவே, அவனைப் பார்க்காமல் விலகுவதே நல்லதென்று பார்ப்பதி கருதி சங்கரனுடன் அப்பால் போய்விடுகிறாள்.]

## காட்சி—4

[அதே அரண்மனையில் வேறோர் இடம். சேரனுடைய மாமன் மகனான பப்பநாபன் மாறு வேடம் பூண்டு அங்கே வருகிறான்.]

மாமன் மகனெனும் மதிப்பெலாம் இழந்தேன்.
சேமமும், நாடும், செல்வமும் போயின.
அன்பெலாம் சேரனுக் கருப்பணம் செய்தவென்
நன்மை மறந்தெனை நாயென ஓட்டினன்.
கோவப் பிணிமிகக் கொண்டிடு மாந்தர்
பாவச் செயலெனப் பகுத்தெதை யறிகுவர்!
உறவையு மெண்ணார்; உற்றன மறப்பர்;
மறச்செயல் துணிவர் மாபெரும் பகைவராய்.
சினமே செய்தது; சேரனென் செய்குவன்!
எனையிவர் கடிந்தது கருதிலேன்; இவர்பால்
வைத்த அன்பெனை வலித்தது இங்ஙனம்.
மெத்தவும் இளைத்தனர் மெலிந்தனர் பெரியார்!
ஏவலர் முதியரை எங்ஙன மிகழ்ந்தனர்!
கோவெனு மாண்பெலாம் குலைந்ததே ஐயகோ!
என்னே இழிவு! இழிவினி இழியுமே!
முன்னே வஞ்சக மொழிகளால் மயக்கிய
மூத்தவள் வன்சொலால் முதியரை எதிர்த்தனள்.
காத்துடன் இருந்து காப்பேன் மன்னரை;
தருணம் நோக்கியான் தகைவரின் தொல்லைப்
பெருமையை மீட்பேன்; பேணுவேன் மாண்பொடு;
வீசையை வளர்த்துயான் வேறுரு வெய்தினேன்;
ஏசிய முதியரின் ஏவலன் ஆகிறேன்.
[அப்போது சேரனும், அவனுடைய வீரர்களும் வருகின்றனர்.]

**சேரன்**

என்னவித் தொல்லையென் மடமையால் எழுந்தது!
அன்ன விசாரம் அலைக்குமோ முதுமையில்!
விதியோ! மூட மதியின் பயனிதோ!
பசியால் அயர்ந்தேன்; பதறின உயிர் மெய்;
புசியா திருப்பது புதல்வி யறியுமோ!
மதிப்பவர் இலரே! மாண்பெலாம் போனதே!

(பப்பநாபனைப் பார்த்து)
புதியவ னாரிவன்! போந்ததேன் என்வயின்!
[பப்பநாபன் சேரனைப் பார்த்து வணக்கமாய்க் கும்பிடுகிறார்]
யாரடா வந்தவன்? கூறடா சுருங்க நீ.

**பப்பநாபன்**

ஐயனே! ஏழையோர் ஆண்மகன் சுருக்கமாய்!

**சேரன்**

பையனே! நன்று நீ பகர்ந்தனை; சுருங்கிய
ஆண்மகன் சுருங்கிய அரசனுக் கென்செயும்?

**பப்பநாபன்**

என்செயல் யாதென என்முகம் செப்பும்;
நன்றுயான் பணிவேன் நம்புமென் தலைவனே;
ஆண்மையும், வாய்மையும் அடிமையின் அணிகள்;
வீண்மொழி பேசிடா விவேகியே ஆயின்,
அவனுடன் மொழிதலை யதிகம் நத்துவேன்;
அவனியை அளிப்பவ னாணைக் கஞ்சுவேன்.
அவசிய மேற்படில் அமர்மேற் கொள்ளுவேன்;
தவஇழி பொய் புலால் தள்ளிய தூய்மையேன்.

**சேரன்**

நன்மொழி தந்தனை! நாமம் யாதுகொல்?

**பப்பநாபன்**

என்பெயர் வீசையன்; என்பணி கொள்ளுக.

**சேரன்**

ஏழையாம் என்றனுக் கேவலன் தேவையேன்?
கூழிற் கழும்யான் கொடுப்பது யாதுகொல்?

**பப்பநாபன்**

சிறுமையே சிறுமைக் கேற்றநற் றுணைவனும்;
வெறுமையே வெறுமைக் குரிய சகோதரம்.
தாளம் போடுவேன் தலைவன் அழுதால்.
மேளம் போலாம்; விசனமு மினிக்கும்.



**சேரன்**

வீசையா, மெய்ச்சினேன்! மிகவே மகிழ்ந்தேன்.
பேசிய நின்மொழி பெருங்கருத் துடையது!
தருணத் துதவும் தன்மைய னாகலின்
வருவா யென்னுடன் வகுப்பன புரிகுவாய்.
ஆகா! என்கொலோ அசனமேன் கண்டிலேன்!
போகா தென்னுயிர் பொறியெலி ஆனதே!
எங்கடா சென்றன் சங்கரத் திமிரன்!
சங்கட மானதே! எங்கென் விகடன்?

(சங்கரன் வருகிறன்)

**சேரன்**

சங்கரப் பதரே! எங்கடா பார்ப்பதி?

**சங்கரன்**

பதரோ சங்கரன்! பகருவேன் அரசிபால்.

**சேரன்**

என்னே இளப்பம்! இவனிது சொல்வனே!
மன்னே, நினக்கு மாண்பிலை துரியதே!
விகடனைக் கண்டிலேன், வீணனெங் கேகினன்!
பகடிகள் கேட்பது பசிக்கோர் விருந்தாம்.
பார்ப்பதி எங்குளாள் பார்த்திவ னழைமின்.
சங்கரப் பேதையை சடுதியில் கொணருமின்.

**ஒரு வீரன்** (போய்த் திரும்பிவந்து)

நுங்கடம் மகட்கு நோயென மொழிந்தனர்.
சங்கரன் மறுத்தனன் இங்ஙனம் வந்திட.

**சேரன்**

மறுத்தன னேஅவன்! மாபெரும் விந்தையே!
கருத்தென்? அதையவன் கழற வில்லையோ?

**வீரன்**

அண்ணலே, கருத்தையா னறிந்திட லாற்றேன்.
கண்ணியம் விடுத்தனர் கட்டா யனைவரும்.

மணமகக் குரிசிலும், மங்கைநுஞ் செல்வியும்,
பணிபுரி பவர்களும் பண்பில் திரிந்தனர்.
முன்னெமை யோம்பிய முறைமையு மொழிந்தது.
ஏகா திங்கினி இருப்பது கேடாம்.

**சேரன்**

ஆகா! நீயு மங்ஙன நினைத்தையோ!
ஐயமுற் றேனதை அறைந்தனை நீயும்.
அருமருந் தனையவென் னுருயிர்ப் பார்ப்பதி
புரிந்திடா ளிதையெனப் பொறுத்தே னென்மனக்
கனவெனக் கருதியான் கவலா திருந்தேன்.
நனவிது வானதோ! நன்றே யாவும்.
சகடக் காலெனைத் தாழ்வினில் விடுத்ததோ!
விகடனெங் கேகினன் விரைவில் கொணர்குவீர்.

**ஒரு வீரன்**

கலங்கினன் விகடன் இலங்கை மனத்தனாய்!
கடைமகள் மறைந்த கணமுதல் அன்னவன்
இடையறு தழுதனன்; ஏங்கியே படுத்தனன்.

**சேரன்**

அவள்மொழி வேண்டேன்; அகன்றுநீ விரைவில்
இவளுடன் உரைதர எண்ணினே னென்பது
கூறுதி; மறுமொழி கொண்டுவா இங்ஙனம்.

(சங்கரன் வருகிறன்)

**சேரன்**

சங்கரப் பெரியீர்! எங்கிவண் உற்றீர்?
யாவன் என்றெனை அறிந்தனிர் கொல்லோ?

**சங்கரன்**

அறிவேன்; எம்தம் அரசியை ஈன்றவர்.

**சேரன்**

வெறியோன் ஈன்ற மேதகு சுணங்கனே!
நன்றியை உணர்கிலா நாயினும் கடையனே!



**சங்கரன்**

சென்றிவை யுரைப்பேன் செல்விமாட் டிவ்வசை
பொருந்தா வெனக்கினி புகலேல் புன்மையை.

**சேரன்**

திருந்தாக் கயவனே, சினந்தனை யோஎனை?

[சேரன் சங்கரனை அடிக்கிறன்.]

**சங்கரன்**

புடையேல் ஐயனே; போதுநும் முனிவு.

**பப்பநாபன்**

கடையனே, அடியினால் கண்ணியம் பெற்றனை.
அடிமையின் உதையே அடக்குநின் மமதையை.

[பப்பநாபன் சங்கரனைப் பன்முறை காலால் எற்றிக் கீழே வீழ்த்துகிறன்.]

**சேரன்**

மெய்ச்சினேன் வீசையா! மெத்தவும் உதவினை.
நச்சுவே னுன்னையான்; நன்மை மறிந்திடேன்.

**பப்பநாபன்**

சங்கரா, எழுந்திரு; சங்கதி தெரிந்ததா!
இங்கினி இருந்தால் இன்னமும் பெறுவாய்.
[கழுத்தைப் பிடித்து அவனை நெட்டி அப்பால் தள்ளுகிறன்]

**சேரன்**

நண்பனே வீசையா, நன்றுநீ செய்தது!

[விகடன் வருகிறன்]

**விகடன்**

நூதனச் சேவகா, யாதுநீ புரிந்தது!
விகடன் குல்லா அணிந்திடு விரைவினில்.

[விகடன் தன் கோமாளிக் குல்லாவை எடுத்து பப்பநாப னிடம் கொடுக்கிறன்]

**பப்பநாபன்**

பகடியோ இதுவும்! பகருவாய் காரணம்.

**விகடன்**

புரிந்தநின் செய்கை திருந்திய தன்றாம்.
குளிர்காற் றினிதென் றொருங்கே குலவினாய்;
சளிநோய் பெறுவாய் சடுதியில் திண்ணமாய்.
இத்தளர் முதியவர் நத்தினர் இருவரை;
பெருநிதி வழங்கிப் பெற்றனர் கடும்பகை.
எண்ணில ராயினும் திண்ணிய மாதவி
நண்ணினள் தந்தையின் நற்பே ராசியை;
ஆதலி னிவர்பால் பணிசெய வமையின்
ஓதிய குல்லா உனக்கவ சியமாம்.
இருநன் மகளிரும் இருகுல் லாக்களும்
பெற்றிலேன், ஐயகோ! பெரியதோர் துயரம்!

**சேரன்**

ஏனோ விகடா இங்ஙனம் பிதற்றல்?

**விகடன்**

யானோ பிதற்றினேன்? அண்ணலே விளக்குவேன்
பொருள்கள் யாவையும் புதல்வியர்க் கீந்தபின்
இருகுல் லாக்களும் எனக்கா மன்றோ!
பார்ப்பதி நுமக்குநற் பட்டினால் குல்லா
நூற்றனள் நொய்தினில்; பெற்றதை யணிமின்.

**சேரன்**

குறும்போ மடையா! பிரம்படி தேவையோ?

**விகடன்**

பள்ளியில் பெற்றேன் பகலெலாம் பிரம்படி.
தெள்ளிதில் பாடம் செப்புவேன் கேண்மின்:

**பாட்டு**

“ அறிவதைக் காட்டிலும் அறைவாய் குறைய;
தெரிவதைக் காட்டிலும் தெரிப்பாய் குறைய;
விருப்பைக் காட்டினும், விழைமகா ராயினும்
இருப்பைக் காட்டிலும் ஈவாய் குறைய ”



**சேரன்**

போதும் பாடம்; புளித்தது செவியே!
கொடியகோ மாளியே, குந்துநீ அப்பால்.

**விகடன்**

கொடியவர், இனியவர், கோமா ளியர்களில்,
இடையுள வேறுபா டியம்புவேன் கேளீர்.
நாட்டைத் துரத்தல் நன்றென உரைத்துமை
ஓட்டிய பல்நிற ஓந்தியை இங்கென்
முன்னர் நிறுவுமின்; முடியா தாயின்
மன்னர் நீவிரே மாறாய் நில்லுமின்.
இனியவர், கொடியவர் எவரெனல் பிரியும்.

**சேரன்**

யான்கோ மாளியோ! அஃதிலும் கொடியனோ!
கோன்யா னென்பது குணித்திடு மனத்தில்.
ஐயகோ! கடும்பசி ஆனதே! பொறுக்கிலேன்.

**விகடன்**

ஐயனே! சிறிதுகூழ் அளிப்பீர் எனக்கும்;
உய்யவே தருவேன் உமக்குயான் மணிமுடி.

**பப்பநாபன்**

கூழொரு முடியைக் கொடுத்திடு மாயின்,
ஏழையர் அனைவரும் ஏந்தலாய் மாறுவர்.

**விகடன்**

கூழைக் குடித்தபின் பாழாம் சட்டியைச்
சென்னியில் கவிழ்த்தால், மன்னரே யாவர்.
கொடையால் அழிந்த கோப்பெருந் தகைக்கு
மண்ணின் முடியே மாபெரும் சிறப்பாம்.

**பாட்டு**

“ பேதையர் மேதைபோல் பிறங்கிடு காலம்,
மேதையர் விதியினால் மெலிந்திட லாலே;
தாதையர் கூழெனத் தவித்திடு காலம்,
தந்திடு மவர்மகார் போய்த்திட லாலே ”

**சேரன்**

என்றிது பயின்றனை இனியகோ மாளிநீ ?

**விகடன்**

எங்களின் மன்னவ ரிருபுதல் வியரைச்
சங்கைகொ ளாதுதந் தாயென வேற்றுத்
தம்முயர் தலைமை தணத்தவப் போழ்தே
இம்மா காவியம் இயற்ற வறிந்தேன்.

பாட்டு

“ அன்னவ ரழுதனர் ஆநந்தப் பெருக்கால் ;
மன்னவர் நகைத்தனர் மாபெரும் துயரால் ;
ஒளிந்து பிடித்தனர் உதவாப் பதரையும் ;
தளர்ந்தனர் பசியினால், பிளந்தனர் இதயம் ”

கொற்றவ ! பொய்ம்மொழி கூறுமத் தன்மையான்
கற்றிட விரும்பினேன். காட்டுமோர் ஆசான்.

**சேரன்**

பொய்ம்மொழி கருதியேல், புடைப்பேன் தடியால்

**விகடன்**

பொய்யுரை மொழியின் புடைத்திடு மரசர்.
மெய்யுரை புகலின் வெட்டுவர் மகளிர்.
மொழியா விகடனை மொத்துவர் எவரும்.
பிழையா வேறொரு பிழைப்பை விழைந்தேன்.
ஆயினும் நும்போல் ஆயிடல் வேண்டேன்.
முன்பிதோ வந்தனள் அன்பிலு யர்ந்தாள்.

[பார்ப்பதி அங்கு வருகிறாள்]

**சேரன்**

என்னே பார்ப்பதி, ஏதிம் முகவணி ?
முன்னே கண்டிலேன் ; முனிவின் குறியோ ?

**விகடன்**

முன்னாள் சேரனை முனியார் எவரும்;
இந்நாள் அன்னவர் சுன்னமே யானார்.



பிச்சைக் கழுமோர் பிக்குணி அதுபெறும் ;
கொச்சியின் அரசி கொடாதுகூழ் இறையும்.
யானொரு விகடன் ; யாதுநும் தானம்?

**சேரன்**

தானமும் விட்டேன்; மானமும் விட்டேன்.
[பார்ப்பதி விகடனைக் கோபத்தோடு நோக்குகிறாள்]

**விகடன்**

முகத்தா லென்றனை முனிவதேன் தாயே !

பாட்டு

“ அதீதப் பெருக்கம் அளிக்கும் தேவிட்டலை ;
உதவுவன் யாவையும், ஓம்பா தொழிப்பன் ;
இன்மை வதைத்திடப் புன்மையும் பெரிதாம்;
கூழையும் அமுதமாய்க் கோரியே அழுவன்.”

**பார்ப்பதி**

ஐயனே, நோக்குமின் ; யாவனிப் பித்தன் ?
பையவே வந்தனன் ; பழித்தனன் எவரையும்;
எல்லா உரிமையும் ஏற்றனன் இவனே !
சொல்லால் தாக்கினன் தூயவெம் பணிஞரை.
சகலசு தந்திரம் தாங்கிய விகடனும்,
புகலரு வெறிமிகப் பொருந்திய வீரரும்
அல்பகல் ஒழிவிலா ததட்டினர், திரிந்தனர் ;
குறைபல கூறினர் ; கொடுமை மொழிந்தனர் ;
பொறுத்திட வரியபல் பூசல் தொடுத்தனர் ;
இவர்செயும் இழிசெயல் எந்தைபால் கூறிடில்,
தவறினி நேரா தெனவே சங்கையில்
எண்ணினேன்; எண்ணம் ஏகிய தின்றொடு.
கண்ணியன், அன்பினன், காரியன் சங்கரன்
இன்றிவ ணடைந்தபல் விழிவுகள் உவந்தீர்;
கன்றிட உதைத்தவிக் கசடனை மெய்ச்சினீர்.
எனவே யாவும் நுமதே வலினால்
நிகழ்ந்தன வென்பது நிச்சய மாகும்
புகழ்ந்தது தகுமோ ? பொருந்துமோ வெமக்கு?

இவர்தமைக் கண்டியா திருத்தலோர் இழிவாம்.
எவரெனும் பாரேன் ; இனியிது சகியேன்.

**விகடன்**

பாட்டு

ஆட்டின் கடாவையா னூட்டி வளர்த்தேன்.
வீட்டின தென்னையே வீழ்ந்தேன் மார்பினில்.

**சேரன்**

நீ ஏன் செல்வியோ ?

**பார்ப்பதி**

நிந்தனை கூடவா ?
ஏயன புரிந்தினி இங்ஙன நிகழா
தூரப்புவீர் ; அன்றேல் ஓட்டுவேன் இவர்களை !

**சேரன்**

என்னே புகன்றனை ! இதுபெரும் விந்தையே!
என்னிரு செவிகள் ஏற்றவை மெய்யோ!
கனவோ நினைவோ! காண்பது நனவோ !
வனமோ ! நாடோ ! வகுத்தவள் மகளோ !
யானோ சேரன் ! யாங்ஙன மிருந்தேன் !
யாரென வென்னை அறைபவ ருளரோ !
புத்தி கலங்கப் புகைந்தன விழிகள் !
மெத்தவும் தந்தையை விழைந்திட லிதுவோ !
யானிரு மகளிரை அடைந்தது கனவோ !
தேன்மொழி செப்பலும் பேணலும் இதுகொலோ !

**விகடன்**

தந்தையே என்னினும் தலைவியைப் பணிவது
முந்தைநாள் முறை;அது மறந்தீர் முதியரே !

**சேரன்**

தலைவிநீ யாரென அறிவையோ சாற்றுவாய்.

**பார்ப்பதி**

வன்மொழி தந்தீர் ; வசை,வினை மனதின்
தன்மைவி ளக்கின சங்கையி லாமலே.



ஐயனே, அறிவீர் துய்யவென் நினைவுகள்.
முதிர்ந்திடு வயதினர் பொதிர்ந்திடு விவேகப்
பொலிவொடு விளங்கின் பூசனை பெறுவர் !
சினமும் கொடுமையும் செவ்வை கெடுத்திடும்.
விருப்பும் பேணலும் வெறுப்போ டின்மையாம்.
நும்மொடு வீணர்கள் நூற்றுவர் செறிந்தனர்.
அம்மவோ ! என்னென அறைவே னவர்செயல் !
முரடரும், குடியரும், மூடரும், வெறியரும்,
திருடரும், பொய்யரும், தீயரும், சாரரும்
ஏவலர் என்றுட னிருந்திவ் வரண்மனை
கேவலம் வேசையின் கிடக்கையே யாக்கினர்.
விலக்குமின் கயவரை ; வேறுபல் தூயரை
நிலைக்கயான் இங்ஙனம் நிறுவுவேன் இக்கணம்.

**சேரன்**

நஞ்சினும் கொடியவள் னெஞ்சியே பார்ப்பதீ !
வஞ்சகப் பேயே ! வருத்தேம் நினையினி ;
ஏகுவேம் இக்கணம் இம்மனை விடுத்துயாம்.
சாகும் வரையினி சாரேம் இத்தலம்.
பற்றொடு காத்திட மற்றொரு மகளுளாள்.
அற்றது தொடர்பினி அறுதியாய் இன்றொடு.
நண்பீர் நடமின் ; நம்தகை வீரரைக்
கூட்டுமின் ஒருங்கே ; பூட்டுமின் புரவிகள்.
[அப்போது பார்ப்பதியின் கணவன் வருகின்றன்]

**கோச்சி**

என்னே பூசல் இங்ஙனம் நிகழ்ந்தது ?

**சேரன்**

மன்னே ! கொச்சியின் மகிபனே !அகல்கிறோம்.
பூசலும் போகும் ; ஏசலும் ஏகும்.
மதியார் வாயிலை மிதியார் மானியர்.
தீராப் பிழைசெயின் தேம்பிப் புலம்புவர் ;
ஓரா தொழுகியான் உயிர்க்கழு வெய்தினேன்.
நன்றியின் கேடே ! நாயுனை நத்துமோ ?
வன்கொடு வாளினும் வலிய மனத்தினய் !

சேயவள் பாசம் செகுத்திட லால்கொடும்
பேயினும் பெரிதா யாயினை அந்தோ!

**கோச்சி**

அமைமின், அமைமின், கமைகொளும் ஐயனே!

**சேரன்** (பார்ப்பதியை நோக்கி)

சுமையெனப் பொய்ம்மொழி யுரைக்கத் துணிந்தையோ
என்னரும் வீரருக் கிணைசொலற் குரியவர்
என்னில மதனிலும் இருப்பரோ நாடினும்;
எத்தகை மாண்பினர்! எத்தகை யொழுங்கினர்!
தத்தமக் குரியதாம் தகைமை பிறழ்ந்திடார்!
குற்றமில் செயலினர்! கூறுவோர் வாய்மையே!
பற்றினில் பெரியவர்! பகர்ந்தையே நிந்தைகள்!
அணுவினும் சிறியவோர் அற்பமாம் தவறிழை
மணிநிகர் மாதவி மாண்பெலா மிழந்தனள்.
நெடுநாள் உளத்தில் நிவந்தபே ராதரம்
நொடிதனில் மாற்றிக் கடுவென மாறினள்.
இப்பெரும் பிழைபுரிந் திழிமொழி வழங்குமிவ்
வொப்பிலாக் கசடிபா லொருகணம் வதிவேனே!
சேரனே! இஃதுன் செயலிற் குரியதே!
பாரினில் அறிவிலாப் பார்த்திபன் நீயே!
மடமைகூர் மதியிலா மண்டையோ பெற்றனை!
உடைமின் இதைநீர்; உயிர்அற வீட்டுமின்!
[தலையில் அடித்துக்கொள்ளுகின்றன்]
நடமின் வீரரே! விடுமின் கொச்சியை.

**கோச்சி**

அண்ணலே, நிகழ்ந்ததை அறிகிலேன் அடியேன்;
எண்ணிலா விதமா யிங்ஙனம் முனிதலின்
காரணம் அறிகிலேன் கமையொடு கூறுக.

**சேரன்**

நாரணா! காரணா! நாயினும் இழிந்தவள்
வயிற்றிலோர் குழவியை வைத்திடேல்; தீதாம்.
தந்தையான் என்பது சிந்தியா மனதுடை



அரக்கியின் அகந்தையும், ஈனும் தன்மையும்
கருக்குமின் கடிதில்; கான்முளை பெறுத
கல்நிகர் மலடியாய்க் கலுழ்ந்தழச் செய்மின்.
சூதே வடிவாம் தோதகி யிவட்கினி
மாறாச் சூதையே மகவா யளிமின்.
ஆறாத் துயரினை அடைந்திவள் புலம்பிக்
கண்ணீர் சொரியக் கவுளிரு குழிபெறப்
புண்ணுறு முள்ளம் பொழிந்திட உதிரம்
வாணாள் முழுதும் மாழ்நாள் ஆக்குமின்.
மாணா இவடன் மதிமுகம் திரங்கிக்
குரங்கின் கிழமாம் கோலம் கண்டிடக்
கரங்கெனக் கால்கை ஆட்டம் கொண்டிட
அவசியம் செய்யும் அவமாம் மலட்டின்
செல்வியாம் பெருந்துயர்; செல்லா தொறுக்கும்.
பரிபவங் காண்போர் பழித்தவ மதிக்கவும்,
அரவுகொள் கொடியதாம் ஆலகா லத்தினும்
நன்றிகொல் மகவினை அடைதல் நவிலொணாத்
தீதெனும் வாய்மையைத் தெரிந்திவள் உணங்கவும்
வாதனை அளிமின்! வம்மின் அகலுவோம்.
[சேரனும், அவனைச் சேர்ந்தவர்களும் போய்விடுகின்றனர்]

**ாச்சி**

இத்தகைப் பழியேன் இயைந்தது பார்ப்பதீ?
மெத்தவும் விந்தையே! மிகமனம் நொந்தது!

**ர்ப்பதி**

முதுமையின் முனிவும், மூடச் செயல்களும்
நிதமும் பெருகின; நிமித்த மிதற்குயான்
யாதென உரைப்பேன்! வாதனை விடுமின்.
நன்மையே ஆனது; துன்ப மொழிந்தது.
[சேரன் கோபத்துடன் திரும்பி வருகிறன்]

**:ரன்**

என்னே கொடுமை! என்னே புன்மை!
என்னே புதுமை! எங்ஙனம் நிகழும்!

எத்தகை யதிசயம்! எப்பெருந் துணிபு!
பித்தமோ! வீரரில் ஐம்பது பேர்தமை
விலக்கி யொழித்தையே இத்துணை விரைவினில்!

**கோச்சி**

அண்ணலே, என்வயின் அறைவீர் நிகழ்ந்தது.

**சேரன்**

அண்ணலோ ஏழையேன்! ஆனேன் பித்தனே.
[பார்ப்பதியை நோக்கி]
நின்முகம் காணவும் என்கண் கூசின.
படைசெறி பகைவராம் பார்த்திபர் பலரைப்
புடைத்திடு மென்வலி போக்கி யொடுக்கிய
நெஞ்சுரக் கள்ளியே! சான்றோர் நெஞ்சினை
வஞ்சகத் தாற்கொளும் மக்களின் சிரமிசை
இடியே படியும்; என்று முருப்படார்.
கொடியநின் கைதவம் கொளுத்திய தடலெலாம்.
ஆசைகள் பேசி அவலம் புரிந்தநீ
நாசமே பெறுவாய்; நசிப்பாய் நாரியே!
கண்ணீர் கண்களில் கலுழுவ தென்கொலோ!
புண்களே! புல்லியை நோக்கொணு தெனநீர்
நீரா யுருகி ஓடிடு நினைப்போ?
போதும் போதும்; பொறேனிது யான்இனி.
பேதை விழிகாள்! பிடுங்கி எறிகுவேன்.
அழுதலை நிறுத்துமின் அன்பிலாக் கொடியவள்
பிழைதனை எண்ணும் பித்தை விடுமின்.
என்னே வஞ்சகம்! இந்நிலம் பொறுக்குமோ!
உன்னையான் உதித்த நாள்முத ருயிரென
மதித்தெக் கணமும் மலிந்த ஆதரத்துடன்
நிதியினு முயர்வென நினைத்து மகிழ்ந்தேன்.
தரணியில் யாவினும் சாலச் சிறந்ததா
மாசியல் முற்றிலும் அளித்துயா னுந்தமை
மகிழ்வுட னிருந்தலே மாயாக் கியமென
அகத்திற் கொண்டியான் அனைத்தையு மீந்தேன்.
பெறுமனம் பித்தாம்; பிள்ளைகள் கல்லாம்.



எனுமொழி செயலில் இங்குயாம் கண்டனம்.
பதரே! நின்முகம் பார்த்தலும் தீமையாம்.
புதல்விமற் றொருத்தியான் புவிமிசை பெற்றுளேன்.
அன்னவள் தந்தையை அன்புட னோம்புவள்.
எம்பெரு மாசையா மறவே இழந்ததாய்
மதித்தையோ! யானது வகிப்பது காண்பாய்.
முதியவ னாகுநின் மோச மறியும்
உடனவள் புலிநிகர் உன்முகம் கிழிப்பாள்.
கடப்பேன் இங்கரை நாழியும் தரியேன்.
[போய்விடுகிறான்]

**கோச்சி**

மாதே! சாலவும் வருந்தினேன் இதனால்.
யாதே செய்தனை! அடாதிக் கருமம்!
பதறிய தென்மனம்! பாவையே, நொடியில்
அதிபன் சினத்தை அகற்றித் தேற்றுவாய்.
தகாவினை தந்தைபால் புரிவது தருமமோ?

**பார்ப்பதி**

மகாநெறி யறிந்திர்! வாளா இருமின்.
[ஒரு கடிதம் எழுதி அதை சங்கரனிடம் கொடுத்து]
சங்கரா, தந்தையின் சங்கதி வரைந்தேன்.
தங்கையாள் நன்கிவர் தன்மை யறிகுவாள்.
நீயும் விரைவினில் நீங்கி முந்துவாய்;
போயவண் இங்குமன் புரிந்தவை யனைத்தும்
புகல்வாய் அவள்வயின்; புரிவாய் உரியன;
தகவிலாச் சேரமான் தாழ்ந்ததம் வீரரை
நீக்கவும், அவர்தம் நிலையிலாச் சினத்தைப்
போக்கவும் செய்யப் புகலுதி அவள்பால்.

**சங்கரன்**

ஆகுக அங்ஙனே; ஏகுவேன் அடியேன்.
[சங்கரன் போய்விடுகிறா

**பார்ப்பதி**

காதலே! உமது பேதமை வியந்தேன்!
போதனை எனக்குப் புகட்டலில் நீவிர்

மோனமாய் இருத்தலே முதுமையைச் சுட்டும்.
யானுமை அகத்தில் பெரிதும் மதிப்பேன்.

**கோச்சி**

யாது விளையுமோ அீத மிதனால்!

**பார்ப்பதி**

போதும் நிறுத்துக ; புகன்றதே அதிகம்.

[இருவரும் பிரிந்துபோகின்றனர்]

## இந்தக் காட்சியின் விஷயச் சுருக்கம்

[சேரனுடைய மாமன் மகனான பப்பநாபன், சேரன் கொச்சி யரண்மனையில் இளக்கரமாய் நடத்தப்படுவதாக அறிந்து, அவனுக்கு உதவியாயிருக்கும் பொருட்டும், அவனுடைய பதவியை மீட்டுக் கொடுக்கும் பொருட்டும், அவனிடம் வேலைக்காரனாய் இருக்கத் தீர்மானித்து, பொய்மீசை அணிந்து மாறுவேஷம் பூண்டு வருகிறான். அப்போது சேரனும், அவனுடைய வீரர்கள் சிலரும் எதிர்ப்படுகின்றனர். சேரனுக்கு, உரிய காலத்தில் உணவு அளிக்கப்படவில்லை யாதலால், அவன் கடும்பசியினால் தவித்து, தன்னை எவரும் கவனிக்கவில்லையே என்று கூறிப் பரிதவிக்கிறான். அப்போது பப்பநாபன் அவனை சந்தித்து, தான் அவனுக்கு உதவியா யிருப்பதாய்க் கூறி, அவனுடன் இருக்கிறான். அவனுடைய பெயர் என்னவென்று அரசன் கேட்க, தன்பெயர் **வீசையன்** என்று பப்பநாபன் கூறுகிறான். கொச்சி யரண்மனையின் சர்வாதிகாரியான சங்கரன் சேரனுக்கெதிரில் வருகிறான். அவனை சேரன் 'சங்கரப் பதரே' என்று கூப்பிட, அவன் அதை அரசியிடம் தெரிவிப்பதாய்க் கூறிவிட்டுப் போய்விடுகிறான். அதைக் கண்டு வியப்படைந்த சேரன் ஒரு வீரனை பார்ப்பதியிடம் அனுப்புகிறான். அவன் திரும்பிவந்து, பார்ப்பதி உடம்பின் அசௌக்கியத்தினால் படுத்திருப்பதாய்ச் சொன்னார்களென்றும், சங்கரன் மறுபடி அரசனிடம் வர மறுத்துவிட்டதாகவும் தெரிவிக்கிறான். சங்கரன் வர மறுத்ததைப்பற்றி, அரசன் வியப்



போடு கேட்க, வீரன் அதை உறுதிப்படுத்திய தன்றி, பார்ப்பதி உள்பட எல்லோரும் தங்களை மிக இளக்காரமாய் நடத்துவதாகவும், முதலில் நடந்துகொண்டதற்கு முற்றிலும் மாறாய், எல்லோரும் அடியோடு வேறுபட்டுவிட்டதாகவும், அந்த அரண்மனையை விட்டுத் தாம் போகாதிருந்தால், தங்களுக்கு அதிகரித்த துன்பங்கள் உண்டாவது நிச்சயமென்றும் கூறுகிறான். அதைக் கேட்ட சேரன், தானும் அது போலவே சந்தேகித்ததாகவும், அதையே அந்த வீரன் உறுதிப்படுத்தியதாகவும் கூறி வியப்படைந்ததன்றி, தன் விகடன் எங்கே என்று கேட்கிறான். மாதவி இலங்கைக்குப் போனது முதல் விகடன் அதைப்பற்றி விசன மடைந்து ஏக்கத்தோடு சோர்ந்து சோர்ந்து படுப்பதாக அந்தவீரன் கூறுகிறான். அப்போது எதற்கோ சங்கரன் மறுபடி அங்கே வருகிறான். அவனைக் கண்ட அரசன் சினம் கொண்டு அவனை வைகிறான். அவன் அதைப் பொறாமல் தன்னை அவ்வாறு வையவேண்டாமென்றும், தனக்கு அவ்வசைச்சொல் தகாதென்றும், தான் அதைப் பார்ப்பதியிடம் தெரிவிப்பதாகவும் கூறுகிறான். அதைக் கேட்ட சேரன் அவனை அடிக்கிறான். தன்னை அடிக்கவேண்டாமென்றும், தன்மீது சினம் காட்டவேண்டாமென்றும் சங்கரன் மறுத்துப்பேசுகிறான். அப்போது அருகில் இருந்த பப்பநாபன் சங்கரனைப் பார்த்து, "சேரன் உன்னைத் தொட்டு அடித்ததால், நீ கண்ணியம் பெற்றாய். என் உதையே உன் மமதையை அடக்கும்" என்று கூறி, அவனை உதைத்துக் கீழே வீழ்த்துகிறான். அதைக் கண்ட சேரன் பப்பநாபனைப் புகழுகிறான். பப்பநாபன் சங்கரனை நோக்கி, "இப்போது உனக்கு புத்தி வந்ததா! எழுந்து போ ; இல்லாவிட்டால் இன்னமும் உதைகள் பெறுவாய்" என்று கூறி, அவனைக் கிளப்பி அப்பால் தள்ளிவிடுகிறான். அப்போது சேரனுடைய விகடன் அங்கு வருகிறான். அவன் பப்பநாபன் செய்த காரியத்தினால் ஏதேனும் துன்பம் வருமென்று அஞ்சி, தன் கோமாளிக் குல்லாவை அணிந்துகொண்டால், அதனால் தப்பித்துக் கொள்ளலாமென்று கூறி அதைக் கொடுக்கிறதன்றி, தனக்கு இரண்டு பெண்களும், இரண்டு குல்லாக்களும் இல்லையே என்றும் விசனிக்கிறான். அரசன், "ஏன் பிதற்றுகிறாய்?" என்று கேட்க,

தான் பிதற்றவில்லையென்றும், தனக்கு இரண்டு பெண்கள் இருந்தால், சொத்துகளையெல்லாம் அவர்களுக்குக் கொடுத்தால், குல்லாக்கள் தனக்கு அவசியம் மிஞ்சும் என்றும் மறுமொழி கூறுகிறான். அவன் அப்படியெல்லாம் குறும்பாய் மொழிந்தால், பிரம்படி தருவதாய் அரசன் கூற, விகடன், "என்னை அடிக்கவேண்டாம்; பாடத்தை சரியாய் ஒப்புவிக்கிறேன்" என்று கூறி ஒரு பாட்டைப் பாடுகிறான். அதன் கருத்து அடியில் வருவது: ஒருவனுக்கு எவ்வளவு அதிகமான அறிவிருந்தாலும், அவன் அதைப்பற்றி ஆடம்பரம் செய்துகொள்ளாமல் அடக்கமாய் ஒழுகவேண்டும், பிறருடைய விஷயங்கள் ஒருவனுக்கு எவ்வளவு அதிகமாய்த் தெரிந்திருந்தாலும், அவன் அதை சொற்பமாகவே காட்டிக்கொள்ளவேண்டும், ஒருவனிடம் மற்றவர் எவ்வளவுதான் பிரியம் காட்டினாலும், அவர்கள் தன் ஆசைக்குகந்த சொந்தப் பிள்ளைகளேயானாலும், தன்னிடம் இருக்கும் சொத்துகளில் சொற்பத்தையே அவர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்பது அந்தப் பாடலின் கருத்து. அதைக் கேட்ட சேரன், அவனை துஷ்டக்கோமாளி என்று குறித்து, பாட்டை நிறுத்தச் சொல்லுகிறான். விகடன் கொடிய கோமாளிக்கும், இனிய கோமாளிக்கும் வித்தியாசம் கூறுகிறான். அரசருடைய நாட்டைப் பெண்களுக்குக் கொடுத்துவிடும்படி அவரைத் தூண்டிய மனிதனையாவது, அல்லது, அவனுக்கு பதிலாக அரசராவது வந்து தனக்குப் பக்கத்தில் நின்றால், கொடிய கோமாளியும், இனிய கோமாளியும் பக்கம் பக்கமாய் நிற்பது காணலாம் என்று விகடன் கூறுகிறான். அப்போது அரசனுடைய பசி அதிகரிக்கிறது. அரசன் கதறுகிறான்; விகடன் தனக்குக் கொஞ்சம் கூழ் கொடுத்தால், அவருக்கு உடனே அரசருடைய கிரீடம் கொடுப்பதாய்க் கூறுகிறான். கூழுக்கு முடி கிடைக்குமானால், ஏழைகள் எல்லோரும் மிக எளிதில் அரசர் ஆய்விடுவார்கள் என்கிறான். பப்பநாபன் கூழைக் குடித்தபின், சட்டியைக் கழுவித் தலையில் கவிழ்த்துக்கொண்டால், அதுவே ஏழைகளுக்கு அரச பதவி என்றும், எல்லாவற்றையும் பெண்களுக்குக் கொடுத்துவிட்டுக் கூழுக்கு அழும் அரசனுக்கு அத்தகைய மண்முடிதான் தகுமென்று சிலேடையாகவும் விகடன் மறுமொழி கூறிவிட்டு



ஒரு பாட்டைப் பாடுகிறான். அதன் கருத்து அடியில் வருவது: மேதாவிகள் விதிவசத்தால் மெலிந்து போவதால், பேதைகள் மேதாவிகள்போல் தோன்றவும், வள்ளல்களாயிருந்து எல்லாவற்றையும் வழங்கியவர்கள், அதைப் பெற்றுக்கொண்ட பிள்ளைகளிடம் கூழுக்குத் தொண்ணாந்து நிற்கவும் காலம் வந்துவிட்டதே என்பது அதன் கருத்து. அந்தப் பாட்டை எப்போது விகடன் கற்றுக்கொண்டான்என்று சேரன் கேட்கிறான். தங்கள் அரசர் முன்பின் யோசியாமல், தன் பெண்களைத் தமது சொந்தத் தாயாக எண்ணி எல்லாவற்றையும் இழந்தபோது தான் அந்தப் பாடலைக் கற்றுக்கொண்டதாக விகடன் கூறி, இன்னொரு பாட்டைப் பாடுகிறான். அதன் கருத்து அடியில் வருவது: எல்லாவற்றையும் பெற்றுக்கொண்டவர்கள் ஆநந்தத்தைத் தாங்கமாட்டாது ஆநந்த பாஷ்பம் சொரிந்தனர், அரசன் தனது மா பெரும் துயரத்தைக் கண்டு இப்படியும் நேருமா வென்று வியந்து நகைத்தார், கேவலம் பதர்போன்றவர்களையும் தேடிப்பிடித்துக் கண்ணாம்பூச்சி விளையாடினார், அதைக் காண அன்பர்களுடைய இதயம் இரண்டாய்ப் பிளவுபடுகிறது என்பது அதன் கருத்து. இந்தப் பாடலைப்பாடிய விகடன், தான் எவ்வளவுதான் மறைக்க முயன்றாலும், மெய்யே தன் வாயில் வருகிறதென்றும், பொய் சொல்லும் வித்தையைத் தனக்குக் கற்றுக்கொடுக்கத் தனக்கு ஓர் ஆசானை அமர்த்திக் கொடுக்கும்படியும் கூறுகிறான். பொய் பேசக் கற்றுக் கொண்டால், தான் அவனை அடிப்பதாக அரசன் கண்டிக்கிறான். பொய் சொன்னால், அரசன் அடிப்பன் என்றும், மெய்யைச் சொன்னால், அவனுடைய பெண்கள் தன்னைக் கொன்றுவிடுவார்கள் என்றும், விகடன் என்று பெயர் வைத்துக்கொண்டு ஊமையா யிருந்தால், கண்டோர் மொத்துவர்களென்றும், ஆகையால் தான் குற்றமற்ற வேறோர் உத்தியோகத்தை நாடுவதாகவும், ஆயினும், சேரனுடைய அப்போதைய நிலைமையை அடைய மாத்திரம் தான் விரும்பவில்லை என்றும் விகடன் கூறுகிறான். அப்போது பார்ப்பதி அங்கே வருகிறாள். அவளைக் கண்ட சேரன், அவள் கோபக்குறியாகிய ஒரு புதிய முக அணியைப் பூட்டிக்கொண் டிருப்பதின் காரணமென்ன வென்று கேட்கிறான். அதற்கு விகடன்

மறுமொழி தருகிறான். சேரன் எவருடைய சினத்தையும் இலட்சியம் செய்யாத பதவியில் இருந்தபோது, எவரும் அப்படிச் செய்யத் துணியவில்லையென்றும், இப்போது சேரன் பெரிய சுன்னம் ஆய்விட்டமையால் அந்த மாறுதல் உண்டாயிருக்கிறதென்றும், தனக்காவது விகடன் என்ற ஒரு பதவி இருக்கிறதென்றும், சேரனுக்கு எவ்விதமான பதவியும் இல்லையென்றும் கூறுகிறான். பார்ப்பதி கோபப் பார்வையாக அவனைப் பார்க்கிறாள். அவன் அதன் காரணத்தைக் கேட்டுவிட்டு ஒரு பாடலைப் பாடுகிறான். அதன் கருத்து அடியில் வருவது: அமிதமான செல்வத்தைப் படைத்தவன் தெவிட்டல் அடைந்து அதை வெறுத்து அசட்டையாக விலக்குவன், தரித்திரம் வந்துவிட்டால், கூழ் கிடைத்தாலும், அதுவே போதுமென்று நினைத்து அதை அமுதம்போல் மதித்துக் கேட்பான் என்பது அதன் கருத்து. அதைக் கேட்ட பார்ப்பதி சேரனைக் கண்டிக்கிறாள். விகடன் தன் விஷமப் பேச்சுகளால் எல்லோரையும் தூற்றுகிறான் என்றும், அவனும் நூறு வீரர்களும் பல வகைகளில் கெட்ட காரியங்களைச் செய்து, கூச்சலிட்டு கொடுமைகள் மொழிந்துகொண்டு திரிகிறார்கள் என்றும், சங்கரனை பப்பகாபன் அடித்ததைக் கண்டு சேரன் அவனை மெய்ச்சினது ஒழுங்கல்லவென்றும், அவருடைய அநுமதியின் மேலேயே அவ்விதமான கெடுதல்கள் நடக்கின்றனவென்றும், அவர்களை சேரன் உடனே தண்டிக்காவிடில் அது தங்கள் பெருமைக்கே இழுக்கென்றும், அவர் செய்யாவிடில் தான் செய்யப்போவதாகவும் கூறுகிறாள். அதைக் கேட்ட விகடன் ஒரு பாட்டுப்பாடுகிறான். வளர்த்த கடா, வளர்த்தவனுடைய மார்பில் பாய்ந்து கொல்லுகிறது என்பது அதன் கருத்து. பார்ப்பதி சொன்னதைக் கேட்ட சேரன் மிகுந்த கோபமும் வியப்பும் அடைந்து, “நீ என் மகள் தானா? இதுதான் என்னைக் காப்பாற்றுவதாகவும் பணிவதாகவும் சொன்னதா?” என்று பலவாறு மொழிகிறான். அவர் அரசிக்குத் தகப்பனாயினும் அவர் அரசியைப் பணியவேண்டும் என்கிறான் விகடன். அவள் யாரால் அரசியானாள் என்பது தெரிகிறதா என்று சேரன் பார்ப்பதியிடம் கேட்கிறான். பார்ப்பதி அவருக்கு புத்திமதிகள் கூறுகிறாள். முதிர்ந்த பெரியவர்கள் விவேகத்தோடு நடந்துகொள்ள வேண்டுமென்றும், கோபத்தையும் கொடுமையையும் வகித்தால், மரியாதைக்குக் கெடுதல் உண்டாகிவிடுமென்றும், அயோக்கியர்களான அவருடைய வீரர்களை அவர் விலக்க வேண்டுமென்றும், யோக்கியர்களான பணிஞரைத் தான் அவருக்கு அனுப்புவதாயும் அவள் கூறுகிறாள். அதைக் கேட்ட அரசன் அவளைப் பலவாறு தூற்றி, தான் தன் பரிவாரங்களுடன் உடனே போய்விடுவதாகவும், அவளுக்கு இனி பிரயாசை ஏற்படாதென்றும் கூறி, தன் ஆள்களைக் கூட்டவும், குதிரைகளைப் பூட்டவும் தம் நண்பர்களுக்கு உத்தரவிடுகிறான். அப்போது பார்ப்பதியின் கணவன் அங்கு வந்து என்ன சண்டை என்று விசாரித்து, சேரனை சமாதானப்படுத்துகிறான். சேரனுடைய கோபம் முன்னிலும் அதிகரிக்கிறது. அவன் கடவுளிடம் முறையிட்டு, பார்ப்பதிக்குக் குழந்தையே பிறக்கக்கூடாதென்றும், தான் மலடாயிருப்பதைப்பற்றி அவள் விசனப்பட்டழுதழுது கிழக் குரங்குபோல் மாறி அழிந்து நாசமாய்ப் போகவேண்டுமென்றும் கூறி அவளைப் பலவாறு சபித்துவிட்டு, தான் இன்னொரு மகளிடம் போவதாய்ச் சொல்லிவிட்டு, தம் நண்பர்களுடன் போகிறான். போனவன் சற்று நேரத்தில் திரும்பி வந்து, தன் வீரர்களில் ஐம்பது ஆள்களை பார்ப்பதி ஏற்கனவே விலக்கி அனுப்பிவிட்டதை தான் அப்போதே தெரிந்துகொண்டதாகக் கூறி, அதற்காகவும் அவளைப் பலவாறு இகழ்ந்து தனது விசனப் பெருக்கையும் அழுகையையும் அடக்கமாட்டாமல் தவித்தபடி வெளியேறுகிறான். அதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த கொச்சி, அரசன் பார்ப்பதி அவ்விதம் தந்தையை நடத்தியது அக்கிரமமென்றும், உடனே ஓடி சமாதானப்படுத்தி அழைத்துக்கொண்டு வரும்படியும் கூறுகிறான். பார்ப்பதி அவனை அதட்டி அடக்கிவிட்டு, தன் சகோதரியான கமலினிக்கு ஒரு கடிதம் எழுதி, அதை சங்கரனிடம் கொடுத்து, அதைக் கொண்டுபோய்த் தங்கையிடம் கொடுக்கவும், விவரங்களை யெல்லாம் அவளுக்குத் தெரிவித்து அவளுடைய மனதைத் திருப்பவும் உத்தரவிட்டு அனுப்புகிறாள். சங்கரன் கடிதத்தைப் பெற்றுக்கொண்டு போகிறான். பார்ப்பதி தன் கணவனுடைய கோழைத் தனத்தைப்பற்றி அவனை இழிவாகப் பேசிவிட்டுப் போகிறாள்.]

## காட்சி—5

[கோச்சி அரண்மனையில் வேருேர் இடத்தில் சேரன், விகடன், பப்பநாபன் முதலியோர் கூடுகின்றனர். சேரன் இரண்டு கடிதங்கள் எழுதி, ஒன்றைக் கமலினிக்கும், இன்னொன்றைத் தமது பழைய மந்திரியான குலசேகரனுக்கும் கொடுக்கும்படியும், தாங்கள் வருவதற்கு முன்னுல் இருவருக்கும் கடிதங்கள் கிடைத்து விட வேண்டுமென்றும் கட்டளையிடுகிறுன்.]

**சேரன்**

*கடிதம் இரண்டுடன் கடிதில் முந்துவாய் ;*
*அருங்குண வீசையா, ஒருங்குயாம் பின்னுல்*
*தொடருவேம் ; இரண்டாம் சுதைக்கொரு கடிதமும்*
*இடரோ டெம்மைவிட் டேகிய வமைச்சன்*
*தனக்கொரு கடிதமும் தந்தவ ணிருப்பாய்.*

**பப்பநாபன்**

*அண்ணலே இவைதமை அங்ஙனம் சேர்த்தே*
*தண்ணீர் அருந்துவேன் ; தங்கேன் எங்கணும்.*
[கடிதங்களைப் பெற்றுக்கொண்டு போய்விடுகிறுன்]

**விகடன்**

*மனதாய்க் கால்களை மாற்றி நடந்தால்,*
*கனலே மூளும் ; கண்டிடும் கொப்புளம்.*

**சேரன்**

*ஆமாம் உண்மையே அறைந்தாய் விகடா !*

**விகடன்**

*பதருக் காரியம் சிதரா தென்பர்.*
*மெதுவாய் விரைவோம் ; வெம்மை தணியின்.*

**சேரன்**

*இப்பெரு மின்னலை இதற்குள் மறக்க*
*ஒப்புமோ உள்ளம் ; ஓய்வைக் கொள்ளுமோ.*



*மற்றெவன் மகளது அன்பினு லன்றிஇங்*
*குற்றது மறையுமோ ! உணர்ச்சிகள் தணியுமோ !*

**விகடன்**

*முன்னவள் குணத்தையே பின்னவள் கொண்டதாய்*
*முன்னொரு முறைநீர் சொன்னது நினைப்பீர்.*
*விரைந்து நடமின் விழைவைக் காணலாம்.*

**சேரன்**

*உரைப்பது விந்தையே ! உனக்கிவ் வையமேன் !*

**விகடன்**

*ஐயமே அற்றேன் ; அங்கைக் கனியே.*
*பிந்தினும் பிறப்பால், முந்துவள் சிறப்பால்.*

**சேரன்**

*ஏனோ உன்றனுக் கித்தகை மடமை !*

**விகடன்**

*போனுல் தெரியும் புதல்வியின் மாட்சிமை !*
*எனினும் ஒருவினு; ஏகுமவ் விடத்திலும்*
*முனிவே பெற்ருல், இனிவே றெங்குயாம்*
*செல்வோம் ; இன்னொரு செல்வியைப் பெற்றிலேம்.*

**சேரன்**

*கமலினி இவள்போல் கடியவள் ஆகாள்.*

**விகடன்**

*புத்திரிமார் மனப் போக்கை நன்குணர்ந்தே*
*சத்திரம் பற்பல சமைத்தீர் போலும் !*
*சகத்தினி லிங்ஙன நடப்பதே தகுமால்*
*முகத்தி னிடையில் மூக்கைப் படைத்தான்.*

**சேரன்**

*நடுவி லிருப்பதேன் நாசி முகத்தினில் ?*

**விகடன்**

*இருமருங் கிருவிழி இருத்தலால், நாசி*
*உறுவதை உணரு தொழியினும், விழிகள்*

எத்தகைத் தீங்கையும் எளிதில் கண்டிடும்.
நத்தையோர் வீட்டை நத்திச் சுமப்பதேன் ?

**சேரன்**

காரணம் நீயே கழறுவாய் அதற்கும்.

**விகடன்**

புத்திரிக் கீந்ததைப் போக்குதற் கன்று.
சத்துரு வருமேல் தன்னுயிர் காக்கவும்,
மெல்லிய யாக்கையை மிகவே போற்றிட
ஓல்லையி லேயதி லொளிந்திருத் தற்கலோ !

**சேரன்**

மெய்யே செப்பினை மேதகு விகடனே !
ஐயகோ ! யானிதை அறியாப் பேதையாய்
ஆகுலித் திங்ஙனம் அலைந்தேன் பாரியாய்!
வெந்ததே உள்ளம் ! விலகா தோஉயிர் ?
நொந்ததே பாழ்உடல் ! நுதலிய பொய்த்ததே !
எத்தகை அன்பொடு இவள்தனை நத்தினேன் !
புத்திரி யோஇவள் ! பொங்குவ தேன்மனம் ?
என்னே ? என்றன் புரவியேன் இளைத்தது ?
வண்ணான் பரிபோல் மன்னன தாகுமோ !

**விகடன்**

இதுவே சரியாம் ; வேசரி இதுவாம்.
மன்னனே காலியா யேகுமிம் மாண்புற,
முன்னது பின்னதாய் முடிதலில் வியப்பேன் !
முதியவன் முதிருதல் புதிய தன்றுமொரு
மதியிலி முதியனாய் மாறுதல் காண்கிறோம்.

**சேரன்**

ஐயகோ, விகடா, ஆனேன் பித்தனே !
பொய்யோ மெய்யோ ! போனவை கனவோ !
உயர்வும், வாழ்வும், ஓங்கிய செல்வமும்,
பெயரும், உறவினர் பேசிய உருக்கமும்,
மற்றவர் பணிவும், மக்களின் பற்றும்



இரிந்தன முற்றும் இந்திர சாலமாய்.
பொருளே புவியோர் போற்றிடு கடவுள் !
பணமே யாவும் ; பிணமே படையான்.

**விகடன்**

அத்தகைச் சவமிதே அணுகுதல் பாரீர்.

[ஒரு வீரன் வருகிறான்]

**சேரன்**

எங்ஙனம் மற்றவர் ? எழுந்தவோ புரவிகள் ?

**வீரன்**

அங்ஙனே ஆயின. அகல்வோம் வம்மின்.

**சேரன்**

ஏகுவோம் விகடா ! ஏறு நீ பரிமிசை.

**விகடன்**

இருபதில் குமரியோ ! என்றுமே குமரியோ !
தெரிவையு மொருநாள் திரங்கிய கிழவியாம்.
பிதிருக் கீந்தவிப் பிக்குணிப் பாண்டம்
உதவுவன் இவள்மகன் ஒருநாள் உறுதியே !

[போய்விடுகின்றனர்]

## இந்தக் காட்சியின் விஷயச் சுருக்கம்

[சேரன் இரண்டு கடிதங்கள் எழுதி, பப்பநாபனிடம் கொடுத்து, ஒன்றை கமலினிக்கும், மற்றதை குலசேகரனுக்கும் கொடுத்துவிட்டு அங்கேயே இருக்கும்படி கூறி அவனை முன்னால் அனுப்புகிறான். தான் அவைகளை அவர்களிடம் கொடுக்குமுன் தண்ணீர்கூட அருந்துவதில்லையென்று பப்பநாபன் அரசனிடம் கூறிவிட்டுச் செல்லுகிறான். தன் வீரர்களது வருகையை எதிர்பார்த்து சேரன் துடிதுடித்து நிற்கிறான். அவ்வாறு பதறவேண்டாமென்று விகடன் சேரனுக்கு புத்திமதி கூறுகிறான்; மனதின் வேகத்

தைக் கால்களுக்கு ஊட்டி விரைந்து சென்றால், கால்களில் கொப்புளங்கள் உண்டாகிவிடும் என்றும், ஆகையால், கோபாவேசத்தை சற்று தணித்துக்கொள்வது நலமென்றும் விகடன் கூறுகிறான். பார்ப்பதி இயற்றிய அவ்வளவு கொடிய தீங்கை தான் அவ்வளவு சுலபத்தில் மறக்க இயலாதென்றும், அடுத்த மகளான கமலினியின் பேரன்பினாலேயே அது மறையவேண்டுமென்றும் சேரன் மறுமொழி கூறுகிறான். பார்ப்பதியும், கமலினியும் ஓரே மாதிரியான மனப்போக்குடையவர்கள் என்று சேரன் முன்னொரு முறை கூறியதை விகடன் நினைவூட்டி, கமலினி பார்ப்பதியைவிடச் சிறியவளானாலும், குணத்தில் அவளை மீறக்கூடியவள் என்றும், அவள் எப்படி நடத்துவாள் என்பதைப்பற்றி தனக்கு சிறிதும் சந்தேகமே இல்லை யென்றும், ஆனால் அதற்குமேல் நாடிப்போவதற்கு வேறொரு மகள் இல்லையே என்பதே தன் நினைவென்றும் விகடன் கூறுகிறான். ஆயினும் புத்திரிகளின் தன்மையை உணர்ந்தே சேரன் பல இடங்களில் சத்திரங்களை ஏற்படுத்தி யிருக்கவேண்டுமென்றும், முகத்தின் நடுவில் மூக்கைக் கடவுள் வைத்தது, மூக்கு துன்பத்தை முகரத் தவறிவிட்டாலும், இரண்டு பக்கங்களிலும் எச்சரிப்பாயுள்ள கண்கள் அதை அவசியம் தெரிந்துகொள்ளு மென்ற கருத்துடனேயே என்றும் விகடன் கூறி, நத்தை எப்போதும் தன் முதுகின்மேல் ஒரு வீட்டைச் சுமந்திருப்பதை நினைவூட்டுகிறான். அதன் காரணம் என்னவென்று சேரன் கேட்கிறான். தனக்கு எவரேனும் கெடுதல் செய்ய முயன்றால், தான் வீட்டிற்குள் ஒளிந்துகொண்டு, தன் மிருதுவான உடம்பையும், உயிரையும் காப்பாற்றிக் கொள்வதற்கே யன்றி, அதைத் தன் புத்திரிக்குக் கொடுப்பதற்கு அன்றென்று விகடன் மறுமொழி கொடுக்கிறான். அதைக் கேட்ட அரசன் முன்னினும் அதிகரித்த துயரம் கொண்டு, தன் புதல்வியின் கொடுமையைப்பற்றி வியப்போடு பேசி, தன் குதிரை கழுதைபோல் மாறிப்போ யிருந்ததை கவனித்து, அதைப்பற்றிப் பேசுகிறான். அரசன் காலியாய் ஏகும்போது, குதிரை கழுதை ஆவது விந்தையல்ல வென்கிறான் விகடன். ஏகாலி என்பதற்கு வண்ணான் என்பது கருத்து. அதை விகடன் ஆசியத்திற்காக மாற்றி இரண்டு பொருள்கள் படும்படி



பேசுகிறான். இங்கு 'வேசரி' என்பதற்கும் கழுதை என்பது பொருள். அரசன் தனது பழைய பெருமைகளை நினைத்து வருந்திக்கொண் டிருக்க, ஒரு வீரன் வந்து, மற்றவர்கள் புறப்பட்டு விட்டனர் என்று கூறுகிறான். உடனே சேரனும், விகடனும் அவனுடன் செல்கின்றனர். இருபது வயதில் ஏற்படும் யௌவனப் பருவம் எப்போதும் நிலைத்திராதென்றும், எப்படியும் பார்ப்பதி ஒருநாள் கிழவியாவாளென்றும், அவள் தன் தந்தைக்குக் கொடுத்த பிச்சைப் பாத்திரத்தை அவளுடைய மகன் அவளுக்கு அவசியம் கொடுப்பான் என்றும் கூறியபடி விகடன் செல்கிறான்.

## அங்கம்—II

### காட்சி—1

[குலசேகரனுடைய மாளிகை. மாதவன் தனக்குள் எண்ணமிடுகிறான்]

**மாதவன்**

நினைத்த விதமே நிகழ்ந்தன யாவும்.
இனி இதை முற்றுதல் எளிதினும் எளிதாம்.
அன்பெலா மறந்தனன் ஆத்திரத் தந்தை;
வன்பெரும் வீரரை வைத்தனன் விடுதியைச்
சுற்றிலும்; காத்தனர் முற்றுகை போலவே.
மாதவன் அகணியில் மாழ்கித் தவித்தனன்;
சூதவன் அறிந்திலன்; தோன்றினால் வெளியில்,
ஏவலர் பற்றுவர் இடுவர் விலங்குகள்.
மேவினேன் வெற்றியின் மிகுபகு தியையான்.
சிறிய துரும்பும் தேக்குமோர் கலநீர்.
உரிய தருணத் துளுற்றிய கருமம்
நுண்ணிதே யாயினும், திண்ணிய பலனாம்.
செவ்வி யொழிந்தபின் செய்வன வீணாம்;
எவ்வமே யடைந்து ஏங்கித் தவிப்போம்.
விடுதியில் நுழைந்து வெருட்டுவேன் அண்ணனை.

[மாதவன் இருந்த விடுதிக்குள் நுழைந்து, மிகுந்த திகிலையும் ஆவலையும் காட்டி]

**கேசவன்**

ஐயகோ! மாதவா! அவசரம்! அவசரம்!

**மாதவன்**

உய்யுமா றில்லையோ? உற்றதென் கூறுவாய்.
நிகரிலாச் சோதரா, நின்னையே நம்பினேன்.
மிகுபல நன்மைகள் விழைவொடு நல்கினை.
என்னே அவசரம்? எங்குளார் எந்தையார்?

**கேசவன்**

இன்னு வளைத்தது! இங்கினி இருந்தால்,
தந்தைநின் சிரத்தைத் தடிவது நிச்சயம்.
வந்துநீ இங்ஙனம் வதிவதை எங்ஙனோ
உணர்ந்தனன் பணிஞரை ஒருங்கே நிறுவினன்.
கங்குலோ வெங்கணும் கவிந்துள தின்று.
தங்கினால், காலையில் தாக்குவர் உன்றனை.
ஆதலின் இதுவே அகன்றிடற் கியைந்த
போதுடன் பெயருவாய் புறத்தில் முடுகுவாய்.
இருளில் மறைந்துநீ ஏகுதல் எளிதாம்.
வருபவன் யாவன்? ஐயகோ! தந்தையே
போந்தனன்! இருவரும் போர்தனைப் புரிவதாய்
ஏந்துவோம் வாளையாம். ஏகுநீ இடையினில்.
ஐயகோ, தீயனே! அடித்தையோ என்றனை!
வெய்யனே! நில்நில் வெளியிலேன் ஓடினை?
[கேசவன் சைகை காட்ட, மாதவன் வெளியில் ஓடிப்போகிறான்]
நாட்டுவேன் கத்தியைக் காட்டுவேன் உதிரம்.
மாதவன் வெட்டென வகுப்பேன் திண்ணமாய்.
[தன் உடம்பில் பல இடங்களில் வாளால் காயம் உண்டாக்கிக் கொண்டு, கண்ணீரோடு பதறித் தவிக்கிறான். அப்போது குலசேகரன் அங்கு வருகிறான்.]
ஐயகோ! தந்தையே! அடித்தெனை வெட்டினன்
வெய்யவன் மாதவன்; மிகயான் கூவினேன்.



உந்தமைக் கண்டவன் ஓடினன் வெளியினில்.
வந்தனிர் செவ்வியில், இன்றேல் மாண்டேன்.

**நலசேகரன்**

இங்கேன் வந்தனை? எங்குளான் வஞ்சகன்?

**கேசவன்**

நன்மொழி கூறயான் நாடினேன் இவனையான்.
நின்றனன் இருள்தனில்; நெருங்கியான் மொழிந்தேன்.
என்றனைக் கண்டதும் இயம்பினான் வசைகளை,
எந்தையை எள்கினான்; நிந்தைகள் பேசினான்.
குணமிலாத் தந்தையைக் கணமிதிற் கொன்றிட
வேண்டுநீ என்றவன் விளம்பினான்; அதுசெயத்
தூண்டினன் என்றனைத் தூர்த்த சிகாமணி.
ஈன்றவக் கணமுதல் எண்ணிலா நன்மைகள்
வான்தரு மழையென வண்மையாய்ச் சொரிந்தநம்
தாதைக் குயிரையும் தந்திடற் குரியயாம்
சூதா யவருயிர் தொலைத்திடல் நீதமோ,
பேரிடி வீழ்ச்சியால் பெயரும் எம்சிரம்
என்றே பற்பல இயம்பி மறுத்தேன்.
இணங்கிடா வென்றனை இங்ஙனம் வாளினால்
கணத்தில் வீட்டிட முயன்றனன் கயவன்.
வெற்றுக் கரத்தனாய் விரவிய அடியேன்
சற்று நகர்ந்ததால் தப்பினே னுயிருடன்.
உதிரம் நோக்குமின் உடம்பினில் எங்கும்.
அதிரவே கூவினேன், அகன்றான் விரைவில்.

**சேகரன்**

ஆகா! பித்தனே ஆயினனோ அவன்?
சாகா தின்றுநீ தப்பினை நன்மையே!
கொலையெனும் துணியும் கொடியவக் கைதவன்
தலையை வாங்குவேன் தக்கணம், நேர்வனேல்.
இந்தநல் லிருளில் எங்குபோந் தனனவன்?
சிந்தனை செய்யேல் செல்வனே கேசவா!
இப்பெரு நாட்டினில் எங்கவன் இருப்பினும்,

கப்பியே பிணித்திவண் கடிதில் கொணர்வோர்க்
காயிரம் மோகரா அளிப்பதாய்க் கூறிப்
பறைகள் சாற்றிடப் பணிப்பேன் இக்கணம்.
தப்பான் இனியவன் ; தணப்பான் உயிரையே.
செல்வோம் வருவாய்; சீக்கிரம் ஏகுவோம்.
கொல்லக் குரிசிலர் ஒல்லையில் இத்தலம்
வருவதாய் வரைந்து நிருபம் விடுத்துளார்.
அவரொடு கமலினி அரசியும் நண்ணுவாள்.
இந்நகர் அன்னவர் எல்லையுள் இருப்பது.
துன்னுவ தெதற்கென அறிகிலேன்; துன்பமோ
நன்மையோ யாதுகொல் நண்ணுமோ! ஆயினும்
புதியவித் தலைவரைப் போற்றியெம் மனைதனில்
உபசரித் துண்பித் துவப்புடன் பேணுவோம்.

[குலசேகரனும், கேசவனும் வெளிப்பட, எதிரில் கமலினியும், கொல்லத்தரசனும் ஏவலருடன் வருகின்றனர்.]

**குலசேகரன்**

வருக வருக அதிபரே வருக!

**கேசவன்**

வருக வருக தலைவியே வருக!

**கொல்லன்**

அமைச்சர் ஏறே! அறிந்தேன் செய்திகள்!
மாதவன் இத்தகைக் கைதவன் ஆவனோ!
தூர்த்தனைக் காட்டுமின் ; துரத்துவேன் மனப்பேய்!

**கமலினி**

சீர்த்தியி லோங்கிய சீயமே ரமைச்சரே!
முதியவன் இத்தகைப் புதுமைகள் புரிவனோ!
என்னே மனநிலை! ஏனிது நிகழ்ந்தது!
முன்னே அன்னவன் மொழியான் எதிர்சொ
ஏனவன் இங்ஙனம் திரிந்தனன் இதற்குள்?

**குலசேகரன்**

அன்னையே! ஐயனே! அன்னவன் வன்செயல்
என்மனம் பிளந்தது ; இடிந்ததென் னிதயம்.



முதுமையின் முடிவினில் மூண்டதே துயர்க்கனல்!
இதுவெனைக் கொல்லும்; இனியான் உய்யேன்.

**கொல்லன்**

முன்னவன் எத்தகை மோசம் கருதினும் ;
பின்னவன் பேணிவன் பெரிது மன்புடன் ;
உண்மையா யகலா தொழுகி யென்றுநும்
அண்மையி லிருந்ததோர் அரியநற் செயலாம்.

**கேசவன்**

அரசே! அதுவென் அறமே அல்லவோ!

**குலசேகரன்**

புரவல! மாதவன் புரிந்தவித் தீமைகள்
தடுக்க முயன்றவித் தநயனை வெருட்டி
வெடுக்கென வாளினால் வீட்ட வெண்ணினன் ;
சற்றிவன் அகலவே, தப்பினன் உயிரொடு.
பெற்றனன் காணீர் பெரும்பல புண்தமை.

**கொல்லன்**

வஞ்சக னவன்றனை வதைப்பதே உரியதாம்.
சஞ்சல மகற்றுவீர் ; சார்ந்தபல் லூர்களில்
எங்கவ னிருப்பினும் எய்திக் கொணர்ந்து
இங்கினி எத்தகை இன்னலு மியற்று
விதமாய் நடத்துமின் ; வியந்தேன் கேசவா!
முதியனின் றுதையார்க் குதவினை நன்றே!
அன்பும், வாய்மையும், ஆண்மையும், யூகமும்
நின்பால் கண்டேன் ; நீஇனி எம்முடன்
வதிதற் குரியவன் ; வழங்கினேன் அமைச்சன்
பதவியை நினக்குயான் ; பகருவாய் நின்மனம்.

**கேசவன்**

உத்தர வின்விதம் உரியன புரிவேன் ;
சத்தியம் தவறேன் ; சரியேன் வாய்மையில்.

**குலசேகரன்**

நன்மையும் பெருமையும் நல்கினீர் பெரிதும்.
புன்மையன் கைம்மா றென்செயல் ஆற்றுவேன் ;

என்று மறவேன்; நன்றுநீர் உய்யவே
பப்பநா பன்ருள் பற்றி இறைஞ்சுவேன்.

**கமலினி**

கங்குலே நிறைந்தவிக் காரிர வகணியில்
இங்குயாம் விரைவில் ஏகிய நிமித்தம்
என்னென உரைப்பேன்; இதனைநன் ருேர்ந்துநீர்
நன்னலம் தெளிந்து நவில்வீர் உரியன.
தாதையும் பார்ப்பதிக் கோதையு முரணினர்;
பூசல் புரிந்திரு நிருபம் போக்கினர்.
யோசனை கண்டிலேம்; உள்ளனர் தூதுவர்.
யாதென மறுமொழி ஓதுவீ ராய்ந்துநீர்.
இதற்கென வேயாம் ஏகினம் இங்ஙனம்.

**குலசேகரன்** (கடிதங்களைப் பெற்றுப் படித்தபின்)
இதுபெரும் விந்தையே! இங்ஙனம் நிகழுமோ!
ஐயகோ தீமையே! ஆய்வோம் இதையாம்.
செய்வோம் உரியன; சிறியவென் குடிலைநீர்
அரண்மனை யாக்கியுண் டகமகிழ்ந் தயருவீர்.
இரவெலா மெண்ணி வை கறைதனில் இயம்புவேன்.
[எல்லோரும் குலசேகரன் மாளிகையை அடைகின்றனர்]

## இந்தக் காட்சியின் விஷயச் சுருக்கம்

[குலசேகரன் மாளிகையில் கேசவன் தனக்குத்தானே எண்ணமிடுகிருன். தான் நினைத்தபடி காரியங்கள் நிகழ்ந்து விட்டனவென்றும், தன் மொழியைக் கேட்ட தந்தை மூத்தவன்மேல் வைத்திருந்த பேரன்பை மறந்து, அவன் இருந்த இடத்தைச் சுற்றிப் பல காவலரை நிறுத்தி இருக்கிருனென்றும், இனி தான் செய்யவேண்டியது சொற்பமே என்றும் நினைத்து ஒரு யுக்தியை மனதில் எண்ணிக்கொண்டு, மாதவனிடம் போய், அந்த விடுதிக்கு வெளியில் பல ஆள்கள் இருப்பதாகவும், மறுநாள் காலையில் அவர்கள் அவனைத் தாக்க எண்ணுகின்றனர் என்றும், அப்போது இருள் அதிகமாயிருப்பதால், உடனே வெளிப்பட்டு ஓடி எங்கேயாகிலும் தொலைவான இடத்திற்குப் போய்விடும்படியும் கூறுகிருன். அப்போது குலசேகரன் சற்றுதூரத்தில் வருகிருன். கேசவன் மாதவனைத் தூண்டி, இருவரும் சண்டை செய்வதுபோல் நடித்து, இடையில் ஓடிப்போகும்படி செய்துவிட்டு, தன் உடம்பில் தானே இரத்தக் காயங்களை உண்டாக்கிக் கொள்ளுகிருன். குலசேகரன் அங்கு வர, கேசவன் தன் காயங்களைக் காட்டி, தான் மாதவனுக்கு புத்திமதி சொல்வதற்காக வந்ததாகவும், அவன், தந்தையைக் கொன்றுவிட வேண்டுமென்று வற்புறுத்தியதாகவும், தான் மறுக்க, அவன் தன்னையே வெட்ட முயன்றதாகவும், தான் கூச்சலிட்டதாலும், தந்தை வந்ததைக் கண்டும் மாதவன் ஓடிவிட்டதாகவும் கூறிப் பரிதவிக்கிருன். குலசேகரன் தான் முயற்சி செய்து, மாதவனைப் பிடித்துவரச் செய்து, அவனுடைய உயிரை வாங்குவதாகக் கூறி, அவனை சமாதானப்படுத்தி, கொல்லத்து அரசனும் கமலினியும் கொஞ்சநேரத்தில் வரப்போவதாய்க் கடிதம் வந்திருப்பதால், உடனே மாளிகைக்குப் போகவேண்டுமென்று கூறி அவனை அழைத்துக்கொண்டு போகிருன். கொல்லத்தரசனும், கமலினியும் வருகின்றனர். மாதவனுடைய காரியங்களைத் தாங்கள் தெரிந்துகொண்டதாகக் கூறி, அதைப் பற்றி வியப்போடு விசாரிக்கின்றனர். குலசேகரன் சில விவரங்களைக் கூற, மாதவனைப் பிடித்துத் தக்கபடி நடத்தும்படி அவர்கள் கூறி, கேசவனைப் புகழ்ந்து அவனைத் தங்களுடைய மந்திரியாக நியமிக்கின்றனர். பிறகு, தாங்கள் அவசரமாய் வந்ததன் காரணத்தைக் கூறுகின்றனர். சேரனும், பார்ப்பதியும் சண்டையிட்டு, தங்களுக்கு தனித்தனி கடிதம் எழுதியிருப்பதாகவும், அவைகளுக்குத் தக்க மறுமொழி எழுதவேண்டுமென்றும், அதற்காக குலசேகரனது ஆலோசனையைக் கேட்க வந்ததாகவும் கூறுகின்றனர். குலசேகரன் கடிதங்களைப் பார்த்துவிட்டு, இரவு முழுதும் யோசித்து காலையில் சொல்வதாய்க் கூறி, அவர்களை உபசரித்துத் தன் மாளிகையில் இருத்துகிருன்.]

## காட்சி—2

[குலசேகரனுடைய மாளிகையில் ஓரிடத்தில்
பப்பநாபனும், சங்கரனும் சந்திக்கின்றனர்.]

**பப்பநாபன்**

இங்கும் வந்தையோ இச்சகப் பேதையாம்,
சங்கரப் பதரே? சார்ந்ததேன் இத்தலம்?

**சங்கரன்**

யாரடா என்றனை அறிந்தவன் போலநீ
கூறிடா மொழிதமைக் கூறினை இடும்பனே!

**பப்பநாபன்**

இத்தகை விரைவினில் என்றனை மறந்தையே!
பித்தனே! இழிந்திடு பேயினும் கொடியனே!
கூலிக்கு வஞ்சகம் புரிந்திடு குண்டகா!
நீலியின் தூதனே! நீசனே! கள்வனே!
மறப்பையோ உதைகளை, மறக்கினும் அடிகளை.
பறைப்பாம் பாதலால் பகர்ந்தையோ பொய்ம்மொழி.
இன்னலை மறந்தநீ நன்னரை நினைப்பையோ!
வன்னெஞ் சனுமுனை வதைக்கிறேன் பாரிதோ.
[பப்பநாபன் சங்கரனை அடிக்கிறன்.]

**சங்கரன்**

ஐயகோ, என்றனை அடிக்கிறான், கொல்கிறான்.

**பப்பநாபன்**

பையலே, மொழிந்தால் பற்களைத் தட்டுவேன்.
மன்னவர் மன்னனை மசகமே யாக்கினை.
அன்னவர் பணிகளை அற்பமா யெண்ணினை.
நின்பெரும் அரசியின் நிலைமையும், மாண்பும்
மன்தரும் பிச்சையாம். மாபெரும் முதியரை
உணவிலா தொறுத்தனை ; உரையா விகழ்ந்தனை.
குணமிலாள் கூட்டைநீத் தேகினும் கூடநீ
கொணர்ந்தையோ கொள்ளியைக் குண்டனிக் கொடி
உற்றவர்க் குதவாப் பற்றிலா நெஞ்சனே, [யனே!



மற்றவர் ஈவது மறித்திட உற்றையோ!
போக்குவே னின்னுயிர் புண்ணிய மாமது!
[சங்கரனை மேன்மேலும் அடிக்கிறன்.]

**சங்கரன்**

ஐயகோ! அப்பனே! அம்மையே! கொல்கிறான்!
நையப் புடைக்கிறான்! நண்ணுவீர், காப்பீர்.
[கொல்லத்தரசன், கமலினி, குலசேகரன் முதலியோர் வரு
கின்றன

**கொல்லன்**

பூசலிஃ தென்னையோ! போர்க்கள மோவிது!

**பப்பநாபன்**

அடித்தேன் பாரிதோ; குடித்தேன் நின்உயிர்.
[பப்பநாபன் அப்போதும் சங்கரனைக் குத்திக் குமைக்கிறன்

**கமலினி**

பற்றுமின் இவர்தமை; முற்றுமின் பொருதலை.

**கொல்லன்**

இனிப்போர் புரியின் இழப்பீர் உயிரையே!
இனிபுடைப் பவனையான் எமனுல கேற்றுவேன்.
என்னைகொல் நிமித்தம்? இருவரும் குக்கலோ?

**கமலினி**

துன்னிய இருவரும் தூதுவர் அல்லரோ!

**கொல்லன்**

சச்சர வென்னையோ சாற்றுவீ ருடனே!

**சங்கரன்**

ஐயனே, உயிர்ப்பே அடங்கிய தடிகளால்.

**பப்பநாபன்**

மெய்யினில் சூரனீ! மிகுபல குத்துகள்
பெறுவதில் எத்தகைப் பீடுநீ காட்டினை!
அய்யனை யாக்கிலன்; நையலன் செய்தனன்.

**கொல்லன்**

நையல் வினைஏனோ சமைப்பவன் மனிதனை?

**பப்பநாபன்**

மெய்ய,விம் மடையனுக் குட்புறம் வெறுமையாம்.
வெளிப்புறம் பெற்றனன், வேசையின் மினுக்குபோல்.

**கோல்லன்**

இருவரும் இங்ஙனம் மருவிய நிமித்தமென் ?

**சங்கரன்**

வாளா இருந்தேன் வயதில் முதிர்ந்தையால்.
மீளா உலகை மேவுவாய் இன்றேல்.

**பப்பநாபன்**

சித்திர வீரனே, செப்பினை சித்திரம்.
வேசையின் மேனியன் வேசையே சொல்லினும்.

**கோல்லன்**

அறிவிலா மூடனே, அறிகிலை போனுநீ
மரியாதை யென்பதே! மனிதனோ, விலங்கோ ?
பூபதி இருப்பது பொருட்டே இல்லையோ !

**பப்பநாபன்**

கோப மெதைத்தான் குணிக்கும் மகிபரே !

**கோல்லன்**

முனிந்ததேன் இருவரும் ? மூண்டதேன் கடும்போர் ?

**பப்பநாபன்**

கனிந்தநன் மொழிதரும் கடையனிப் பாதகன்
நாணய மென்பதே நயவாக் கிராதன் !
காணவே என்மனம் கதித்தது முனிவினால்.
நகரைக் கொளுத்துமோர் நாதனை மெத்தவும்
புகழ்ந்து தீயினைப் பொருந்தநல் கமாத்தியன்.
காலம் கருதிக் கழன்றதற் குரியபல்
கோலம் ஏற்றிடும் குணம்பெறு மிச்சகன்.
உயர்ந்தவர், முதியோர், உறவோர் என்பதாம்
பயமிலா தன்னவர் பற்றிலா மகட்கு
முற்றிலும் வெறுப்பையே மூட்டிப் பகைமையும்,
செற்றமும் கொண்டிடச் செய்யுமோர் கண்டகன்.



எரியும் கனலில் இழுதைப் பெய்பவன்.
திரியும் தலைவன் எங்ஙனம் செல்லினும்
கருத்தறி யாதவன் கால்களைத் தொடரும்
சிரித்த சுணங்கன் செப்பரும் புன்மையன்.
காற்றிற் கிணங்கவே தூற்றிப் பிழைப்பவன்.
கூற்றனே நின்முகம் காணக் கூசினேன்.
என்னைநீ என்முக நோக்கி இளிக்கிறாய் ?
சங்கரப் பித்தனே ! பொங்கினேன் சினத்தால்.
இங்கிவர் இல்லையேல் ஏற்றுவேன் எமன்பால்.

**கோல்லன்**

எத்தகை யதிசயம் ! எங்ஙனம் ஏசினன் !
பித்தம் பிடித்ததோ ? பேசவ தறிந்தையோ ?

**குலசேகரன்**

யாதிவன் புரிந்தனன் அறைகுவாய் தெள்ளிதில்.

**பப்பநாபன்**

ஓதுதல் ஏனோ ? உற்றிடு மிவன்முகம்
ஒருவித அகந்தையை உதவலைக் காணீர்.
உரையே னதையும் உண்மை யலாததை.
வீட்டிய நாட்களில் இங்குள வியன்முகம்
காட்டினும் உயர்ந்தவாம் பன்முகம் கண்டுளேன்.
அவத்த முரைக்கின் அங்குயான் வாழ்ந்த
தவத்தமே யாகுமால் அறைந்தன குணிமின்.

**கொல்லன்**

உன்றனை யொத்தபல் போலியை யோர்ந்துளேன்.
நின்மொழி கேட்டதை நிசமென மெய்ச்சினின்
இறைவன் புகழ்ந்ததா விறுமாந் தெங்கணும்
அறைவதை யோரா தகந்தையே மொழிகிறாய் !
இத்தகை இடும்பரை எண்ணிலார் கண்டுளேன்.
சத்தியம் புகல்வதாய்ச் சாற்றுதுந் தன்மையான்
நன்கே யுணர்ந்தேன் ! நவிலேல் தீயனே !

**பப்பநாபன்**

எவன்மொழி வாய்மையென் றெண்ணிநீர் பரிவதோ
அவனே வஞ்சகன் ; அவன்மொழி செயல்களே

மோசமா மறிகுவீர். முற்றுமே வாய்மையைப்
பேசிய வென்மொழி பிழையா தென்றும்.
பொய்மை இனிக்கும், புளிக்கும் வாய்மை.
மெய்யுடை யொருவன் விளம்பமாட் டாமையால்
பொய்யே யாகும் புகன்றன யாவும்.
பொய்யுடை யொருவன் புகல்வன் மையினுல்
மெய்யே யாகும் விளம்பிய புளுகெலாம்.

**கொல்லன்**

மெய்யும் பொய்யும் மிகஉணர் இவன்பால்
செய்பிழை யாதோ செப்புநீ சங்கரா.

**சங்கரன்**

ஒன்றையும் செய்திலேன் ஓங்கலே கேண்மின்.
அன்றொரு தினநம் அதிபராம் சேரமான்
ஏதோ வென்பால் பிழையால் எண்ணி
ஓதாப் பெருஞ்சினம் உற்றெனை அடித்திடச்
சித்தம் கொண்டனர்; சேர்ந்தனன் இவனும்.
மொத்திய அவர்பால் மூட்டினன் பெருங்கனல்.
எற்றினன், வீழ்த்தினன், என்றனை உதைத்தனன்;
பெற்றனன் அவரிடம் பெரும்புகழ் அதனுல்.
அப்பெரும் அகந்தையே காட்டினன் இங்கணும்;
செப்பினன் இழிமொழி; திரும்பப் புடைத்தனன்.

**பப்பநாபன்**

ஒன்றையு மறியாத் தூயவ னைத்துநீ
நன்றே மொழிந்தாய் நாணிலாப் பேதையே!

**கொல்லன்**

பாரிதோ கணத்தில் படிகிற திடும்பு.
யாரடா ஏவலன்? அசையா விதமாய்த்
தொழுவினில் இந்தத் துடுக்கனை மாட்டுவீர்!
இழிவு ராளெனக் கேட்டேன் கமையொடு.
முரட்டுப் பித்தன் முடியாப் பிதற்றன்.
புரட்டன் தனக்குயான் புகுத்துவேன் நன்மதி.

தமிழ்நாடு
199442


# தமிழ்ப்பெருமாட்டி

**ஆசிரியர் வடுவூர் - கே. துரைஸாமி ஐயங்கார் B. A**

இது மாத மொருமுறை வெளியாகும் பத்திரிகை. இதன் இரண்டாவது ஆண்டு 1935-ம் வருஷம் மே மாதம் முதல் ஆரம்பமாகிறது. இதில் ஒரு தொடர் நாவலும், சௌகரியத்திற்குத தக்கபடி, இதர விஷயங்களும் வெளி யாகும்.

| | உள் நாடு | அயல் நாடு |
|---|---|---|
| வருஷ சந்தா ... | ரூ. 2 0 0 | ரூ. 3 8 0 |
| தனிப் பிரதி ... | ரூ. 0 3 0 | ரூ. 0 6 0 |

(1) சந்தாத் தொகையை முன் பணமாக மணியார்டர் மூலம் அனுப்பவேண்டும்; அல்லது நேரில் செலுத்தவேண்டும். வி. பி. தபால் மூலம் சஞ்சிகைகளை அனுப்பினுல் தபாற் செலவு அதிகமாவ தால், வி. பி. மூலம் சஞ்சிகைகள் அனுப்பப்படுவதில்லை.

(2) சந்தாதாரர் இவ் வருஷத்திற்குள் எப்போது சேர்ந்தாலும், இவ்வருஷ ஆரம்பத்திலிருந்து எல்லா சஞ்சிகைகளும் அனுப்பப்படும்.

(3) இது ஒவ்வோர் இங்கிலீஷ் மாதமும் 10உ யன்று வெளி யாகும்.

(4) விளம்பரக் கட்டண விகிதம் தெரியவேண்டுமானுல், கடி தம் எழுதி, அல்லது, நேரில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

(5) எல்லா இடங்களிலும் விற்பனைக்கு ஏஜண்டுகள் தேவை. நிபந்தனைகளுக்கு எழுதவேண்டும்.

**வடுவூர் - கே. துரைஸாமி ஐயங்கார் B. A**

**2-30, செங்கல்வராய முதலி தெரு,**

**திருவல்லிக்கேணி, சென்னை.**